# பஞ்ச கலசம்




ஓய்வு நிலை அதிபர்

## உயர்திரு. அ. பஞ்சலிங்கம்

அவர்களின்



## பவளவிழா வெளியீடு

வாழ்க வளமுடன்

# பஞ்ச கலசம்

கொக்குவில் இந்து யாழ் இந்துக்
கல்லூரிகளின் முன்னாள் அதிபர்

**உயர்திரு.அ.பஞ்சலிங்கம்**

அவர்களின்

# பவளவிழா மலர்

பவளவிழாச் சபை
கொக்குவில் இலங்கை,
08.01.2011


"என்கடன் பணிசெய்து கிடப்பதே"



உயர்திரு.அ.பஞ்சலிங்கம்

Bsc, Dip in Edu, IDEPA (New delhi) SLEAS II

பவளவிழா நாயகர் துணைவியாருடன்




வாழ்க வளமுடன்

பவளவிழாச் சபை

## பொது நிகழ்வில் பவளவிழா நாயகன்
## உயர்திரு ந. பஞ்சலிங்கம் அவர்கள்....









# பஞ்ச கலசம்
# பவளவிழா மலர்

கொக்குவில் இந்து யாழ் இந்துக்
கல்லூரிகளின் ஓய்வு நிலை அதிபர்

**உயர்திரு.அ.பஞ்சலிங்கம்**

அவர்களின்

பவளவிழாச் சபை யாழ்ப்பாணம்.

**2011**

ஞானதிருக்கேதீஸ்வரன்
சி.செந்தில்குமரன்
மலர் ஆசிரியர்கள்


"என்கடன் பணிசெய்து கிடப்பதே"

| | | |
|---|---|---|
| மலரின் பெயர் | : | பஞ்சகலசம் |
| வெளியீடு | : | பவளவிழாச் சபை |
| முகவரி | : | கொக்குவில் இந்துக் கல்லூரி, |
| | | கொக்குவில், இலங்கை. |
| மலர் ஆசிரியர்கள் | : | ஞான.திருக்கேதீஸ்வரன், சி.செந்தில்குமரன் |
| முதலாம் பதிப்பு | : | 2011 தை மாதம் 8ஆம் திகதி |
| அச்சகம் | : | அன்ரா டிஜிற்றல் பிறிண்ட், |
| | | யாழ்ப்பாணம். இலங்கை |

# பவளவிழாச் சபை



இருப்பவர்கள் (இடமிருந்து வலம்) : திரு.இ.சிறீகாந்தன், திரு.ஞா.திருக்கேதீஸ்வரன், பேராசிரியர் க.தேவராஜா, திரு.அ.அகிலதாஸ், திரு.இ.செல்வநாதன்
நிற்பவர்கள் (இடமிருந்து வலம்) : திரு.செ.சண்முகசுந்தரம், திரு.த.பிருதிவிராஜ்,திரு.சி.செந்தில்குமரன்.



# 75 ஆவது அகவை நிறைவு

சாந்த குணம் படைத்த சிறந்த நல்லாசன்
ஆவல் மீதுர, அன்பு அகத்தூர – பவளவிழாவின்
தேவை மிக உணர்ந்து திரண்டிடும் சமூகமாய்
சேவைக்கு நாமெடுக்கும், பாராட்டு விழாவாகும்

பவளவிழாச்சபை

# பவளவிழா நாயகனுக்கு நிதியத்தினரால் அவரது சேவையைப் பாராட்டி கௌரவித்து வழங்கப்பட்ட வாழ்த்து மடல்

அப்பாத்துரை இரத்தினம்மா தம்பதியினரின் அருந்தவப் புதல்வனே!
பரமேஸ்வரி அம்மையாரின் இல்லற வாழ்வின் இணைபிரியா துணைவனே
பொதுப்பணியே பொற்பணி என்ற தாரகை மந்திரத்தை பற்றோடு,
மனதிருத்தி பணி தொடரும் கொக்குவில் இந்துவின் மைந்தனே!
பவளவிழா காணும் பைந்தமிழின் தலைமகனே நீயென்றும்,
அவனியிலே சிறப்போடு வாழ வாழ்த்துகின்றோம் வாழ்த்து

கல்வி கடல்தனிலே கரை கண்ட பெரியவரே!
கொக்குவில் இந்துவின் குளிர்மைக்கு உரித்தான உயர்ந்தவரே!
சத்திய வாழ்க்கையில் சரித்திரம் படைத்துயர்ந்த உத்தமரே!
இத்தரை என்றும் உங்கள் நினைவுகளை சுமந்தே நிற்கும்
முத்திரை பதித்த தங்கள் சமூக சமய பணிமென்மேலும் சிறக்க
வாழ்த்துகின்றோம் வாழ்த்து

கற்றவர்க்கு எங்கும் சிறப்பென்ற தத்துவத்தை மாணவர் மனங்களிலே,
பற்றோடு கூறி பணி தொடர்ந்து அதிபராய் உயர்ந்த நல்லவரே
உற்றாரும் மற்றோரும் சமனென நினைந்து பணி தொடர்ந்த நல்லவரே
முற்றத்து மல்லிகையாய், மணம்பரப்பி அறிவுப் பசிதீர்த்த வள்ளலே
வற்றாத ஊற்றாய் தங்கள் சேவை சிரிக்க பற்றோடு பிறந்த நாள்
வாழ்த்துக்கூறுகின்றோம் நாம்,

கொக்குவில் இந்துவின் பழைய மாணவ சங்கத் தலைவனே!
கொக்குவில் மக்கள் நலன்புரி நம்பிக்கை நிதியத்தின் போசகரே!
எல்லாரும் எல்லா வளத்தோடும் வாழ நினைக்கும் உங்கள் நல்மனதை
சொல்லால் வடிப்பதற்கு வார்த்தைகளை கோர்த்து அழகு பார்த்தாலும்
நல்லார் பஞ்சலிங்கம் நாமம் சொல்வதிலே ஓர் இன்பம் – அவர்
எல்லா வளத்தோடும் சிறந்து வாழ்வதற்கு வாழ்த்துகின்றோம் வாழ்த்து

இ.செல்வநாதன் J.P
தலைவர்

இ.ஶ்ரீகாந்தன்
பொருளாளர்

செ.சண்முகசுந்தரம் J.P
செயலாளர்

நிதிக்காப்பளார்கள்
எம்.உமாகரன் (கனடா)
கே.சிவசுப்பிரமணியம் (கனடா)
எம்.ராஜாமகேந்திரன் (கனடா)

போசகர்: அ.பஞ்சலிங்கம் (ஓய்வு நிலை அதிபர்)
மா.சுப்பிரமணியம் (ஜன உபகாரி)
பி.வேதநாதன்
திருமதி.மங்களகௌரி தயாளநேசன் (அதிபர்)

கொக்குவில் மக்கள் நலன்புரி நம்பிக்கை நிதியம்
கொக்குவில்.

# பொருளடக்கம்

| | |
|---|---|
| பவளவிழா நாயகனுக்கு நிதியத்தினரால்.... | iii |
| பொருளடக்கம் | iv |
| அருளாசிச் செய்தி | 01 |
| ஆசிச்செய்தி | 02 |
| செஞ்சொற்செல்வரின் வாழ்த்துரை | 03 |
| தலைவரின் வாழ்த்துச் செய்தி அர்ப்பணிப்புள்ள சமூக சேவையாளன் | 04 |
| மலராசிரியர்களின் இதயத்திலிருந்து... | 06 |
| வாழ்த்துச் செய்தி கல்வி அமைச்சின் செயலாளரிடமிருந்து...... | 08 |
| வடமாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி | 09 |
| றோட்டெரியன் திரு.ஈ.சரவணபவான் அவர்களின் வாழ்த்துச் செய்தி | 10 |
| வாழ்நாள் சாதனையாளர் | 11 |
| ஒப்பற்ற கல்வியாளன் – சமுதாய சான்றோன் ..... | 12 |
| யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளரின்...... | 15 |
| உயர்திரு அப்பாத்துரை பஞ்சலிங்கம் அவர்களின் ....... | 16 |
| நுண் அறிவுடன் அரும்பணியாற்றும் கல்விச் சித்தன் | 18 |
| தனியாத கல்விப்பணித் தாகமுடையோன் ....... | 19 |
| அரிதினும் அரிது | 20 |
| நான் பார்த்த பஞ்சமுகம் – நம் பெருமைக்குரிய ........ | 21 |
| வாழ்த்துச் செய்தி | 24 |
| கல்லூரி அன்னையின் வளர்ச்சியில் | 25 |
| முன்னாள் அதிபர் திரு.பொ.கமலநாதன் அவர்களின் ........ | 26 |
| பவளவிழா காணும் என் ஆசிரியர் பற்றி....... | 28 |
| எம் முன்னாள் அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் | 29 |
| 75ஆவது அகவை பூர்த்தி செய்யும் எமது ஆசானுக்கு இதய ....... | 30 |
| Panch the Silent Achiever | 31 |
| Happy 75th Birthday | 33 |
| Wish you a Happy Birthday | 34 |
| S. Ratnapragasam | 35 |
| Tribute to Mr A.Panchalingam in his ......... | 40 |

| | |
|---|---|
| வாழ்த்துகின்றோம் பழைய மாணவர்கள் ஐக்கிய இராச்சியம் ....... | 41 |
| வழிகாட்டியை வாழ்த்துகின்றோம் | 42 |
| பவளவிழா காணும் | 43 |
| நுண்ணறிவுக் கனலோனே, நூலோரின் கனவானே | 44 |
| கொக்குவில் மத்தியின் ஆசிச்செய்தி | 45 |
| அகவை எழுபத்தைந்தை அடைந்த என் ஆசான் | 46 |
| ஜேர்மனி வாழ் பழைய மாணவர்களின் வாழ்த்துச் செய்தி | 48 |
| தரணியில் வாழ்க நீடூழி | 49 |
| கொக்குவில் இந்து அன்னையின் சரித்திரம் | 51 |
| தோணியாகித் தோள் கொடுத்தாய்! | 53 |
| கொக்குவில் தந்த தவப்புதல்வன் | 54 |
| கல்விச்சகத்குரு சகசோதி வாழ்க! | 62 |
| கொக்குவில் இந்துவின் வரலாறு விரிக்க வந்த செம்மல் | 63 |
| பஞ்ச ஆயுதம் | 67 |
| அன்பின் ஆசிரியர் அவர்களே! | 69 |
| அன்பான அதிபர் பஞ்சலிங்கம் அவர்களே! | 70 |
| யாழ். இந்துக் கல்லூரியின் ஒளிவிளக்கு | 71 |
| கல்வியின் கலங்கரை விளக்கம் | 73 |
| உயர்திரு.அ.பஞ்சலிங்கம் அவர்கள் | 75 |
| பாடசாலை நிர்வாகத்தின் பணிவும் துணிவும் | 76 |
| பொ.நிரூபன் தரம் 11 அனுமதி | 80 |
| தண்டனையும் பரிகாரமும் | 82 |
| ஆசிரியர்களின் தகைமையிலேயே | 86 |
| ஒழுங்கற்ற அகச் சூழலிலே.....! | 88 |
| தனியார் கல்வி நிறுவனங்கள் சூழ்நிலைக்கேற்ப | 92 |
| முன்பள்ளிக் கல்வியின் அவசியம் | 95 |
| உயர்திரு.அ.பஞ்சலிங்கம் அவர்களின் | 97 |
| பவளவிழாச் சபையின் நிறைவுரையாக.. | 99 |
| பவளவிழா அழைப்பிதழ் | 100 |

# அருளாசிச் செய்தி



அன்புசார் பெருந்தகையோர்க்கு,

அதிபர் திரு.அ.பஞ்சலிங்கம் அவர்களின் 75 ஆவது அகவை நிறைவையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். ஆசிரியராக, அதிபராக, யாழ்ப்பாணத்தின் இரு பெரும் கல்லூரிகளின் அதிபராக (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி) கல்விப் பணியில் தனக்கென ஒரு இடத்தினை வகித்துக் கொண்ட திரு.அ.பஞ்சலிங்கம் கல்விச் சமூகத்தினருக்கும், ஏனைய சமுதாயத்தினருக்கும் நிறைவான பணியை ஆற்றியவர். நிறைவான கல்வி, எடுத்த விடயத்தை நிறைவாக ஆற்றும் நிர்வாகத் திறன், சமயம், சமுதாயம் போன்ற நற்பணிகளை சிறப்பாகச் செய்தமை எல்லோரையும் மகிழ்விக்கின்றது. ஓய்வு நிலையிலும் சமூக நற்பணிகளில் பல சமூக அமைப்புக்களில் இணைந்து அவற்றினூடாக ஆற்றிவருவது பெருமைக்குரியதாகும். எளிமையான பேச்சு, செயற்றிறன் அனைத்தும் கொண்ட திரு.பஞ்சலிங்கம் அவர்களின் 75 ஆவது அகவை சிறப்பித்து "பஞ்ச கலசம்" மலர் வெளிவருவது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. அதிபரின் வாழ்க்கை வரலாறு இன்றையகால ஆசிரியர், அதிபர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமையப்பெற்றது. நிகழ்ச்சியை ஒழுங்குசெய்த அன்புள்ளங்களை வாழ்த்துகின்றோம். திரு.அ.பஞ்சலிங்கம் அவர்கள் பல்லாண்டுகாலம் சுகதேகியாக வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
நல்லை ஆதீனம்.

# ஆசிச்செய்தி



பவள விழாக் காணும் முன்னாள் அதிபர் திரு.அ.பஞ்சலிங்கம் அவர்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகவும், அதிபராகவும் இருந்து ஓய்வு பெற்ற பின்னரும் எமது பாடசாலை அபிவிருத்திக்கு தன்னை அர்ப்பணித்து ஓய்வின்றி உழைத்த இவருக்கு "பஞ்ச கலசம்" என்னும் மலர் வெளியிடுவது சாலவும் நன்று.

பவளவிழாக் காணும் அதிபர் தன் குடும்பத்துடன் சீரும் சிறப்பும் பெற்று நோய் நொடியின்றி பல்லாண்டு காலம் வாழ எல்லாம் வல்ல கெஜவள்ளி மகாவள்ளி சமேத ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமியினுடைய பாதார விந்தங்களை வணங்கி எனது நல்லாசிகளைக் கூறுகின்றேன்.

சிவஸ்ரீ க. சிவதாசக்குருக்கள்
பிரதமகுரு
ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்
கொக்குவில்.

# செஞ்சொற்செல்வரின் வாழ்த்துரை

ஆற்றலும், ஆளுமையும் நிறைந்த கல்லூரி அதிபர்கள் வரிசையில் தன்நாமத்தை நிலைநிறுத்திய செயல்வீரர் அதிபர் உயர்திரு.அ.பஞ்சலிங்கம் அவர்கள். கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி வரலாற்றில் என்றும் பெருமையோடு இவர்நாமம் உச்சரிக்கப்படுகின்றது. அதிபர் சேவையிலிருந்து இளைப்பாறிய நாள் முதல் சமூகப்பணிகளில் மிகுந்த அக்கறை கொண்டு செயற்பட்டுவரும் இப்பெரியாரின் பணிகள் மெச்சத்தக்கவை. அல்லற்படும் இடம்பெயர்ந்த ஏழை மாணவரிகளின் கல்வியில் மிகவும் அக்கறை கொண்டு உழைத்து வருபவர். செல்வபுரம் முதல் வாதரவத்தை வரை தேடிச்சென்று உதவும் இவரது தொண்டு மறக்க முடியாது. தற்போது தரமான முன்பள்ளிகளை ஆரம்பிப்பதில் வெற்றிகண்டு அத்துறைசார் வளர்ச்சியில் அதீத அக்கறைகாட்டிவரும் இப்பெரியாரை நன்றிமிக்க மாணவர் சமூகம் பவளவிழா எடுத்துக் கௌரவிப்பது பாராட்டுதற்குரியது. சாவகச்சேரியில் நாம் இடம்பெயர்ந்திருந்த வேளை ஆசானின் மணிவிழா அடக்கமாக இடம்பெற்றது. இன்று பவளவிழா ஏற்பாடு செய்திருப்பது பாராட்டுதற்குரியது. எல்லாம்வல்ல துர்க்காதேவியின் திருவருளால் அதிபர் பஞ்சலிங்கம் அவர்கள் நிறைவாக பல்லாண்டு, பல்லாண்டு வாழப் பிரார்த்தித்து வாழ்த்தி அமைகின்றேன்.

ஆறு.திருமுருகன்,<br>
தலைவர்,<br>
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,<br>
தெல்லிப்பழை.

# தலைவரின் வாழ்த்துச் செய்தி
# அர்ப்பணிப்புள்ள சமூக சேவையாளன்



உயர்திரு அப்பாத்துரை பஞ்சலிங்கம் அவர்களது பவளவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். எனது ஆசானாக, சமூக சேவைக்கு வழிகாட்டிய பெருமகனாக, தலைமைத்துவத்தின் வித்தகராக, வாழ்க்கையை சமூக சேவைக்கென அர்ப்பணித்த ஒரு பெருமகனுக்கு எடுக்கப்படும் பவளவிழாவிற்கு தலைமை தாங்கும் வாய்ப்பு கிடைத்தமை ஒரு பெரும் பேறாகும். கொக்குவில் இந்துக் கல்லூரியின் சிற்பியெனப் போற்றப்படும் உயர்திரு.அ.பஞ்சலிங்கம் அவர்கள் பழைய மாணவர்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்பவர் எனக்கூறினால் அது மிகையாகாது. இக்கல்லூரியின் மாணவனாக, ஆசிரியராக, அதிபராக செயற்பட்டு அதன் வளர்ச்சியை தன் வாழ்வுடன் இணைத்துக்கொண்ட அதிபர் அவர்கள் பழைய மாணவர் சங்கத்தின் தலைவராகப் பல தடவைகள் பணியாற்றியுள்ளமை மகிழ்ச்சிக்குரியதாகும். அவரது தலைமையின் கீழ் தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் கொக்குவில் இந்துவின் பழைய மாணவர்கள் அணிதிரண்டிருப்பது மகிழ்ச்சிக்குரியதும் பாராட்டுக்குரியதுமாகும்.

உயர்திரு.அ.பஞ்சலிங்கம் அவர்கள் கல்வியுலகிற்கு ஆற்றிவரும் பணிகள் அளவிட முடியாததாகும். பணியாற்றிய காலத்தில் கல்வி சம்பந்தமான நவீன சிந்தனைகளை அறிமுகப்படுத்தியமை போன்றே இளைப்பாறியதன் பின்னரும் அவரது சிந்தனைகள் உருப்பெற்றுள்ளன. அவர் எமது பல்கலைக்கழக ஆங்கிலத்துறையின் விரிவுரையாளராக இருந்தமை மட்டுமன்றி, விஞ்ஞான பீடத்தின் பீடஅவை உறுப்பினராகவும் பணியாற்றி பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளார். அத்துடன் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் தலைவராகவும், ஆயுட்கால அங்கத்தவராகவும் தொழிற்பட்டு பிரதேச அபிவிருத்திக்கு பணியாற்றி வருவதும் அவரது கல்விச்சேவையின் தொடரேயாகும்.

எமது பெருமதிப்புக்குரிய உயர்திரு.பஞ்சலிங்கம் அவர்கள் ஏழைச்சிறார்களின் கல்வி அபிவிருத்தியில் அதிக நாட்டம் கொண்டவராவார். அகதி முகாம்களில் இலவச இரவுப் பாடசாலைகளை நடாத்தி வருவதும், இலவச மருத்துவ சேவைகளைப் பெற்றுக்கொடுப்பதையும் நான் நேரில் கண்டு வியந்திருக்கின்றேன். அதிபர் றோட்டரிக் கழகத்தின் உறுப்பினராக இருப்பதனால் அவ்வமைப்பில் பல இளைஞர்களை இணைத்து சமூக சேவையாற்றி வருவதனை எவரும் பாராட்டாமல் இருக்க முடியாது. காலத்தின் தேவைக்கேற்ப ஆங்கிலமொழி மூலமான சிறுவர் பாடசாலைகளை அமைத்து பாலர் கல்வியை மேம்படுத்தும் பல கல்விச்சாலைகளை உருவாக்கியுள்ளமை மட்டுமன்றி

அவற்றில் பயிற்றுவிக்கவென ஆசிரியப் பயிற்சிக்கான கற்கை நெறிகளை நடாத்தி வருவதும் அவரது ஆளுமையின் வெளிப்பாடேயாகும். பல்பரிமாணமுள்ள சமூகசேவையினை அர்ப்பணிப்புடன் ஆற்றிவரும் எமது பெருமைக்குரிய முன்னாள் அதிபர் உயர்திரு.பஞ்சலிங்கம் அவர்கள் பவளவிழாக் காண்பதையிட்டு மாணவர் களாகிய நாம் எல்லோரும் மகிழ்ச்சியடைவதுடன் அவர் நல்ல தேகாரோக்கியத்துடன் பல்லாண்டுகாலம் வாழ்ந்து சமூகத்திற்கு சேவையாற்ற வேண்டுமென எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

அன்புடன்
பழைய மாணவர்
பேராசிரியர் க.தேவராஜா
பீடாதிபதி,
முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# மலராசிரியர்களின் இதயத்திலிருந்து...



"நல்லாரைக் காண்பதும் நன்றே நல்லார் சொற்கேட்பதுவும் நன்றே நலன்மிக்க நல்லாரோடு இணங்கி இருப்பதும் நன்றே என்பர் நற்றமிழ் வல்லோர்"



கல்விப்புலத்திலே, செல்வப்புலத்திலே, சமூகச் செயற்பாடுகளிலே நல்லவர்கள் பல இருக்கின்றார்கள். இவர்கள் தங்கள் சொந்தசெயற்பாடுகளுக்கு அப்பாற் சென்று மெய்வருத்தம் பாராது கண்துஞ்சாது எவ்வெவர் தீமையும் கருதாது தன் நலம் மறுப்போடு பொதுப்பணியில் ஈடுபட்டு உழைக்கிறார்கள். இவர்களை வாழ்த்தி வளமூட்ட வேண்டியது சமூகத்தில் உள்ளவர்களின் பொறுப்பு என்பதில் இரு வேறு கருத்துகளுக்கு இடமே இல்லை.

இவர்களை வாழ்த்துவது வாழ்த்துபவர்களுக்கே பெருமைகளைச் சேர்க்கும் வாழ்த்தைப் பெறுபவர் மேன்மேலும் உற்சாகம் அடைந்து மேலும், மேலும் சமூகப்பணியில் முனைந்து நின்று நற்பணியாற்றுகின்ற மனப்பாங்கினால் மீண்டும் வாழ்த்திய சமூகத்தினரே பயன்பெறுகின்றனர்.

இந்த வகையில் ஓய்வுநிலை அதிபர் உயர்திரு.அ.பஞ்சலிங்கம் அவர்கள் கல்வித்துறையில் மட்டும் அல்லது பல்வேறு சமூகசேவைச் செயற்பாடுகளிலும் தன்னை அற்பணித்து சேவையாற்றி வருகின்ற பெருந்தகையாவார்.

அவரின் சேவைகளை அறிந்தவர்கள் ஆசிகூறியும் வாழ்த்துக்கள் வழங்கியும் கவிதைகள், கட்டுரைகள் எழுதியும் இம்மலருக்கு அணி செய்துள்ளீர்கள். இவற்றை விட விழாவுக்கு சிறப்புறச் செய்வதற்கான செலவுகளை மனம்உவந்து பொறுப் பேற்றுள்ளீர்கள், அன்றியும் பல நாட்களாக பவளவிழா நன்றாக அமையவேண்டும் என்பதற்காக நல்ஆலோசனை வழங்கியும், விழா ஏற்பாடுகளை தங்கள் தங்கள் சொந்தக் கருமமாக எண்ணியும், தோளோடு தோள்நின்று ஆக்கமும் ஊக்கமும் தந்துள்ளீர்கள்

மேலும் இங்கு நடைபெற்ற மலர்ஆக்கப் பணிக்கு கைகொடுத்தும் மனம் ஒன்றி தேவைப்படும் நிதியுதவி எல்லாம் வழங்கி மலர் உருவாக்கத்துக்கு பாடுபட்டுள்ளீர்கள். மலர் வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டு மலர் மணம்பரப்பவும் நுகரவும் உள்ளன்போடு உதவியுள்ளீர்கள்.

எல்லாமே ஒரு நல்ல மனிதனை வாழ்த்தவேண்டும் என்ற மனிதநேயத்தின் வெளிப்பாடாகவே நாம் கருதுகின்றோம். துன்பமும் துயரமும் நிறைந்த சூழல் என்றாலும் காலத்தினாற் செய்யப்பட்டவற்றிற்கு காலம் தவறாது வாழ்த்த வேண்டியது நமது கடமையாகும். அந்த கடமையுணர்விற்கே இந்த விழா. என்பதை அறியத்தந்து மனம்நிறைவு அடைகின்றோம்.

"என் கடன் பணி செய்து கிடப்பதே"
தன் கடன் அடியேனையும் தாங்குதல்"

மலர் ஆசிரியர்கள்.
ஞான.திருக்கேதீஸ்வரன்
சி.செந்தில்குமரன்

# வாழ்த்துச் செய்தி
# கல்வி அமைச்சின் செயலாளரிடமிருந்து......



யாழ் மண்ணில் புகழ் பூத்த ஆசிரியராக இருந்து புகழ் பெற்ற கல்லூரிகளில் அதிபராக மிளிர்ந்து பாடசாலை முகாமைத்துவத்தில் நல்ல அனுபவங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கல்விசார் அபிவிருத்தி தொடர்பான கருத்துக்களை முன்வைத்து முன்னோடியாக திகழ்ந்த அதிபர் திரு.அ.பஞ்சலிங்கம் அவர்கள் 75 ஆவது அகவையினை பூர்த்தி செய்வதனையிட்டு மனமார வாழ்த்துகின்றேன்.

சிறந்த அதிபர் தொழிலை நிறைவேற்றுவதற்கு இவர் ஆசிரியர்களுக்கு தலைவனாக நின்று வகுப்பறைக் கற்பித்தலில் ஈடுபட்டமையினால் அத்தொழிலில் இவர் சாதனை படைத்துள்ளார் என கூறுவது மிகையாகாது. இவரது கல்விப்பணி, கல்வி வழிகாட்டல் பணி என்பவற்றை யாழ் சமூகம் என்றும் எதிர்பார்த்து நிற்கின்றது.

இவர் மேலும் பல்லாண்டு காலம் வாழ்ந்து கல்விப்புலத்திற்கும், சமூகத்திற்கும் வழிகாட்டியாகவும் சிறப்பிக்க வேண்டி பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்தி நிற்கின்றேன்.

இ.இளங்கோவன்
செயலாளர்
கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு,
வடமாகாணம்.

# வடமாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



உயர்திரு அ.பஞ்சலிங்கம் அவர்களது பவளவிழாவினை முன்னிட்டு வெளிவரும் "பஞ்சகலசம்" என்ற மலரூடாக அவரை வாழ்த்துவதில் பேருவகையடைகின்றேன். "செயற்கரிய செய்வர் பெரியர்" என்ற வாக்கிற்கு இலக்கணமாக வாழ்ந்து வருபவர் இவர்.

இவர் சிறந்த ஆசிரியராக, சீரிய அதிபராக மிகக் கடினமான காலகட்டத்தில் பெரிய பாடசாலைகளை தலைமையேற்று மாணவரதும் பெற்றோரதும் நன்மதிப்பைப் பெற்றவர். இவருடன் அதிபர் சங்கம், றோட்டரிக் கழகம் போன்ற அமைப்புக்களில் இணைந்து பணியாற்றக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இப்போது இவரது மதிநுட்பம், வழிகாட்டல், சமூகப்பற்று, தலைமைத்துவம் போன்ற திறன்களை நானும் கற்கக்கூடியதாக இருந்தது.

பல்வேறு சமூக அமைப்புக்களினூடாக நலிவடைந்தவர்களுக்கும் பல பணிகள் இன்று இவரால் நிறைவேற்றப்படுவது யாவரும் அறிவீர். அதே போல் நலிவுற்ற மாணவர்களுக்காகவும் பல்வேறு கல்விச் செயற்பாடுகள் இவரது வழிகாட்டலில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

கொக்குவில் வாழ் மக்களின் தலைமகனாய் இவர் இன்று யாழ் மக்களின் பேரன்பும், பெருமதிப்பும் பெற்ற சான்றோனாகக் கணிக்கப்படுகின்றார். இவர் கல்விப்புலத்தில் ஆற்றிய ஆற்றிவரும் சேவைக்காக வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் சார்பில் நன்றி கூறுகின்றேன். இவர் சுகதேகியாக இன்னும் பல்லாண்டுகள் சமூகப்பணியாற்றி நூற்றாண்டு விழாக்காண இறையருளைப் பிரார்த்திக்கின்றேன்.


திரு.ப.விக்னேஸ்வரன்,<br>
மாகாணக் கல்விப்பணிப்பாளர்,<br>
மாகாணக்கல்வித் திணைக்களம்,<br>
வடமாகாணம்,<br>
திருகோணமலை.

# றோட்டெரியன் திரு.ஈ.சரவணபவான் அவர்களின் வாழ்த்துச் செய்தி

கற்றவர்க்குரிய ஆளுமை, கம்பீரமான தோற்றம், கவர்ச்சியான புன்சிரிப்பு, அனைவரையும் அன்புடன் அரவணைக்கும் பாங்கு அத்தனைக்கும் மேலாக எடுப்பான நடை, வயதை எண்ணிக் கணக்கிடத் தூண்டாத இளமை, சுறுசுறுப்பு, வேகம், விவேகம், குவிந்த மனிதம். எம் இனம் செழிக்க, மக்களை நேசிக்கும் மனம், மாணவர்களின் கல்வியின்பால் காட்டும் அக்கறை, மழலைச் சிறுவர்களின் மகிழ்வோடு ஒன்றிணைந்து குதூகலிக்கும் உற்சாகம், இத்தனையும் ஒருங்கிணைய அன்றும், இன்றும், என்றும் துடிப்புடன் வாழ்பவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் மதிப்புமிக்க அ.பஞ்சலிங்கம் அவர்கள்.

மனதுக்கும் செயலுக்கும் நெருக்கமான பாலம் அமைத்து, மக்களின் தேவைக்காய்த் தம்மை அர்ப்பணித்து ஊடக சுதந்திரத்திற்கு உறுதுணையாக உடலும் உள்ளமும் தூய்மை ஒளிரப் பழகும் இனியவர் பஞ்சலிங்கம் அவர்கள்.

நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனுமாய், பண்பிலே தெய்வமாய்ப் பார்வையிலே சேவகனாய் பாரதி புகன்ற சேவையாளனாக எல்லாமாய் விளங்கும் உத்தமர் பஞ்சலிங்கம் ஐயா அவர்களின் 75 ஆவது ஆண்டு நிறைவில் மனம் மகிழ நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றேன்.

றோட்டெரியன் திரு.ஈ.சரவணபவான்,
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ் மாவட்டம்.

# வாழ்நாள் சாதனையாளர்



ஒருவருடைய வெற்றியும் புகழும் அவருடைய குணாதிசயங்களின் காரணமாகவே வந்துள்ளதெனலாம். திரு.அ.பஞ்சலிங்கம் அவர்களின் முதல் எழுத்து அகரம். அறிவு, அடக்கம் என்பன அவருடைய குணவியல்பு. அவற்றின் காரணமாக புகழ் பூத்த அதிபராக உயர்ந்து நிற்கின்றார். அவருடைய இளமைக்கால நண்பர்களில் திரு.வை.கணேசலிங்கமும், நானும் உள்ளடக்கம். அவரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பும் கிடைத்தது. எதனையும் நிதானத்துடன் ஆராய்ந்து முடிவு எடுப்பது அவரது இயல்பாகும். சரியான நேரத்தில் சரியான முடிவு எடுப்பதில் வல்லவர். பிறருடைய அழுத்தங்கள் காரணமாக தன்னுடைய முடிவை அவர் மாற்றுவதில்லை. இளமைக்காலம் தொடக்கம் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் மூலம் கல்லூரியின் வளர்ச்சிக்கு பெரிதும் பாடுபட்டவர். பழைய மாணவர் சங்கத்தின் இராப்போசன விருந்துகளின் வெற்றிக்கு காரணமாக இருந்தவர்களில் இவர் குறிப்பிடத்தக்கவர். இச்சந்தர்ப்பத்தில் இவருடைய முக்கிய நண்பராகிய அமரர் குமாரவேல் பற்றிய நினைவு தோன்றுகின்றது. கல்லூரியின் அபிவிருத்திப் பணிகளில் இவருக்கு உறுதுணையாக இருந்த உத்தம நண்பன் குமாரவேல் எனலாம்.

ஓமந்தை மகாவித்தியாலயத்தில் சிலகாலம் இவர் பிரதி அதிபராக கடமையாற்றியுள்ளார். அக்காலகட்டத்தில் அக்கல்லூரியில் நானும் பணிபுரிந்தேன். அங்கும் இவரது திறமை மிகவும் போற்றப்பட்டது. இவர் முதன் முதலாக அதிபராக பொறுப்பேற்ற போது கொக்குவில் இந்து ஆசிரியர் குழாமில் நானும் இருந்தேன் என்பதில் பெருமை அடைகின்றேன். இவர் புலமைப்பரிசில் பெற்று இந்தியாவிற்கு சென்ற காலத்தில் கல்லூரியின் பொறுப்பை என்னிடமே ஒப்படைத்துச் சென்றார். அதே போல் அவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற போது மீண்டும் கல்லூரியின் பொறுப்பை என்னிடமே ஒப்படைத்தார். அவருக்கும் எனக்கும் கல்லூரியில் மதியபோசன விருந்து தரப்பட்டது. இரண்டு கல்லூரி அதிபர்களை பாராட்டி ஒரே இடத்தில் ஒரே நாளில் நடாத்தப்பட்ட பாராட்டுவிழா வரலாற்றில் இது ஒன்றுதான் எனலாம். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலிருந்து இளைப்பாறிய போது அக்கல்லூரியின் பொறுப்பை என்னிடமே தந்தார். சாவகச்சேரியில் இடம்பெயர்ந்து இருந்த காலத்தில் இது தொடர்ந்தது. சமூக சேவையிலும், கல்விச் சேவையிலும் இறைபணியிலும் அவர்பணி மேலும், மேலும் சிறந்து தொடர எல்லாம்வல்ல ஆண்டவன் அருள்புரிவாராக.

இ. மகேந்திரன்
முன்னாள் அதிபர் கொக்குவில் இந்துக் கல்லூரி

# ஒப்பற்ற கல்வியாளன் – சமுதாய சான்றோன் உயர்திரு.அ.பஞ்சலிங்கம்



எனது 43 வருட பணிக்காலத்தில் சில அமைப்புக்களில் எனது இலக்குகளை நான் மாற்றிக்கொண்டிருக்கின்றேன். மாற்றம் என்பது முக்கியமானது. இது புதிய சிந்தினைகளைப் பிறக்க வைக்கின்றது. புதிய சிந்தனை புதுமையான செயல்களுக்கு வழிவகுக்கின்றது.

ஆ.ப.ஜெ.அப்துல்கலாம்–

இந்திய தேசத்தின் முன்னாள் சனாதிபதியும், முதுபெரும் சிந்தனை யாளருமான அப்துல் கலாமின் மேற்குறிப்பிட்டவரிகளுடன் திரு.அ.பஞ்சலிங்கம் அவர்களை இணைத்துப் பார்த்துள்ளேன். பல்வேறு காலங்களில் பொருத்தமான இலக்குகளை உருவாக்கி தன்னை சமுதாய மாற்றங்களின் மையச் சக்கரமாக்கி மகிழ்பவர் இக் கல்வியியலாளர்.

இவர் எனது பார்வையில் பல வகிபாகங்கள் கொண்ட மாதிரிகை.

நல்லாசிரியர்
சிறந்த அதிபர்
நல்ல சமூக பணியாளர்
கல்வி மேம்பாட்டு செயலாற்ற வல்லாளர்

இவர் பலரது பார்வையில் பல மாதிரிகளில் தென்படுபவர். அமைதியாக அதிக வலுவுடன் உயரப் பறக்கும் கழுகு போன்ற ஆற்றல் மிக்க மனிதர் இவர். இவரது தொலைதூர பார்வைகள் அனைத்தும் இலக்கு நோக்கியதாக இருக்கும். அதை நிறைவேற்றுவதில் வேகமும் ஆர்வமும் இணைந்து காணப்படும. சலசலப்பின்றி உறங்கிக் கிடக்கும் சாகரம் போல தென்படும் இவரின் ஆழ்மனதில் எத்தனை சமூக எண்ணங்கள், எத்தனை வகையான சமூக உணர்வுகள், எத்தனைவகையான செயலாற்ற தீர்மானங்கள்! பல்நிலை செயலணிகளின் தலைவர் அவர் அனுபவங்களின் வழியாக தெளிவாக திட்டமிடும் பேராண்மையாளர் இவர் புதியன தேடுவதில் பேராசை கொண்டவர்.

பள்ளிகள், தொண்டு நிறுவனங்கள், பாலர் பள்ளிகள், இளைஞர்கள், ஆசிரியர்கள், கல்விமான்கள், பத்திரிகையாளர் என்ற பலரையும் இணைத்துக்கொண்டு இவர் செயற்படும் பண்பு சிறப்பானது. தேடலில் திளைக்கும் கண்கள் ஆழ்ந்த சிந்தினையில் மெல்ல வெளிப்படும் தெளிவான சொற்கள் பிறர் சொல்வதை அக்கறையுடன் செவிமடுக்கும் மாண்பு தீர்க்கமான முடிவுகளில் உறுதி. இப்படித்தான் எங்கள் ஓய்வு பெற்ற அதிபர் திரு.அ.பஞ்சலிங்கம் அவர்களை நான் பார்ப்பதுண்டு.

சிறந்த ஆசிரியர் அதன் பின் பெரிய கல்லூரிகள் இரண்டின் – கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி என்பவற்றின் அதிபர்இ சிறந்த ரொட்டேரியன் கொக்குவில் இந்துவின் பழைய மாணவர் – நலன்விரும்பி – வளர்ச்சியின் முனைவர், நவீன முன்பள்ளிகளின் எம்பிரதேச தலைவர் நலிவுற்றோர் – தேவைநாடி நிற்போருக்கான செயல்திட்ட வடிவமைப்பாளர் இப்படிப் பல முகங்கள் கொண்ட மேன்மையான மனிதர் இவர். ஒரு ஆசிரியர் எத்துணை பரிமாணங்களில் – எத்திசைகளிலெல்லாம் வளர முடியும் என்பதற்கு சிறந்த சான்றாதாரமாக திகழ்பவர் இவர். சுயவளர்ச்சி – தொழில் முறை வளர்ச்சி – சமூக வாழ்வு என்ற மூன்று பரிமாணங்களில் அவரது வளர்ச்சித்திட்டங்கள் பரவிக் கிடக்கின்றன. தனிமனித நிறுவனமாக அவர் செய்யும் சமுதாய சேவைகள் பலப்பல. குறிப்பாக கொக்குவில், உரும்பிராய் ஆகிய இரண்டு கிராமங்களும் இவரது சேவைக்கான சமுதாயப் பரப்புக்கள்.

தமது கல்லூரி தலை நிமிர்ந்து வளர வேண்டும் என்பதற்காக திரைகடல் ஓடி – தேசங்கள் பல சென்று நிதி தேடியவர். அவை நீதியான முறையில் பகிரப்பட வேண்டும் – பயன்பட வேண்டும் என்பதில் அவர் காட்டி வரும் ஆர்வம் அப்பப்பா! சொல்லும் தரமன்று. என்றென்றும் எண்ணி எண்ணி வியக்கத்தக்கன. வாழும் போதே சேவையாளர்களை வாழ்த்தும் பண்பாடு உன்னதமானது. இதற்கு மிகவும் பொருத்தமான பண்பாளர் திரு.பஞ்சலிங்கம் அவர்கள். அவரது செயல்களில் தூய்மை வெளிப்பட்டன. அவற்றால் கல்லூரிகள் வளர்ந்தன. சமூகம் மேன்மையுற்றது. அவர் புகழ் மனிதனாக வளர்ந்தார்.

செயலில் விளைவுகள் மீதே குறியாக இருக்கும் அவரது எச்சரிக்கையுணர்வு எனக்கு மிகவும் பிடிக்கும். நான் உண்மை மதிப்புடன் "சேர்" என அழைக்கும் மிகச் சிலரில் இவர் முதலாமவர். எனக்குப் பிடித்த அவரது தலைமைத்துவப் பண்பு தன்னைச் சார்ந்த மனிதர்களையும் நிறுவனங்களையும் எப்படி முன்னேற்றலாம் என்ற ஓய்வற்ற உணர்வும் செயலும் தான். "இளைப்பாறுதல் என்பது சமூகத்துக்காக கடினமாக உழைப்பதற்கு சடங்கு முறையான பணவருமான தொழிலிலிருந்து விலகிக் கொள்வது தான்" என்ற புதிய விளக்கத்தை தனது வாழ்வின் செய்தியாக சொல்லிவருபவர் இவர். இது இவர் மீதான என் மதிப்பை இமாலய அளவிற்கு உயர்த்தியது. இதய அறுவைச் சிகிச்சையின் பின் இருமடங்கு சமூக மனிதராக அவர் மாறினார். இதனை பலமுறை எண்ணிப்பார்த்து வியந்துள்ளேன். உயிர்வாழ்தல் என்பதன் அர்த்தத்தை அவரது வாழ்வியல் தெளிவாக புரிய வைக்கின்றது. அதை விளங்கிக்கொள்ளும் போது நாம் தெளிவான மனிதர்களாகி விடுகின்றோம்.

ஓய்வுபெற்ற பின் தான் இவர் ஆசிரியர்களுக்கு ஆங்கில மொழியில் அதிகம் கற்பிக்கத் தொடங்கினார். துண்டிக்கப்பட்ட எமது பிரதேசத்தில் வெறுமை மாத்திரம்

கொட்டிக் கிடந்த போது அவர் ஆற்றிய - ஆற்றி வருகின்ற நம்பிக்கை தரும் கல்விப்பணி மெச்சத்தக்கது. காலம் அவருக்குரிய வரலாற்றை இப்போதே எழுதத் தொடங்கிவிட்டது மேன்மையுணர்வுகளுடன்.

உடல் வயதை விட உளவயதில் நம்பிக்கை கொண்டு வாழும் சான்றோர் இவர். தன் வாழ்வு, சமூக வாழ்வு என்ற இரண்டு பஞ்சலிங்கம் என்ற நாணயத்தின் இரண்டு பக்கங்கள். இந்த நாணயம் எல்லா சமூகங்களிலும் ஓடித்திரிந்து ஒப்பற்ற பணியாற்றிக்கொண்டிருக்கின்றது.

இந்த நல்ல ஆசான் நீண்ட காலம் வாழ வேண்டும். வினையாற்றலுடன் பணியாற்ற வேண்டும். இறைவன் ஒதுங்கி நின்று வாழ்த்த வேண்டும், நாம் எல்லோருக்கும் வாழ்த்துவதற்கு இடம் தந்து, என் ஆழ்மனதின் தூய்மையான மரியாதைக்குரிய சமூக சேவையாளர் திரு.பஞ்சலிங்கம் அவர்களை வாழ்த்துவதால் நான் பெருமையடைகின்றேன்.

பேராசிரியர்.மா.சின்னத்தம்பி
தலைவர் – சட்டத்துறை
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

# யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று"

இது வள்ளுவனார் தந்த வாய்மொழி. உலகில் மனிதராய் பிறந்த யாவருமே மானிட இலக்கணத்திற்கமைய மாண்புடன் வாழ்வதென்பது அரிதாகும். மானிட இலக்கணத்துள் நின்று மண்ணின் மணிகளாக பெரும் பேறுபெறுவது சிலருக்கே வாய்க்கப் பெறுகின்றது.

இத்தகைய பெரும்பேறு பவளவிழா நாயகனாய் திகழும் திரு.அ.பஞ்சலிங்கம் அவர்களுக்குக் கிடைத்துள்ளமையையிட்டு மிகவும் பெருமகிழ்வடைகின்றேன். யா/கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபராகப் பணிபுரிந்த காலத்தில் பாடசாலையின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் அயராது பணியாற்றியும், யா ஃ யாழ் இந்துக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில், கல்லூரியின் மேம்பாட்டுக்கு உழைத்ததோடு அதிகளவான மாணவர்களை மருத்துவம், பொறியியல், ஏனைய துறைகளை பயின்று உயர் பதவிகளை பெறுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தியும் பெருமை அடைந்தவர்.

ஓய்வுகாலத்திலும் இவரின் கல்விப்பணி தொடர்ந்தது. குழந்தைகளின் கல்வி முன்னேற்றத்திற்கும், சர்வதேச மொழியின் அபிவிருத்திக்கும் அரும்பணியாற்றி வருகின்றார்.

தன்னலமற்ற கல்விப்பணி, சமூகப்பணி இரண்டினையும் இரு விழிகளெனப் போற்றி தளர்ச்சியில்லா முயற்சியோடு வீறுநடைபோடும் திரு.அ.பஞ்சலிங்கம் அவர்கள் உழைக்கும் வர்க்கத்தினருக்கும், உத்தம மாணவ குழாத்தினருக்கும் உற்றதோர் உதாரணமாகத் திகழ்கின்றார்.

இவருடைய கல்விப் பணிகளும், ஏனைய சமூக மேம்பாட்டுச் செயற்பாடுகளும் தொடர வேண்டும் என வாழ்த்துவதோடு நீண்ட ஆயுளுடன், பூரணமான மனநிறைவோடு வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

திருமதி. அருளேஸ்வரி வேதநாயகம்,
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

# உயர்திரு அப்பாத்துரை பஞ்சலிங்கம் அவர்களின் பவளவிழா வாழ்த்துச் செய்தி



கொக்குவில் இந்துக் கல்லூரியின் புகழ் பூத்த அதிபர்களின் வரிசையில் உயர்திரு.அ.பஞ்சலிங்கம் அவர்களின் வகிபாகம் வரலாற்று புகழ் மிக்கது. கல்லூரியின் மாணவனாக – நல்லாசிரியனாக – உப அதிபராக – அதிபராக உயர்ந்து கல்லூரிக்கு பெருமை சேர்த்தவர். அதுமட்டுமன்றி இன்றுவரை பழைய மாணவர் சங்க தலைவராக இருந்து கல்லூரிக்கு உழைத்து வருவது இவரது நன்றி விசுவாசத்தை எடுத்துக்காட்டுகின்றது. அதிபரின் ஓய்வுக் காலத்துடன் பணியை நிறுத்தாமல் பழைய மாணவன் என்ற உறவோடு கல்லூரிக்கு உழைப்பது கண்டு நான் பெருமையடைகின்றேன். கல்லூரியின் ஒவ்வொரு அசைவிலும் அதன் ஒவ்வொரு பரிமாண வளர்ச்சியிலும் பஞ்சலிங்கம் அவர்களின் பங்கும் காத்திரமான ஆலோசனைகளும் எமக்கு வழிகாட்டுகின்றது.

கொக்குவில் மண்ணின் மைந்தனாகப் பிறந்து கல்லூரிக்கும் சொந்த மண்ணுக்கும் ஆற்றிய பணி பாராட்டுதற்குரியது. புகழ் பூத்த இரசாயனவியல் ஆசிரியராக தன்னை வளர்த்துக் கொண்டவர். இவரிடம் கற்ற மாணவர்கள் இன்று உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் கல்லூரிக்கும் இவருக்கும் புகழ் சேர்த்து நிற்கின்றார்கள். அதிபர் பணியில் உயர்ந்து இலங்கை கல்வி நிர்வாக சேவையிலும் உள்வாங்கி கல்வி முகாமைத்துவ பயிற்சியை வெளிநாடுகளில் பெற்றுக் கொண்டவர். க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் பிரபல கல்லூரிக்குச் செல்லும் நிலையை மாற்றி இக்கல்லூரியிலேயே உயர்தரக் கல்வியை கற்பதற்கான வாய்ப்புக்களையும், வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்த பெருமை அவரைச் சாரும்.

இந்திய அமைதிப்படை எமது கல்லூரியில் தரித்திருந்த காலத்தில் மோசமான பாதிப்புக்களைச் சந்தித்தது. இவ்வேளையில் மனந்தளராது கல்லூரியை மீளக்கட்டியெழுப்புவதில் இவரது ஆளுமையும் பங்களிப்பும் காலத்தின் தேவையாக இருந்தது. வறிய திறமையுள்ள மாணவர்களை பல்வேறு துறைகளிலும் ஊக்குவிப்பதற்காக "பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியம்" என்ற அமைப்பை உருவாக்கி அதன் மூலம் பாடவிதானம், இணைப்பாடவிதானம், பரிசளிப்பு போன்ற நிகழ்வுகளுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கும் முறையை ஆரம்பித்த பெருமை இவருக்கே உரியதாகும்.

யாழ்ப்பாணத்தின் புகழ் பூத்த இந்துக் கல்லூரியின் அதிபராக பணியாற்றினார். தனது காலத்திலேயே அதிகளவான மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்ற வரலாற்றுப் பெருமையை ஏற்படுத்தினார். கல்விப் பணியுடன் மட்டும் நின்றுவிடாது சமய, சமூகப் பணிகளிலும் இவர் பங்கு மகத்தானது. வடமாகாண அதிபர் சங்கத்தலைவராக இருந்து ஆற்றிய சேவைகள் பலராலும் பாராட்டப்பட்டவை. றோட்டறிக் கழகத்தில் இணைந்து நீண்டகாலமாக இன்று வரை பணியாற்றுகின்றார். அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோருக்கான பல்வேறு தலைமைத்துவ பயிற்சிகளை வழங்கும் வளவாளராக விளங்கி வருகின்றார். கல்வி தொடர்பான கருத்தாடல்களில் இவரது பங்கும் எப்போதும், எவ்விடத்திலும் இருக்கும். கல்வி தொடர்பான பல்வேறு கட்டுரைகளை அவ்வப்போது எழுதி வந்துள்ளார். கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் காப்பாளராக இருந்து தேவையான வழிகாட்டல்களையும், ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றார்.

இத்தகைய பெருமைக்குரிய உயர்திரு.அ.பஞ்சலிங்கம் அவர்களின் கல்வி, சமூகப் பணிகள் தொடர கல்லூரியின் குலதெய்வமாகிய கிருபாகர சிவசுப்பிரமணிய சுாமிகளின் அருள் வேண்டி நீண்ட ஆயுளுடன் வாழ வாழ்த்துகின்றேன்.

அ.அகிலதாஸ்
அதிபர்
கொக்குவில் இந்துக் கல்லூரி

# நுண் அறிவுடன் அரும்பணியாற்றும் கல்விச் சித்தன்

இன்றைய பவளவிழா நாயகன் தமிழர்தம் திறமையும் தகுதியும் பொறுப்பும் போற்றப்படும் கல்விச்சித்தனாவார் திறமையும் தகுதியும் பொறுப்பும் போற்றப்படும் குணநல பலமும் ஒருங்கே பெற்ற பெருந்தகைக்குப் பவளவிழா எடுப்பது பாராட்டிற்குரியதாகும். இந்நன்நாளில் வாழ்த்துக் கூறும் வாய்ப்புக் கிடைத்ததையெண்ணி மகிழ்ச்சியில் திளைக்கின்றேன்.

முன்னாள் அதிபர் அவர்களின் முதிர்ந்த அறிவும் உணர்வும் கல்வியாகிய விளைநிலத்திற்கு உரமாகப்பயன்பட்டு உதவிபுரிகின்றன. அவர் உறுதிபட சுருக்கமாக உரைக்கும் சொற்களுள் பட்டறிவால் பெற்ற எழுத்தாற்றலும் பலாச்சுளாயினின்றும் வழிந்து பொழியும் தேனைப் போன்றது சிக்கலான விடயங்களுக்குத் தீர்வுகண்டு கருத்தை முன்னிலைப்படுத்துவதில் உரவோனாகத் திகழ்பவர். எடுத்த முடிவுகளில் பிரச்சினைகள் எழும்போது அவற்றினை மாற்றாது அலாதி இன்பத்துடன் முகம் கொடுப்பதில் தனித்துவமிக்க மதியூகியாவார்.

யாழ்ப்பாண இந்துக்கல்லூரி பல புகழ்பூத்த அதிபர்களின் ஆட்சியின் ஆற்றுப்படுத்தலால் மாட்சி பல பெற்றது. அவ்வகையில் திருவாளர் அ.பஞ்சலிங்கம் அவர்கள் நிறைகுடமாக நின்று ஆற்றியதால் யாழ் இந்து அன்னை பூர்த்து நிற்கின்றாள். இவருடைய காலத்தின் வரலாற்றுத் தடயங்களாக நிர்வாக அதிகாரப் பரலாக்கல், மாணவர் எழுத்தாற்றலை வளர்ப்பதற்கான கையெழுத்துச் சஞ்சிகைகள் மைதான விரிவாக்கம் மாணவர் சங்கங்களின் உற்பவங்களும் உற்சவங்களும் மாணவர்களின் ஆரோக்கிய வளர்ச்சிக்கு ஆசிரியர் பெற்றோர் சந்திப்புகள் என்பன சீரான கல்வி வளர்ச்சிக்கு புதுப்புது வித்தைகளாக பொலிவுறுகின்றன.

பவள விழா நாயகனின் பல திறமையுள்ள தகமைகள் கல்விச் சமூகத்திற்கு தொடருறும் சேவையாக தொடரவேண்டுமென எல்லாம்வல்ல ஞான வைரவரை இறைஞ்சுகின்றோம்.

திரு.வீ..கணேசராஜா
அதிபர்,
யாழ் இந்துக் கல்லூரி.

# தனியாத கல்விப்பணித் தாகமுடையோன் உயர்திரு. அ. பஞ்சலிங்கம் அவர்கள்



மனித வாழ்க்கைத் தத்துவங்கள் பல்பரிமாணப் பண்புடையவாகும். காலத்தின் ரேவைகளோடியைந்த சில படிமுறை வேறுபாடுகளைக் கொண்டுள்ள போதிலும் அவற்றின் நீடித்து நிலைக்கும் சிறப்பின் அடிப்படையில் கற்றோரும் ஞானியரும் கல்விச் சான்றோரை முதன்மை நிலையில் வைத்துப் போற்றுகின்றனர். "மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்னும் உண்மையறிவுத் தத்துவத்தின் பாற்பட்டு காலத்திற்கியைந்து கல்விப்பணியாற்றும் பெரியோர்கள் வரிசையில் கல்விப்புல மார்க்கண்டேயராக இன்றும் எம்முன்னே கல்விப்பணி தொடர்கின்ற உயர்திரு.அ.பஞ்சலிங்கம் அவர்கள் பவளவிழாவைக் கண்டு பாராட்டப்படுவது மட்டில்லா மகிழ்ச்சியளிக்கின்றது. நன்மாணாக்கனாக, நல்லாசிரியனாக, வினைத்திறன்மிகு அதிபராகக் கல்விப் புலத்தில் அவர் ஆற்றிய வகிபாகங்களும், ஈட்டிய வெற்றிகளும் அவற்றின் நடைமுறைகளும் ஆய்ந்தறிந்து இக்காலத்திலும் பின்பற்றத்தக்கனவே. சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணக் கல்விச் சமூகத்தின் பொதுக் கல்விச் செயற்பாடுகளில் ஒரு நேர்கணியத்தாக்கத்தினை உண்டுபண்ணக்கூடிய வலுநிலை பெற்றவராகத் திகழ்ந்த திருவாளர் பஞ்சலிங்கம் அவர்கள் அக்காலத்தில் வடமாகாண அதிபர் சங்கத்தின் தலைவராகவிருந்து அரும்பணியாற்றி அப்பதவியினை அழகுறுத்தினார்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் புகழ்மிக்க இரு கல்லூரிகளில் அதிபராயிருந்து அவர் ஆற்றிய கல்விப்பணியானது மக்கள் மத்தியில் அவருக்கு மதிப்புயர வைத்தது. கல்வியில் மாணவர்களது உயர்வும், உயர்வின்மையும் பாடசாலை அதிபர்களது திறன்களிலேயே தங்கியுள்ளன என்னும் உண்மையினை உணர்ந்தமையினால் இக்கல்வியாளர் ஏனைய கல்வி நிர்வாகப் பணிகளை விடுத்து அதிபர் பணியினை மனதார ஏற்று மனத்தான தொண்டாற்றி, மட்டில்லா மகிழ்வெய்தி, மணிவிழாமேலோங்கி, இன்று பவளவிழாக் காணுகின்றார். அரசாங்க சேவையில் ஒய்வு கண்ட பின்னரும் கல்வியிலும் ஏனைய சமூக சேவைகளிலும் அவர் வலுவுடன் பணிதொடர்வதனை எவரும் பாராட்டமலிருத்தலரிது. இக்கல்வித் தொண்டன் நீண்ட நெடுங்காலம் நலமுடன் வாழ்ந்து நற்பணி தொடர வேண்டுமென எல்லாம்வல்ல இறைவனை வேண்டி, வடமாகாண அதிபர் சங்கத்தினராகிய நாம் பவளவிழா நாயகனை பாராட்டி மகிழ்கின்றோம்.

திரு.செ.சேதுராஜா
தலைவர்,
வடமாகாண அதிபர்கள் சங்கம்.

# அரிதினும் அரிது



கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபரும், எனது பணிவன்புக்கும், பெருமதிப்புக்கும் பாத்திரமாக விளங்கும் எனது ஆசானுமாகிய திரு.அ.பஞ்சலிங்கம் அவர்களின் பவளவிழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்வுறுகின்றேன். ஆசானானவர் மாணாக்கரை வாழ்த்தும் மரபுக்கு விதிவிலக்காக, மாணவியாகிய நான் எனது ஆசிரியரை வாழ்த்தக் கிடைத்துள்ள சந்தர்ப்பம் அரிதினும் அரிதன்றோ! கொக்குவில் இந்துக் கல்லூரி அதன் வெற்றிப்பாதையில் நூறு ஆண்டுகளைத் தாண்டி வீறுநடை போடுகின்றது. கல்லூரி கடந்துவந்த பாதையில் கல்வியியலாளர்களை, வைத்தியர்களை, பொறியியலாளர்களை, ஆசிரியர்களை, அதிபர்களை, சட்டத்தரணிகளை இன்றும் எத்தனையோ சேவையாளர்களை எமது தமிழ் மண்ணுக்கு வழங்கிய பெருமையைக் கொண்டுள்ளது.

உன்னதமான அதிபர்கள், ஆசிரியப் பெருமக்கள் எமது கல்லூரி அன்னையின் உயர்வுக்காக உழைத்திருக்கின்றார்கள். அந்த வகையில் எமது முன்னாள் அதிபர் திரு.அ.பஞ்சலிங்கம் அவர்களின் பணி மிகவும் காத்திரமானது. அவர் அன்னையின் வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித்த உத்தமர். அவர் எங்களையெல்லாம் கல்லூரி வளர்ச்சிக்காக ஈடுபட வழிசமைத்துக் கொடுத்தவர். என்னை சமூக மத்தியில் பிரபல்யப்படுத்திய பெருந்தகை என்றே சொல்லவேண்டும். நான் இன்று பிரபல்யமாக இருப்பதற்கு காரணகர்த்தா திரு.அ.பஞ்சலிங்கம் அதிபர் அவர்களே. இவரின் சமூக, சமயப் பணிகள் என்றும் பாராட்டக்கூடியவை. இவர் நீண்டகாலம் வாழந்து கல்விப்பணியோடு, சமூகப் பணியும் ஆற்ற இறைவன் அருள்புரிய வேண்டும் என பிரார்த்தித்து அமைகின்றேன்.

செல்வி. ஞானலோஜினி சிவஞானம்
சட்டத்தரணி.

# நான் பார்த்த பஞ்சமுகம் -
# நம் பெருமைக்குரிய பஞ்சலிங்கம்



நமது அழகிய யாழ்நகரை நினைவுகூரும் பொழுதெல்லாம் என்மனக்கண் முன்னே மலர்வது நல்லூர் கந்தன் ஆலயமும் நான் கல்வி கற்ற பாடசாலையான கொக்குவில் இந்துக் கல்லூரியும் தான். நல்லூர் கந்தனை நினைக்கும் போது ஆறுமுகத்தான் தேர் ஏற எழுந்தருளும் அழகுத் தோற்றம் எம்மை மதிமயக்கச் செய்யும். அதே போல் எமது கல்லூரியை நினைக்குந்தோறும் இளைப்பாறிய அதிபர் திரு.பஞ்சலிங்கம் அவர்களின் அளப்பரிய சேவை பற்றிய நினைவலைகளில் நான் மூழ்கி விடுவேன். ஓர் மாணவனாக எங்கள் கல்லூரியில் கற்றுப் பின் அதன் ஆசிரியருள் ஒருவராக, உபஅதிபராக, ஈற்றில் அதிபராக மகத்தான சேவையாற்றி இளைப்பறியவர். திரு.பஞ்சலிங்கம் ஒவ்வொரு கட்டத்திலும் அவர் கல்லூரியின் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை சொல்லிலோ எழுத்திலோ வர்ணிப்பது மிகவும் கடினம். ஒவ்வொரு மாணவனும் தான் படிக்கும் கல்லூரியால் பெருமை அடைய முயற்சிக்கும் இவ்வுலகில் திரு.பஞ்சலிங்கம் அவர்களை 1941 - 1952 காலகட்டத்தில் மாணவனாகப் பெற்றது கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு பெருமை சேர்க்க முன்னோடியாக அமைந்துள்ளது. அன்றும், இன்றும், என்றும் தன்னை முழுமையாக எங்கள் கல்லூரிக்கு அர்ப்பணித்திருக்கும் திரு.பஞ்சலிங்கம் அவர்களின் கடின உழைப்பும் தன்னலமற்ற சேவையும் கல்லூரியின் சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை.

நான் அவரைப் பற்றி நினைக்கும் போது எனது நினைவலைகளில் வரும் முதலாவது அலை அவர் 1968 - 1969 வருடங்களில் எனது வகுப்பில் இரசாயனவியல் ஆசிரியராகப் பார்த்த முதல் முகம். ஒரு மாணவனின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் உயர்தர பரீட்சையை அம்மாணவன் நம்பிக்கையுடனும் மனஉறுதியுடனும் எதிர்கொள்வதற்கு திரு.பஞ்சலிங்கம் அவர்களின் வழிகாட்டல் எனக்கு உறுதுணை யாயிருந்தது. என் நினைவலைகளில் இரண்டாவது அலையாக எழுவது 1973 - 1979 காலகட்டத்தில் எமது கல்லூரியின் உபஅதிபராக அவர் அதிபர் மகாதேவனோடு ஒன்றிணைந்து ஆற்றிய தன்னலமற்ற சேவை. திரு.பஞ்சலிங்கத்தின் இந்த இரண்டாவது முகம் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் கல்லூரியைச் சார்ந்த அனைவரின் முன்னேற்றத்திற்காகவும் உழைத்த முகம். அடுத்து என் நினைவலைகளில் எழும் 1980 - 1991 காலகட்டத்தில் ஓர் அரிய அதிபராக, மாணவ சமுதாயத்தின் தலைவராக ஓர் உதாரண புருக்ஷனாக அவர் வாழ்ந்த வாழ்க்கை. அரிது அரிது மானிடனாகப் பிறப்பது அரிது, அதனிலும் அரிது உயர் திரு.பஞ்சலிங்கம் அவர்களின் மாணவனாக அமையப்

பெற்றது என ஒவ்வொரு மாணவனும் உளம் பூரித்த வேளை அது. இது என்னைக் கவர்ந்த மூன்றாவது முகம். அவர் உயர் பதவியிலிருந்து இளைப்பாறிய காலம் தொட்டு இன்று வரை கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவனாக, அதன் பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக ஆற்றிய / ஆற்றும் சேவை அவரது நான்காவது முகம். கல்லூரி முகம் கொடுத்த பல நெருக்கடிகளிலிருந்தும் அதை அவர் மீட்டெடுத்தது மனம்கொள்ளத்தக்கது. மேலும் 2000, 2001 ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாண றோட்டரிக் கழகத்தின் தலைவராக அவர் ஆற்றிய மகத்தான சேவை நான் பார்த்த அவரது ஐந்தாவது முகம். கல்லூரியின் வளர்ச்சிக்கும், பொதுப் பணிக்கும் அர்ப்பணித்துக்கொண்டு பஞ்சமுகம் காட்டிய திரு.பஞ்சலிங்கம் அவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததைப் பெரும் பாக்கியமாகவே நான் கருதுகின்றேன். அவர் எமது கல்லூரியின் மாணவனாக (1941 - 1952) கல்வி பயின்று, ஆசிரியராக (1958 - 1972) கடமையாற்றி, உப அதிபராக (1973 - 1979) பொறுப்பேற்று பின்னர் அதிபராக (1980 - 1991)

எல்லோரையும் வழிநடத்தி அரும்பெரும் சேவையாற்றியுள்ளார். கடந்த 35 வருடங்களாக எனக்கு அவரை தெரிந்திருப்பினும் அவருடன் நெருக்கமாக பழகும் வாய்ப்பு கடந்த ஏழு வருடங்களுக்கு முன்புதான் கிடைத்தது. 1983 இல் கொழும்பில் பாரிய அனர்த்தங்கள் நடந்தமையால் எமது கல்லூரியின் பழைய மாணவர் வங்க கொழும்பு கிளை அன்று தொட்டு சிலகாலம் இயங்காமல் இருந்தது. சோர்வுற்றிருந்த சங்கத்தவரை தட்டியெழுப்பி, எமக்கு புத்துணர்வு கொடுத்து எமக்குள் அடங்கியிருந்த உணர்ச்சிகளைச் தூண்டிவிட்டவர் திரு.பஞ்சலிங்கம் அவர்கள். இந்த மறுமலர்ச்சிப் போராட்டத்தில் திரு.பஞ்சலிங்கம் அவர்களுக்குத் தோள்கொடுத்தவர் அவருக்கு உப அதிபராக கடமையாற்றிய இளைப்பாறிய அதிபர் திரு.மகேந்திரன் அவர்கள். திரு.மகேந்திரன் அதிபராக பணியாற்றிய பொழுது 1994 இல் உமது கல்லூரியின் வளர்ச்சிக்கு எமது கொழும்புக் கிளையின் பங்களிப்பு அவசியமானதென உணர்ந்து எமது பழைய மாணவர்களில் ஒருவரான திரு.இராஜேஸ்வரனை கொழும்புக்கு அனுப்பி எம்மிற் சிலரை இனங்கண்டு ஊக்குவித்துக் கொழும்புக் கிளைக்குப் புத்துயிர் கொடுத்தார். எங்கள் சங்கக் கொழும்புக் கிளையின் உயிர்நாடியாக கடந்த ஐம்பது ஆண்டுகளாகத் தொடர்ந்தும் செயற்பட்டு வரும் திரு.இரட்ணபிரகாசம் அவர்கள் சலிக்காது எமக்கு உதவி வருவதை இங்கு நான் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். என்னை 1994 தொடக்கம் தலைவராகவும், திரு.அ.பற்குணத்தை செயலாளராகவும், திரு.ச.இராசேந்திரனை பொருளாளராகவும் 1994 இல் பொதுக் கூட்டத்திற் தெரிவு செய்து இயங்க வைத்தனர் கொழும்புப் பழைய மாணவர்கள். எங்கள் மீது கொண்டிருக்கும் அன்புக்கும் நம்பிக்கைக்கும் அங்கத்தவர்கள் எல்லோருக்கும் எமது நன்றி உரித்தாகுக.

அன்றிலிருந்து எமது கிளை திரு.பஞ்சலிங்கம், திரு.மகேந்திரன் ஆகியோரின் ஊக்குவிப்புடனும் எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் இலண்டன் கிளை, கனடா கிளை ஆகியவற்றுடன் தோளோடு தோள் நின்று செயற்பட்டு வருகின்றது. எமது கூட்டு முயற்சியினால் எமது கல்லூரியை சுற்றியுள்ள சில காணித்துண்டுகளை வாங்கி கல்லூரியுடன் விளையாட்டு மைதானத்தோடு இணைப்தற்காக பல கோடி லட்ச ரூபாய்களை கடந்த 5 வருடங்களில் முதலீடு செய்துள்ளோம். கடந்த 2000 – 2001 ஆம் ஆண்டு திரு.பஞ்சலிங்கம் யாழ்ப்பாண றோட்டரிக் கழகத்தின் தலைவராக அளப்பரும் சேவையாற்றிய பொழுது நான் றோட்டரிக் கழக ஆளுநரின் பிரதிநிதியாக யாழ்ப்பாண றோரட்டரிக் கழகத்திற்குப் பணியாற்றும் சந்தர்ப்பம் கிடைத்தது. அந்த வருடம் முழுவதும் திரு.பஞ்சலிங்கம் அவர்கள் எனக்கு கொடுத்த ஒத்துழைப்பும் யாழ்ப்பாணத்திற்கு அவர் செய்த மகத்தான சேவையும் எனக்கு இந்த றோட்டரி வருடத்தின் ஆளுநரின் மிகச் சிறந்த பிரதிநிதி என்ற பெருமையைத் தேடித் தந்தது.

எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளை அவரது அரும்பெரும் சேவையைப் பாராட்டி கொழும்பில் ஆனி மாதம் 30 ஆந் திகதி 2002 ஆம் ஆண்டு அவருக்கு ஒர் இராப்போசன விருந்து வைபவத்தை உழவநட வுயத ளுயஅரனசய இல் மிக விமரிசையாக ஒழுங்கு செய்து அவரை கௌரவித்தது. அவரது சேவையைப் பாராட்டி அவருக்கு தங்கப் பதக்கமும், பாராட்டு பத்திரமும் வழங்கியதுடன் அவரது சேவையைப் பாராட்டி பலரது கட்டுரைகள் தாங்கிய மலரையும் வெளியிட்டது. மேலும் எமது கல்லூரியின் நூற்றாண்டு விழாவை கொழும்பில் கார்த்திகை மாதம் 27 ஆந் திகதி 2010 ஆம் ஆண்டு இராமகிருக்ஷ்ண மண்டபத்தில் மிகச் சிறப்பாக கொண்டாடிய எமது கொழும்பு பழைய மாணவர் சங்கம் இவ்விழாவிற்கு திரு.அ.பஞ்சலிங்கம் அவர்களை கௌரவ விருந்தினராக அழைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. எமது கல்லூரிக்கு அவரது அளப்பரிய பணி மேன்மேலும் பல்லாண்டு காலம் தொடர வேண்டுமென இறைவனை வேண்டி அவருக்கு அதற்கேற்ற தேக ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் அளிக்க நல்லூர் ஆறுமுகக் கந்தன் அருள் புரிய வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

Dr.க.கேதீஸ்வரன், J.P
கொழும்பு பழைய மாணவர் சங்கம்,
கொழும்பு.

# வாழ்த்துச் செய்தி



பவளவிழாக் காணும் உயர்திரு. அப்பாத்துரை பஞ்சலிங்கம் அவர்கள் கொக்குவிலில் பிறந்து தனது குலதெய்வமாகிய புதுக்கோயில் முருகனை வழிபட்டு முன்னேறியவர்களில் ஒருவர். சேவையே எங்கள் வாழ்வு என்பதற்கிணங்க ஆசிரியராக, அதிபராக, கல்விச் சேவை, சமூகசேவை, சமயசேவை என்பவற்றில் சிறப்புடன் திகழ்ந்து இவ்வையத்தில் வாழும் சிலரில் இருவரும் ஒருவர். காலத்தின் தேவையறிந்து சேவையாற்றும் இவர் இனிவரும் காலங்களிலும் பல்துறைகளிலும் சேவையாற்றி, பல்துறைகளிலும் சேவைபுரிந்து வாழ எல்லாம்வல்ல கொக்குவில் புதுக்கோயிலானை அருள்பாலிக்கவென வேண்டுகின்றேன்.


செ.செல்வரஞ்சன், O.St.J

தலைவர்,

கொக்குவில் புதுக்கோயில்

கிருபாகர சிவசுப்பிரமணியர் கோயில் பரிபாலனசபை.

# கல்லூரி அன்னையின் வளர்ச்சியில்



கொக்குவில் இந்துக் கல்லூரி எமது கிராமத்திற்கும், நாட்டிற்கும், அயல்நாடுகளுக்கும் நல்ல விவேகமும், அறிவும், ஆற்றலும் உள்ள மாணவர்களைத் தந்துள்ளது. இந்த வகையில் நல்லாசிரியராகக் கற்பித்தல் முறையும், முகாமைத்துவத் திறனும் நிரம்பியவராக, எம் சமூகத்தின் அன்பிற்கும், மதிப்பிற்கும் உரிய திரு.அ.பஞ்சலிங்கம் அவர்கள் 75 ஆவது அகவைதனில் காலடி வைத்து கொக்குவில் இந்துக் கல்லூரியின் வரலாற்றில் தனக்கென ஒரு தனி முத்திரையைப் பதித்துள்ளமை கண்டு அகமிக மகிழ்கின்றேன். எமது கல்லூரியின் பழைய மாணவரான திரு.அ.பஞ்சலிங்கம் அவர்கள் கல்லூரி அன்னையின் வளர்ச்சியையே கண்ணுங் கருத்துமாகக் கொண்டு விளங்கியவர். மிக இளமைக் காலத்திலேயே எமது கல்லூரியின் ஆசிரியராக இணைந்து பிரதி அதிபராக, அதிபராக சுமார் 35 வருடகாலம் தொடர்ந்தேர்ச்சியாக சேவையாற்றிய பெருந்தகையாவார். தம் ஓய்வுக் காலத்தையும் கல்லூரி அன்னையின் பல்துறை வளர்ச்சிக்காக செலவு செய்து வருபவர். மேலும் எமது கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவராகப் பொறுப்பேற்று அன்னையின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு செயலாற்றி அரும்பாடுபட்டு வருகின்றார்.

எல்லோருடனும் ஒரு புன்சிரிப்புடன், இனிமையாகப் பழகும் சுபாவமும், எடுத்த விடயத்தை செவ்வனே முடித்து வைக்கும் செயற்திறனும் மிக்க இவர் தம் செயற்பாடுகள் அனைத்துமே எல்லோருடைய மனத்திலும் அவருக்கென ஓர் தனியிடத்தைப் பெற வைத்தன. எம்கல்லூரி அன்னையின் பலபடி வளர்ச்சியிலும் தம்மை முழுமையாக அர்ப்பணித்து நடப்பவர் தான் எம் இன்றைய விழா நாயகன். எம் பழைய மாணவர்களையும் ஆற்றுப்படுத்தி, ஊக்கம் அளித்து கல்லூரியின் உன்னதமான எதிர்காலத்தை நோக்கி வீறுநடை போடச் செய்த பெருமையும் இவரையே சாரும். அத்தகைய பெருந்தகைக்கு இன்று அவரது 75 ஆவது அகவைதனில் கல்விச் சமூகமானது பவளவிழா ஒன்றினை ஏற்பாடு செய்திருப்பது மிகமிக மகிழ்ச்சிக்குரியதும் வரவேற்புக்குரியதுமாகும். எனவே இன்றைய விழா நாயகனாம் திரு.அ.பஞ்சலிங்கம் அவர்கள் ஆரோக்கியத்துடனும் நீண்ட ஆயுளுடனும் வாழ்ந்து எம் கல்லூரியின் வளர்ச்சிக்கு மேன்மேலும் பற்பல சேவைகளாற்ற எல்லாம்வல்ல கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமிகளை அருள்பாலிக்க வேண்டி பிரார்த்தித்து வாழ்த்தி அமைகின்றேன்.

திரு.மாணிக்கம் சுப்பிரமணியம்,
கொழும்பு.

# முன்னாள் அதிபர் திரு.பொ.கமலநாதன் அவர்களின் வாழ்த்துச் செய்தி

கொக்குவில் இந்து, யாழ்ப்பாணம் இந்து ஆகிய இரு கல்லூரிகளிலும் பெயர் பெற்ற அதிபராக விளங்கிய திரு.அ.பஞ்சலிங்கம் அவர்களின் பவளவிழாவில் வெளியிடப்படவிருக்கும் "பஞ்ச கவசம்" மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். கொக்குவில் இந்துவின் பழைய மாணவராகிய இவர் இக்கல்லூரியிலேயே ஆசிரியராகவும், உப அதிபராகவும் பின்னர் அதிபராகவும் பதவி வகித்த பெருமைக்குரியவர். இவருடைய காலத்தில் கல்லூரி உயர்ந்து பல துறைகளிலும் முதன்மை பெற்றது என்றால் அது மிகையாகாது. மாணவர்கள் வகுப்பறைக் கல்வியில் மட்டுமன்றி ஏனைய இணைச் செயற்பாடுகளிலும் ஈடுபடுவதற்கான வசதிகளையும், வழிகாட்டல்களையும் வழங்கியிருந்தார். இதற்காக இவர் வகுத்த வழி யாதெனில் ஆசிரியர்களை மகிழ்ச்சிகரமாக கற்பித்தற் பணியில் ஈடுபடச்செய்தமையும் அவர்களின் வாண்மைவிருத்திக்கு வழிவகுத்தமையும், மாணவர்கள் தமது ஆற்றலுக்கமைய கற்றல் வாய்ப்புக்களை அவற்றுக்கான வசதிகளுடன் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்து கொடுத்தமையுமாகும். இவருடைய இப்பணிக்கு கல்லூரிச் சமூகம் கைகொடுத்து தவியதெனலாம். இவர் எப்பொழுதும் கல்லூரிச் சமூகத்துடன் நல்லுறவைப் பேணி வந்துள்ளார்.

திரு.பஞ்சலிங்கம் அவர்கள் கொக்குவில் இந்துவில் ஆசிரியராக இணைந்துகொண்ட வருடத்திலேயே நானும் மாணவனாக சேர்ந்துகொண்டேன். இவர் இளம் ஆசிரியராக அப்போது விளங்கினார். இவருடன் திருவாளர்கள் இ.மகேந்திரன், என்.சிவராசா, கணேசலிங்கம் மற்றும் சந்திரமௌலீசன், கதிர்காமத்தம்பி ஆகியோரும் இளம் ஆசிரியர்களாக இணைந்து கொண்டவர்கள். இவர்கள் எல்லோரும் வெண்ணிற ஆடைகளை அணிந்துகொள்வதுடன் எல்லோரும் ஒரு குழு நண்பர்களாகவும் நடந்துகொண்டமை என் மனக்கண் முன் இன்றும் நினைவுகூற முடிகின்றது.

திரு.பஞ்சலிங்கம் அவர்கள் கொக்குவிலைச் சேர்ந்தவர் என்ற வகையிலும், கொக்குவில் இந்துவில் கற்றவர் என்பதாலும், இக்கல்லூரியில் நீண்டகாலம் பணியாற்றியவர் என்ற உணர்வோடும் இன்றும் இக்கல்லூரி மீது மிகுந்த ஈடுபாடுடையவராக விளங்குகின்றார். குறிப்பாக கல்லூரியின் பௌதீக வளங்களைப் பெருக்குவதிலும் மகிழ்ச்சிகரமான கற்றல் சூழலை மாணவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதிலும் மிகுந்த ஆர்வம் காட்டியவர்களுள் ஒருவராக விளங்குகின்றார்.

கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தில் பல தடவைகள் தலைவர் பதவியை வகித்த இவர் இப்போதும் அப்பதவியை அலங்கரிப்பதுடன், பழைய மாணவர்களுக்கு வழிகாட்டுகின்ற ஒருவராகவும் விளங்குகின்றார்.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு வரலாற்றில் தனக்கென தனியிடம் பெற்றுக்கொண்ட திரு.பஞ்சலிங்கம் அவர்கள் தனது எழுபத்தைந்தாவது அகவை தினமான இன்று பவளவிழா நாயகனாக விளங்குகையில் அவரும் அவரது குடும்பத்தினரும் மேலும் பல்லாண்டுகாலம் பல சிறப்புக்களும் பெற்று வாழ இறைவனை வேண்டி எனது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் கூறிக்கொள்கின்றேன்.

திரு.பொ.கமலநாதன்
இளைப்பாறிய அதிபர்
பொருளாளர் பழைய மாணவர் சங்கம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

# பவளவிழா காணும் என் ஆசிரியர் பற்றி.......

யாழ் மண்ணிலே தலைசிறந்த கல்விமானும், திறமைமிகு நிர்வாகியும், எனது மதிப்பிற்குரிய ஆசிரியரும், அதிபருமான திரு.அப்பாத்துரை பஞ்சலிங்கம் அவர்கள் தமது 75 ஆவது அகவையைப் பூர்த்தி செய்வதையிட்டு மிகுந்த மன மகிழ்ச்சியடைகின்றேன். அவர் மிகுந்த பயனுள்ள வாழ்க்கையை வாழந்து வருகின்றார் என்பது எமக்கெல்லாம் இனிய செய்தி. தான் வாழ்ந்த, வாழ்கின்ற சமுதாயத்திடமும், பணியாற்றிய கல்விக் கூடங்களிலும் பெரும் பற்றோடு செயற்பட்டுப் பெற்ற பொன்னான அனுபவங்களை மீண்டும் இந்தச் சமுதாயத்திற்கும் கல்விப் புலத்திற்கும் தாராளமாக ஈந்து உவக்கின்ற பெரும் சேவையை எண்ணிப் பார்க்கின்றேன். தன்னலமற்ற சேவையினால் அவரது ஆளுமையும் மதிப்பும் உயர்ந்து கொண்டே செல்கின்றது. ஆங்கிலக் கவிஞர் (Long Fellow) லோங்பெல்லோ கூறுவதைப் போல் : "இந்த உலகிலே நாம் வாழ்வதற்காக கொடுக்கும் வாடகை மக்களுக்கு நாம் வழங்கும் சேவை தான்". அந்த இணையற்ற சேவையை இடையறாது இளைஞர் போல அலுப்புத்தட்டாது செய்து வருவதற்கு அவரது ஆர்வமும், விழிப்புணர்வும், மகிழ்ச்சியும் காரணமாக அமைந்துள்ளது என்பது தெளிவாகின்றது. எங்களுக்கெல்லாம் சிறந்த வழிகாட்டியாகவும், ஊக்கமும் உற்சாகமும் தரும் ஊற்றாகவும் அவர் வாழ்க்கை அமைந்திருப்பது நாம் அனைவரும் பெற்ற பேறென்றே கூறவேண்டும்.

அவரது மிகுந்த பொறுப்புணர்ச்சி, வகை கூறும் திறன், பொறுமை, தன்னடக்கம், நேர முகாமைத்துவம், அளவாகப் பேசி நிர்வாகம் நடாத்தும் பாங்கு ஆகியவை விதந்து கூறக்கூடிய பண்புகளாகும். சமுதாயத்தை விட்டு விலகி நின்று தன் கல்விப் புலமைக்கும், நிர்வாகத்திறமைக்கும் விலை பேசுபவர் அல்லர் நம் அதிபர். மக்களோடும், மாணவர்களோடும் ஒட்டி உறவாடி கருமங்கள் ஆற்றும் பண்பு நலமும் திறமையும் பெற்றவர் காலையில் தினத்தாள்களைப் பார்த்துத் தன் அன்பர்கள் நண்பர்களின் நிகழ்ச்சிகளிலே தவறாது கருத்தோடு கலந்துகொள்கின்ற அவர் தம் சமூக ஊடாட்ட செயற்பாடுகள் என் மனதைப் பெரிதும் கவர்ந்ததொன்று.

அவர் தனி மரமல்ல் பெருந்தோப்பு.

பல சிறுவர் பூங்காக்களை அமைத்து கல்விப்பயிர் வளர்க்கும் கருணை மிகுந்த செயலை ஆற்றி வருகின்றார். நல்லவற்றையும் உயர்வானவற்றையும் எண்ணிச் செயல்படும் அவர் நீண்டகாலம் வாழ்ந்து இந்த மண்ணும் மக்களும் பயனுற வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

திருமதி.செ.சகாதேவன்
அதிபர்
கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.

# எம் முன்னாள் அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம்

கொக்குவில் பிறந்த ஊர். கொக்குவில் இந்துக் கல்லூரி கல்வி கற்ற பாடசாலை. கல்விப் பொதுத்தராதர உயர்தரக் கல்வி யாழ். இந்துக் கல்லூரியில். விஞ்ஞானப் பட்டதாரியாகி கொக்குவில் இந்துவில் ஆசிரியர் பணியைத் தொடங்கி இன்றுவரை கல்லூரி அன்னைக்கு அளப்பரிய சேவை செய்து எல்லோரதும் நன்மதிப்பைப் பெற்று, கல்வித்தகைமை, தொழிற்தகைமை பெற்று, கல்விசார் செயற்பாடுகளில் தன்னை ஈடுபடுத்தி கல்வி தொடர்பான ஆய்வுகளும் செய்து போற்றுதற்கரிய பெருந்தகையானவர் திரு. அ. பஞ்சலிங்கம் அவர்கள்.

1941ம் ஆண்டில் கொக்குவில் இந்துவின் மாணவனாகிக் கற்றுத் தேறி விஞ்ஞானப் பட்டதாரியாகி மீண்டும் தான் கல்வி கற்ற பாடசாலையிலேயே ஆசிரியராகி, டிப்ளோமா பட்டம் பெற்று உப அதிபராகி, பின் அதிபராகி பல பெரியோர் போற்றக் கல்லூரியைத் திறம்பட நிர்வகித்தவர். ஏறத்தாழ எழுபது ஆண்டுகள் கல்லூரியில் தொடர்புடையவர். அன்று போல் இன்றும் கல்லூரிக்கே சேவை செய்து வருகின்றார். இரசாயனவியல் கற்பிப்பதில் திறமையுள்ளவர். அவரிடம் இப்பாடத்தைக் கற்றே பரீட்சையில் தேறலாம். வேறு ஆசிரியரிடம் மேலதிகப் படிப்புக்குப் போக வேண்டியதில்லை. திறமையுள்ள மாணவர்களை இனம் கண்டு அவர்களின் திறமையை முழுமையாக வெளிக்கொணர மேலதிக பயிற்சிகளைக் கொடுத்துத் திறமைச் சித்தி அடையச் செய்வார். "எனக்கும் பெறுபேறுகள் வேண்டும்" என்று சொல்லுவார். மாணவர்கள் மூலம் தான் ஒரு ஆசிரியரின் கற்பிக்கும் திறன் வெளிப்படும். மாணவர், ஆசிரியர் இருவரும் சேர்ந்ததே கல்வியின் வெளிப்பாடு. பல திறமைகளைக் கொண்ட எம் முன்னைநாள் அதிபர் தன் கல்விப் பயணத்தில் பல விருதுகளைப் பெற்று இளைப்பாறிய பின் பழைய மாணவர் சங்கங்களின் சேவை நலன் பாராட்டைப் பெற்று, பொதுத் தொண்டின் பயனாக கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தின் பாராட்டையும் பெற்றுக் கொண்டார்.

அமைதியாக அடக்கமாக சேவை செய்து பயனுள்ளதாக வாழ்க்கையை நடாத்திக் கொண்டிருக்கும் திரு.அ.பஞ்சலிங்கம் அவர்கள் ஜனவரி 8, 2011இல் பவளவிழாக் காணும் வேளையில் நாமும் அவரை, குடும்பத்துடன் நலமுடன் வாழவும், சமூகசேவையைத் தொடரவும் இறையருளை வேண்டுகிறோம். அவருடன் உப அதிபராகக் கடமையாற்றியதையும், அவருக்கு ஆசிரியராக இருந்ததையும் நினைத்துப் பெருமை அடைகிறேன்.

திருமதி. சுகிர்தலக்க்ஷ்மி சுப்பிரமணியம்
கனடா

# 75ஆவது அகவை பூர்த்தி செய்யும் எமது ஆசானுக்கு இதய பூர்வமான வாழ்த்துக்கள்

கொக்குவில் இந்துவின் வரலாற்றில் தனது முத்திரையை பதித்துச் சென்ற எமது ஆசான் உயர்திரு.அ.பஞ்சலிங்கம் அவர்கள் எழுபத்தைத்தாவது அகவை பூர்த்தி செய்கின்றார். மூர்த்தி செய்கின்றார். அவர் கல்லூரி மட்டத்தில் மட்டுமல்லாது சமூகமட்டத்திலும் தனத சேவையை விஸ்த்தரித்துள்ளது பாராட்டப்பட வேண்டியது பெருந்தகையாளரான அவரை அவரிடம் கல்விபயின்ற நாங்கள் வாழ்த்தும் தகமை இல்லவிடினும் பாராட்டுத் தெரிவிக்க கிடைத்ததை அந்த பெருமையாக கருதுகின்றோம். எனவே எமது ஆசான் பல்லாண்டு காலம் அக வாழ்த்து சமூகத்திற்கு தொண்டாற்ற வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

மா.இந்திரகுமார்
சிட்னி
அவுஸ்ரேலியா

குடும்ப நிகழ்வில் பவளவிழா நாயகன்

உயர்திரு ந. பஞ்சலிங்கம் அவர்கள்....











10-3-2002









இணுவில் பொது நூ









# Panch the Silent Achiever

It gives me honour, profound happiness and great pleasure to pen my feelings about my college mate, friend and colleague.

I wish to express my heartfelt and sincere wishes and blessings to Panchlingam whom I call "Panch" celebrating his seventy-fifth birthday on 8th January 2011.

Panch had his education at Kokuvil Hindu College. He excelled academically always being one of the top students in the class. This was evident when he passed his Senior School Certificate in the First division.

He graduated and joined his Alma matter as a Science teacher. As a Mathematics and Chemistry teacher he excelled to such levels that none could match him.

His rise was meteoric, a grade II special post holder gradually became the Deputy Principal and later principal, all these at Kokuvil Hindu-his alumni. As an administrator, his commitment, his vision and his phenomenal ability to execute, paid great dividends in the long term.

A great renaissance in the field of school administration took place during his time directing the college towards wholesome development and progress. He was not only an exemplary teacher, a far sighted principal but also a man with social conscience.

During the 60's, 70's and thereafter to date, an infection crept into the teaching world-tutories. A person of Panchs' calibre could have minted rupees but he resented and detested giving tuition, yet he did-not for money- purely on compassionate grounds. Sportsmen who were weak in Mathematics and chemistry-he willingly helped them.

What is particularly appealing about Panch was his contagious enthusiasm and warm personality which was reflected in everything he

undertook- a passive achiever, soft spoken and admired by colleagues, students, parents, educational administrators and well wishers. He had always been honest and upright discharging his duties entrusted to him with efficiency and to the satisfaction of all concerned.

After retiring, he had an abiding interest in the welfare of the school and his dedication was recognised by his colleagues and acknowledged by the school community at large.

I wish to offer my congratulations and wish him many more happy returns of this day. May god shower his choicest blessings on Panch and his family in all their future endeavours!

**V.Ganeshlingam**

"We are born to do good, if you don't want to do anything good, please don't do anything bad."- Swami Vivekananda

Best wishes Panch!
May this year be the best ever!
I am very happy to have a great friend like you!
May this special day be filled with memories, love and happiness.
I am sorry beloved friend that I have missed your 75th birthday

**From your dearest friend,**
**S.Logathsan**

# HAPPY 75th BIRTHDAY

Dear Sir,

You were born during the depression and the war clouds were gathering as Germany began to rearm and passed the Nuremburg laws to strip Jews of their civil rights........

For seventy-five years, you've graced this earth and on this day, we give thanks for your birth

The warmth of your voice, melts away my strife and helped me to learn many things in the world of chemistry. I still remember the time that you spent on special classes after school hours. From your loving heart, straight to your soul there's a joy in you, that belies getting old. I see it in the wondrous smile on your face and how your presence, brightens up every place.

* Birthdays are feathers in the broad wing of time.
* Whatever with the past has gone, The best is always yet to come
* To know how to grow old is the master work of wisdom, and one o f the most difficult chapters in the great art of living.
* You're not 75, You're 25 with 50 years of experience.
* You are never too old to set another goal or to dream a new dream
* I wish you to set another goal and achieve it before you hit the century mark.
* Birthday should be a special time for each to then reflect, on the past and on the present and what the future might expect.
* Birthdays should be a special time for you to start anew, setting goals and working to make each and every dream come true.

**Kethees Seevaratnam**

# Wish you a Happy Birthday

Dear Sir,

You've reached a very special Birthday

May your Birthday
remind you
not only of the number
of wonderful years you've lived,
but of the number ways
you've touched
so many people's lives.
You've seen a lot,
done a lot,
and you deserve to feel as proud of yourself today
as your family, friends, and students feel proud of you.

**Your Student from Canada**
**K.A.Srikrishnaraj, PhD**
**(Former Dean / Faculty of Applied Science,**
**University of Jaffna 1998 - 2004)**

# S. Ratnapragasam

Mr.A.Panchalingam's ties with Kokuvil Hindu College have lasted a span of over 70 years. It commenced as far back as in 1941 and continues to this day, not withstanding his laying down the mantle of office as Principal in April 1991. His unswerving commitment and dedication to K.H.C is unique. He began in the primary school, successfully completed his secondary education and proceeded to the University for his degree. After obtaining a degree in Science, he returned to Kokuvil in 1958 to be appointed as a teacher in his old school. Chemistry was his forte and Advanced Level class students benefited much from his teaching. His method provided a fillip to bright students with special attention to the weaker at the same time Educational Qualifications and / or training alone do not make a good teacher. One's intelligence, dedication and experience goes a long way. In these respects panchalingam had few peers. He was honest and had the courage to act according to his conscience, regardless of the consequences. He belongs to that vintage of dedicated teachers for whom teaching was a vocation and he loved to impart his knowledge to the many students he taught. Lessons were such fun, spiced with humour and annecdotes. Students devekpad a warm personal rapport which withstood the test of time for many in Sri Lanka and others scattered world wide. Mr.Panchalingam service period in Kokuvil was interupted in 1971 by a short spell of five months (December 70 to April 71) at Omanthai Maha Vidyalaya. Where he was sent immediately after his completing the Diploma in Education in 1970 from Peradeniya.

Appointing Deputy Principals was the prerogative of the Principal in charge of the school. When a

vacancy for a Deputy arose in 1973 at Kokuvil Hindu many aspirants began to lobby for this position. After careful consideration of rival claims Mr.C.K.Kanthaswamy, the Principal was wise to seiect Mr.Panchalingam as the Deputy Principal. In Principal's opinion the calibre of other teachers senior in age and teaching experience did not match up to shoulder administrative responsibility in a growing school. Besides Kokuvil Hindu carried in its staff an excess of graduate teachers at that time which the Department has wanted pruned to be within the approved cadre. Some teachers gas perforce to be transfered; about six of them were released in rapid succession to serve in differnet schools in the peninsula. The transfers evoked strong antagonism and deep bitterness; the agrieved condemned this as a subterfuge and began a harsh ans unjust campaign of personal villification of the Principal. That was the dark side which left a bad taste. Here we must remember with gratitude the valuable services rendered to Kokuvil Hindu college by the late Mr. C. Arulampalam both in capacity as Political Autuority and as chairman of Kokuvil Village Committee right from the Linga Lights Carnival days in 1950. Principal C.K.Kanthaswamy's dedication to Kokuvil Hindu was such that the best interests of this college was the most overriding consideration in his selection. Among the many things that C.K.K had done at Kokuvil the best was his choice of Mr. Panchalingam as Deputy which paved the way for an easy rise to Principalship. Panchalingam had lived up to Mr.Kanthaswamy's expections and had proved his excellence over his rivals both in tact and administrative ability. He silently works for Kokuvil Hindu's progress with loving care even today As Deputy Principal he did his work gallantly and was a pillar of strength to Mr.Mahadeva, who was Principal from June 1972 to December 1979. Mr.Panchalingam's success was due to his preference to lead by

persuasion rather that by command. He instilled into his students the need for discipline, good manners, punctuality and tram work. His policy was that the essence of teaching lay not in the imparting of knowledge but also in the interaction and spontaneous exchange of ideas that goes between teacher and pupil.

In January 1980 Mr.Panchalingam was appointed Principal K.H.C. We take pride in the fact that three of our past pupils - the late Mr.M.Mahadeva, Mr.A.Panchalingam and the president incumbent Mr.P.Kamalanathan in that order have adorned the Principal's chair at Kokuvil. Mr.Panchalingam performed his work with unobtrusive dignity and with admirable competence and thoroughness. The school is second to none in academic excellence as well achievements in sports and games.

K.H.C was and is a coeducational institution. In the late nineteen seventies, there were subtle moves to make it an exclusively Boy's school, moving the girl students to the Ramakrishna Mission school located a quarter of a mile away. It was largely due to Mr.Panchalingam's efforts that this move was effectively thwarted.

On him fell the task of guiding the destinies of the college at a crucial period of its history when the Indian Peace keeping force camped in the college for nearly two months - from November 18, 1987 to January 4, 1988. The Collegeserved as the "Retugees Camp" in October, November 1987, where over 7500 persons displacedfrom their homes sought shelter. In the College playground lay burled in one mass grave over twenty six innocent refugees killed when one of the buildings in the school collapsed in shelling by the IPKF soldiers. The damage to the school exceeded well over fifteen lakhs of rupees. Expenditious restoration of normalcy for the school to function was no easy task. It is to Mr.Pan chalingam's

lasting credit that school started functioning at Kokuvil without any long interruption. Much to our loss Mr.Panchalingam left Kokuvil Hindu in April 1991 to be Principal of Jaffna Hindu College, perhaps the most respected and prestigious post in the Jaffna Peninsula. Mr.R.Mahendran filled the void and served as our Principal till January 1996. As Mr.Panchalingam retired from service the North - East provincial Council appointed Mr.Mahendran as Principal. J.H.C and Kokuvil Hindu was left in charge of an inefficient care taker Principal whose actions were not at all in the best interests of the school. Factio nalism and lethargy among the staff crept in; divisive tendencies developed amongst the school community. Citing an old Depeartmental circular, the targeted to be the President of Old Students Associations as well. He shut out the Jaffna OSA committee from meeting in the school permises. He got the Bank account of the Jaffna OSA forzen by the Regional Director and tired to scuttle its activities. The College was in crisis. In the mass exodus out of Jaffna in October 1995 the school lost almost everthing material wise. Subtle moves were now afoot to rob K.H.C of its identity too and make it a tulelage of Jaffna Hindu College. Past pupils had to act firm and fast to save the school. At the meeting of K.H.C Old Students held in Chavakacheri in February 1996 Mr.Panchalingam was elected President to meet the challenging situation. He promptly alerted the associations in the U.K, Canada and Colombo of the disastrous situation in their "Alma Mater" and got them to make prompt and effective represen tations at ministerial level in Colombo requesting the permanent appointment of a Principal at Kokuvil. Con sequently the deepining crisis was averted by the appointment of Mr.Kamalanathan as Principal as from 1st September 1996. Mr.Panchalingam did play a major role in securing Mr.Kamalanathan's services to Kokuvil and has since been of tremendous assistance to him in restoring the school to its present position. The ne up-to-date

Basket Ball court, the well furnished Auditorium, the fully equipped computer laboratory in K.H.C and the Handy memorial Junior library are all recent additions to the school ans are living testimony to panchalingam's altrustic labour of love. Fire punctuated Kokuvil's progress in the nineteen fifties whilst the extant war conditions in Jaffna had their turn in the years 1987 and 1995 and checkmated its advanees, uet it moves on unabated. Few people know that it was at the suggestion of Mr.Panchalingam, that the K.H.C OSA Trust was established in 1997 in Colombo. This legal entity was set up to own new fixed assents of Kokuvil Hindu College - a vested school. He had the foresight to see the school outgrowing the site at Kokuvil and was the motivating force in all the recent land acquisitions in Kokuvil by the Trust for the expansion of the school. Here we must record our greateful thanks to our Sister Associations in the U.K and Canada for joining us in Colombo to provide the needed finance for the purchases. In K.H.C a succession of Principals and staff have been exernplary models. Service without thought for reward was their credo. Mr. Panchalingam was one with that venerated tribe of dedicated and God fearing men who considered the call to serve his school as a vocation receiving little or no pecuriary gain, He met every situation in the complex life of a large school from the spiritual angle, finding an answer from within that would help dispel any possible discord and enrich and enhance unity and harmony in K.H.C. In that way he displayed the innate loftiness and spiritual refinement of his nature and was an inspiring example of exquisite and noble living. We the past pupils in Colombo recall with pride and admiration that Kokuvil Hindu is fortunate in having his continued services and wish him and his family a long healthy and prosperious life. May K.H.C grow from strength to strength and keep the flag flying.

**Mr. S.Ratnapragasam**
**Senior Vice President.**

# Tribute to Mr A.Panchalingam in his 75th birthday

Mr Panchalingam served with distinction as teacher, Vice – Principal and later as Principal for thirty three years. Whatever he did, whether teaching or administrating the school he did exceptionally well winning plaudits.

As a teacher of chemistry, he had few equals. His old students still remember him with gratitude. In his capacity as Vice – Principal, he gave unstinted support to the Principal, Mr Mahadeva.

Some of us had the good fortune to serve with him during his time as Principal. He was soft – spoken and mild – mannered, he was very skilful and tactful. He solved problems with ease and everything moved smoothly under him. Teachers working under him had easy access to him and found him very receptive. Everyone was quite contented.

The school advanced under his able guidance and he still continues to serve the school rendering valuable assistance and those in charge.

May god bless him with many more years of healthy good life.

**Mrs B. Kanthapillai**
**(Former colleague)**


KOKUVIL HINDU COLLEGE
Centenary Celebrations, 1910 - 2010
NEHRU Photo, Kokuvil


KOKUVIL HINDU COLLEGE


KOKUVIL HINDU COLLEGE






LEGE
OCIATIO
ல்லூரி
சங்க


SERVICE ABOVE SELF
Chartered
8th 19
Charter No.
5369



# வாழ்த்துகின்றோம் பழைய மாணவர்கள் ஐக்கிய இராச்சியம்

பவள விழாவை காணும் எமது அன்புக்குரிய முன்னை நாள் அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் அவர்கட்கு ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் சங்கம் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றது. எமது கல்லூரியில் மாணவனாக இருந்த பொது படிப்பில் சிறந்து மிளிர்ந்தார். சர்வகலாசாலைப் படிப்பு முடிந்து எமது கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராக சேர்ந்தார். இரசாயனவியல் ஆசிரியராக மேல் வகுப்பு மாணவர்களின் பாராட்டுகளைப் பெற்று விளங்கினார்.

அவரின் திறமைகள் எல்லாவற்றையும் அவதானித்து அவருக்கு அதிபர் திரு ஊ.மு.கந்தசாமி சிறிது சிறிதாக நிர்வாகப் பணிகளில் பயிற்சி அளித்தார். இவர் உப அதிபராக, அதிபர் திரு.ஆ.மகாதேவா அவர்கட்கு உறுதுணையாக இருந்து நிர்வாகப் பணிச் சுமையை பகிர்ந்து உதவினார். அதிபராக இருந்து கல்லூரியைத் திறம்பட நிர்வாகித்து எமது யாழ்ப்பாணப் பகுதியில் திறமையான அதிபர் என்று புகழ் பெற்றார். ஆசிரியர், பழைய மாணவர், பெற்றோர், கல்லூரிச் சமூகம் என்று எல்லாருடைய நல்லுறவையும் ஒத்துழைப்பையும் திறமையாகப் பெற்றுக் கொண்டார். திரு.அ.பஞ்சலிங்கம் அதிபராக இருந்த காலத்தில் கல்லூரி பல துறைகளிலும் பெரு வளர்ச்சியை கண்டது. இளைப்பாறிய பின் கல்லூரி பணிக்காக வெளிநாடுகளுக்குச் சென்று நிதி திரட்டிக் கொடுத்தார். நண்றியுள்ள பழைய மாணவர்கள் அவர் பெயரில் “கேட்போர் கூடம்” ஒன்றை அமைத்துள்ளனர்.

திரு.அ.பஞ்சலிங்கம் அவர்கள் மாணவராக, ஆசிரியராக, உபஅதிபராக பின் அதிபராக பல்லாண்டு எமது கல்லூரியில் தொடர்பு கொண்டிருந்தார் இளைப்பாறிய பின்பும் கல்லூரிப் பணியில் தொடர்ந்து ஈடுபட்டுவருகிறார் அவர் பணி தொடர்ந்து நல்ல முறையில் பயன் தர அவருக்கு எல்லாச் சுகத்தையும் சிறப்பான நீண்ட ஆயுளையும் கடவுள் அருள் புரிவாராக.

திரு.அ.பஞ்சலிங்கம் அவர்கட்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

சி.ஶ்ரீரஞ்சன்
தலைவர் – கொ.இ.க ப.மா.ச ஐ.இ

# வழிகாட்டியை வாழ்த்துகின்றோம்

எமது (சிமாட் கிட்ஸ்) முன்பள்ளியின் (ஸ்தாபகராக பணியாற்றி) தலைவராக திகழ்ந்து சிறந்த வழிகாட்டியா எம்மை வழிப்படுத்தி வரும் ஓய்வுநிலை அதிபர் (கொக்குவில் இந்து, யாழ் இந்து) உயர்திரு. அ. பஞ்சலிங்கம் அவர்களது பவளவிழா நிகழ்வில் பங்குகொள்வதில் மிக்க மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கின்றோம்.

"விளையும் பயிருக்கு முளையில் உதவும்" முன்னேற்றச் செயற்பாடுகளால் எம் மழலைச் செல்வங்களின் மனதில் குடிகொண்டீர். கல்வியின் நோக்கம் எம் சமுதாய நலனே என்றும், கல்வி அறிவு, ஒழுக்கத்திலும் சிறந்த பிரசைகளாக தம்பிள்ளைகளை உருவாக்க வேண்டியது பெற்றோர் ஆசிரியர் கடமை என்றும் செயன்முறையில் நீங்களே உதாரணமானீர்கள் எமக்கு.

தடைகளையும் மீறிச் செல்லும் நதிகளின் பாதையில் தான் தாவரங்களின் வாழ்வு செழிக்கும் அது போலத் தங்கள் வழிகாட்டுதலில் என்றும் தளரா மனத்தினராய் செயற்பட உறுதிகொள்வதுடன் தங்களின் உடல் உள சமூக ஆத்மீக நலன் என்றும் தொடர இறையருள் வேண்டி மனதார வாழ்த்துகின்றோம்.

திருநெல்வேலி சிமாட் கிட்ஸ்.

# பவளவிழா காணும்
# உயர்திரு. அப்பாத்துரை பஞ்சலிங்கம் அவர்கள்

மாணவர்களிடையே ஆங்கில அறிவு குறைந்து வருகின்றமையைக் கண்டும் அது இக்காலகட்டத்திற்கு மிகவும் முக்கியமானது என்பதனை உணர்ந்து அதனைச் சிறுவயதினிலேயே புகுத்துவது நல்லது என்ற முன்பள்ளிச் சிறார்களுக்கு (கிட்ஸ் பாக்) மூலம் ஆங்கிலத்தை மேம்படுத்தி வருகின்றார். மேலும் வறிய மக்களிடையே எழுத்தறிவு குறைந்து வருகின்றமையைக் கண்டு அதனை மேம்படுத்துவதற்கு மிகவும் பின்தங்கிய பகுதிகளிலுள்ள முன்பள்ளிகளைச் சீர்செய்தும், புதிதாக அமைத்தும் அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளுடன், எழுத்தறிவையும் உரும்பிராய் ஞானவைரவர் கோயில் தர்மகர்த்தா சபை கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தினூடாக வளர்த்த வருகின்றார். இவருடைய ஆளுமையும், அறிவும், அனுபவமும் இவரின் செய்கைகளை எடுத்துக் காட்டுகின்றது.

இவருடைய சேவை நீடித்து நிலைத்து நிற்க வேண்டுமென எல்லாம் வல்ல ஞானவைரவர் சுவாமி அருள்பாலிக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.

உரும்பிராய் ஞானவைரவர் கோயில் தர்மகர்த்தா சபையும்
கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியமும்.

# நுண்ணறிவுக் கனலோனே, நூலோரின் கனவானே நின்பணி வளர்மதி போல் சிறப்புற வாழ்க

கொக்குவில் ஈன்ற தலைமகன் ஒருவருக்கு இன்று பவளவிழா. தான் கற்ற கொக்குவில் இந்துவை முன்னணிப் பாடசாலையாய் மிளிரச் செய்த சிற்பி. ஆசிரியராய், அதிபராய், சிறந்த கல்வி நிர்வாகியாய் எல்லாவற்றிற்கும் மேலாய் மனித நேயம் மிக்க சமூக சேவகராய் என தான் வரித்துக்கொண்ட எல்லாப் பாத்திரங்களிலும் சிறப்பான வகிபங்காற்றி பஞ்சகலசமாய் துலங்கிட்ட செம்மலே வாழ்க.

"வயிற்றுக்கு சோறிட வேண்டும், வாழும் மனிதர்க்கெல்லாம் பயிற்றிப்பல கல்வி தந்து பாரை உயர்த்திட வேண்டும்" என்ற பாரதி எம் ஆசான் உயர்திரு.அ.பஞ்சலிங்கம் அவர்கள் 75 ஆவது அகவையினை நிறைவுசெய்திடும் இவ்வேளையில் அனைவருடன் இணைந்து நாமும் வாழ்த்துகின்றோம்.

எமது வளர்மதி முன்னேற்றக் கழகத்தின் சமூகசேவை அமைப்பாகிய வளர்மதி நிறைவாழ்வகத்தின் உருவாக்கத்திற்கு வித்திட்டு ஸ்தாபகர்களில் ஒருவராய் பணிசெய்து 2002 ஆம் ஆண்டிலிருந்து போசுஷகராக செயற்பட்டு வாழ்வில் அல்லலுறும் அடித்தட்டு மக்களினது குறிப்பாக மழலைகளின் கல்விக்கண்ணை அகலத் திறந்திடும் அரிய பணியினை ஆற்றிவரும் பேராசானை வாழ்த்துகின்றோம்.

தன் அனுபவங்கள் அனைத்தையும் பட்டறிவுக்குட்டுத்தி தான் புகுந்த உரும்பிராய் கிராமத்தின் ஞானவைரவர் சுவாமி கோயில் தர்மகர்த்தா சபையைத் தளமாகக் கொண்டு நம்பிக்கை நிதியமொன்றை ஏற்படுத்தி சிறார்கல்வி, சமூகசேவை எனபற்பல அரிய சேவையினை சிறப்புற ஆற்றிவரும் எம்பேராசான் இன்னும் பல்லாண்டுகாலம் சீரும் சிறப்பும் பெற்று பெருவாழ்வு வாழ வாழ்த்துகின்றோம்.

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம்
வளர்மதி நிறைவாழ்வகம்,
சம்பியன் லேன்,
கொக்குவில்.

# கொக்குவில் மத்தியின் ஆசிச்செய்தி

கொக்குவில் மத்திய சனசமூக நிலையமானது விளையாட்டுத்துறைகளில் பல்வேறு தடைகளைத் தாண்டி தற்பொழுது யாழ்மாவட்டத்தில் பாரியதொரு வளர்ச்சியை பெற்ற கழகமாக காணப்படுகின்றது. அந்தவகையில் எமது சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தின் ஆலோசகராக இருந்து எமது கழகத்திற்கு பல்வேறு ஆலோசனைகளையும், கருத்துகளையும் வழங்கி எமது நிலையத்திற்கும், கொக்குவில் சமூகத்தின் வாழ்வியல் வளர்ச்சிக்கு அளப்பிரிய சேவைகளைச் செய்து வருகின்றார். இவர் எமது கழகத்தின் மூத்த கல்விப்புலம் சார்ந்த புலமையாளராக விளங்கிவருகின்றார். அந்த கல்விப்புலத்தின் ஊடாக பல்வேறு துறைகளில் தன்னை நிலைநிறுத்தி பல்வேறுபட்ட மக்களின் தேவைகளை நிறைவேற்றி வருகின்றார். அந்தவகையில் இன்னும் பல நூறாண்டுகாலம் நீடித்து ஆயுளுடனும் நல்ல ஆரோக்கியமாக இருந்து எமது சமூகத்திற்கு இன்னும் பல சேவைகளை ஆற்றவேண்டுமென கூறி எல்லாம்வல்ல கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமிகளின் ஆசீர்வாதங்கள் என்றென்றும் இருக்க பிரார்த்திக்கின்றோம்.

தலைவர்,<br>
கா.சுதாகரன்,<br>
கொக்குவில் மத்திய சனசமூக நிலையமும்,<br>
விளையாட்டுக்கழகமும்.

# அகவை எழுபத்தைந்தை அடைந்த என் ஆசான்

நந்திக்கொடி ஓங்கு புகழ் யாழ்நகரின்
செந்தமிழும் சைவமும் தழைத்தோங்கு புகழ்
கொக்குவிலூர் கோமான் அப்பாத்துரை தம்பதிகளின்
அரும் புதல்வா பஞ்சலிங்கம் ஆசானே

கல்வியதை கருவறையி லிருந்து பெற்று
துல்லியமாய் இளமையதில் கற்றறிந்த வித்தகர்
கொக்குவில் இந்துவின் கடைந்தெடுத்த செல்வமகன்
இரசாயனத்தை பட்டப்படிப்பாக்கி பகிர்ந்த ஆசான்

கொக்குவில் இந்துவின் மாணவனாய் மலர்ந்து
கொக்குவில் இந்துவின் ஆசானாய் மிளிர்ந்து
கொக்குவில் இந்துவின் அதிபராய் யாண்டு
கொக்குவில் இந்துவின் மூத்தவனாய் முன்நிற்பவரே

வெள்ளத்தால் கொள்ளாத வெந்தணலால் வேகாத
செல்வத்தை அள்ளிக் கொடுத்த ஆசான்
கடமை கண்ணியம் கட்டுப்பாட்டை உடமையாக்கி
சான்றாண்மையைத் தனதாக்கிய தகவோனே ஆசானே

பெற்றபிள்ளையைப் போல் கற்கும்பிள்ளையைக் கருதி
கடந்த பரீட்சையில் வெற்றி பெற்றால்
பெற்றபொழுதில் பெருதுவக்கும் தாய்போல் நின்று
உற்றதேகம் உருகிடும் உளம் கொண்டவரே

கல்வியதைக் கடைச் சரக்காய் காசிற்கு
விற்கும் காலமதில் கண்ணியமாய் கடமையதை
கடையிடை என்று கருதாவுளத்தோடு கல்வியதை
துல்லியமாய் எமக்களித்த உத்தமனே ஆசானே

அதிபராய் கொக்குவிலை ஆண்ட காலம்
கொழுந்துவிட் டெரிந்த கொடும்போர் சூழ்ந்தாலும்
எண்ணற்ற இடர்கள் நேரில் வந்தும்
திண்ணமுடன் இந்துவை சீர்தூக்கிய சீலனே

அகவைபல கடந்தும் ஆற்றும் உம்சேவை
கல்விக்கும் கல்லூரிக்கும் மட்டுமல்லா ஊருக்கும்
உவந்து நிற்கும் உம்பாங்கை உளமார
கரம் கூப்பி வணங்கி வாழ்த்துகின்றோம்

அகவை எழுபத்தைந்தை யடைந்த எம்குருவே
உவகையுடன் உம்குடும்பம் நீவீரும் தளர்விலா
பகை ஏதும்பற்றாது பல்லாண்டு வாழ
மாணவனாய் மனமார வாழ்த்துகிறேன் வாழ்க வாழ்க

ப.ஜெகநாதன் J.P
பழைய மாணவன கொ.இ.க
கொழும்பு

# ஜேர்மனி வாழ் பழைய மாணவர்களின் வாழ்த்துச் செய்தி

எங்கள் முன்னைநாள் அதிபர் திரு.அ.பஞ்சலிங்கம் அவர்கள் பவளவிழாக் காணும் போது அவரின் மாணவர்கள் அவரை வாழ்த்துகின்றார்கள். அவர்களுடன் சேர்ந்து ஜேர்மனி வாழ் கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர்களும் எம் ஆசிரியரை வாழ்த்துகின்றோம். கொக்குவில் இந்துவின் மாணவன், ஆசிரியர், உப அதிபர், அதிபர் என கல்லூரியின் வளர்ச்சியுடன் தானும் வளர்ந்து பலரின் பாராட்டையும் பெற்றவராக, பெரு மதிப்புக்குரியவராக வாழ்ந்து வருகின்றார். மாணவனாக ஆரம்பித்த காலம் முதல் இன்றுவரை கல்லூரியின் வளர்ச்சி, உயர்ச்சி என்பவற்றில் மிகுந்த ஆர்வத்துடனும் அர்ப்பணிப்புடனும் செயலாற்றி வருவதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றோம்.

திரு.பஞ்சலிங்கம் அவர்கள் இரசாயனவியல் கற்பிப்பதில் ஒரு சிறந்த ஆசிரியர். மாணவர்கள் இப்பாடத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். எம்மில் பலர் அவரிடம் கல்வி கற்றதையிட்டு பெருமைப்படுகின்றோம். அவரிடம் ஆசிரியருக்குரிய இலக்கணங்கள் பல உள. மாணவர்களின் முன்னேற்றம் அவரின் குறிக்கோள், அமைதி, அடக்கம், நிதானம் எனப்பல அருங்குணங்கள் கொண்டவர்.

ஓய்வுபெற்ற பின்பும் பொதுத் தொண்டுகள் செய்தும், தன் கல்வி அறிவை பயிற்சி பெறும் மாணவர்களுக்கு இன்றுவரை புகட்டியும் வருகின்றார். தனது குடும்பத்தினருடன் வாழ்ந்து வரும், நாம் அன்புடனும் பெருமதிப்புடனும் போற்றும் இப்பெரியார் அவர்கள் குலதெய்வம் உரும்பிராய் ஞானவைரவர் சுவாமியின் அருளாசியுடன் மேலும் பல்லாண்டுகள் சிறப்பாக வாழவும் தொண்டு பல செய்யவும் அவனருள் வேண்டுகின்றோம்.

கொக்குவில் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் (ஜேர்மனி)

# தரணியில் வாழ்க நீடூழி !

பிறந்தவரெல்லாம் பெருமை மிக
சிறந்தே வாழ்வது இல்லையம்மா
மறைந்தே போகும் வாழ்வதனில்
மாணிக்கமாவார் சிலரே தான். (விருத்தமாக)

அந்த மாணிக்கம் எங்கள் பஞ்சலிங்கம்
அவர் மாநிலம் போற்றிடும் தங்கமகன் (2 தடவை)

பாணன் பரிசாம் யாழ்ப்பாணம் – அங்கு
பண்புடைய பதியது கொக்குவிலாம்
அது தந்தது தந்தது பஞ்சலிங்கம்
புது அன்புடைப் பாதை கண்டிடவே (அந்த)

கலைமகள் அருளும் வழங்கிடவே
கல்வியிற் சிறந்தார் உயர்ந்தாரே
விலையில் வாழ்வை நற்பணிக்காய்
விருப்புடன் உவந்தே உயர்ந்தாரே (அந்த)

காலங்கடந்தது காலங்கடந்தது
கல்விப்புலம் பல பட்டங்கள் தந்தது
சொல்லில் அடங்காப் புகழுடையான்
கல்லும் கரைத்தே காலம் வென்றார் (அந்த)

கொக்குவில் இந்து அன்னை புகழ்
திக்கெட்டும் எட்டவே சேவை செய்தார்
விக்கித்து நின்ற சமூகமது
வியக்கும் வகையில் புதுமை செய்தார் (அந்த)

ஆசான், அதிபர், உயர்பதவி
அமர்ந்தார்க்கிதுவே பணியென்று
அகிலம் அறியும் வழிசமைக்க
துயிலும் மறந்தார் தூயவரே! (அந்த)

அன்னை மடியில் கட்டடங்கள்
அழகாய் எழுந்து உயர்ந்தனவே
கழகங்கள், மன்றங்கள் கவினுடனே
கல்லூரியின் புகழை உணர்த்தினவே (அந்த)

உலகில் பரவி உலவிவரும்
கொக்குவில் இந்து மைந்தர்தமை
ஒரு குடையின் கீழ்க் கொண்டு வந்தே
பெரும் படை கொண்டார் பஞ்சலிங்கம் (அந்த)

ஓய்வு வந்து அழைத்தாலும்
ஓயாப் பணியே அழகென்று
ஓடியாடிப் பணி புரிந்து
வாடிய கல்வி வளர்க்கின்றார் (அந்த)

அகவை எழுபத்தைந்தெனினும்
அகமோ இவர்க்கு ஈரெட்டாம்
தகைமை கொண்ட தனியழகே
நீ தரணியில் வாழ்க நீடூழி!

ஆக்கம்
திருமதி.ஜெ.கந்தவேள்

# கொக்குவில் இந்து அன்னையின் சரித்திரம் படைத்துயர்ந்த உத்தமர்



உயர்திரு.அ.பஞ்சலிங்கம் அவர்கள் எமது கிராமத்தவர். கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆசிரியராக, உப அதிபராக, அதிபராக இருந்து கல்லூரியின் வளர்ச்சியே தனது வளர்ச்சியெனக் கொண்டு செயற்பட்டவர். அதிபர் பதவியிலிருந்து இளைப்பாறிய பின்னும் கல்லூரியின் வளர்ச்சியையும் உயர்வையுமே சிந்தித்துக் கொண்டிருக்கின்றார். இவர் என்னை கொக்குவில் இந்துக் கல்லூரியிலுள்ள நூல் நிலையத்தை புனரமைக்குமாறு கோரினார். நான் இவரின் கோரிக்கையின்படி நூற்றாண்டுவிழாவின் போது புனரமைத்துக் கொடுத்தேன். அத்தோடு நூல் நிலையத்தை பராமரிப்பதற்கும் "சற்குணம் நிதியம்" என்ற நம்பிக்கை நிதியத்தை அமைத்து ஒரு தொகைப் பணத்தை வைப்பிலிட்டுக்கொள்ளுமாறு ஆலோசனையும் ஊக்கமும் தந்தார். அவரின் ஆலோசனையின்படி அதற்கான ஆயத்தங்களை செய்துகொண்டிருக்கின்றேன். எல்லோரையும் கல்லூரியின் வளர்ச்சிக்கு இணைத்துக்கொண்டு கொக்குவில் வாழ் மக்களின் தலைமகனாக பேரன்பும், பெருமதிப்பும் கொண்டவராக காணப்படுவதோடு இவர் எவரையும் கண்டிப்பாக பேசினாலும் இவரின் கண்டிப்பைக் கண்டு எவரும் கோபப்படுவதில்லை. அதனை அன்பு வார்த்தைகளாக ஏற்றுக்கொள்வார்கள். "பஞ்சகலசம்" என்ற மலரூடாக வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இவர் இன்னும் பல்லாண்டுகள் காலம் குடும்பத்தோடும் சமூகத்தோடும் வாழ்ந்து கல்விப்பணியோடு சமூகப்பணியும் ஆற்ற இறைவன் அருள்புரிய வேண்டுமென இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

திரு.க.வை.சற்குணம்,
சிற்றிசன்,
கொழும்பு, யாழ்ப்பாணம்.

# தோணியாகித் தோள் கொடுத்தாய்!

உயர்ந்தோர் போற்றும் பாதையிலே
விரைந்து வந்த தமிழ் மகனே!
பதிசிறந்த கொக்குவிலின்
மதிசிறந்த மன்னவனே!

"அன்பு" என்ற வலைவீசி
அனைவரையும் அணைத்திடுவாய்!
என்புருக மொழிபேசி
எடுத்த செயல் முடித்திடுவாய் (உயர்)

ஊக்கம் ஆக்கம் தருமென்ற
மந்திரத்தை மனதிற்கொண்டு
தேக்கநிலைச் சமூகமதைத்
தேனாறாய்ஓடவைத்தாய் (உயர்)

பணிவு, நேர்மை, கடமை என்று
துணிந்தே துயர் களைந்தாய்
தணிந்த கோபம், சான்றமென்ற
அணிகள் கொண்டு அகிலம் வென்றாய் (உயர்)

ஏழை கல்விச் சிகரம் தொட
ஏணியாகி நின்றவனே
கல்விக்கடல் கோழை நீந்தத்
தோணியாகித் தோள் கொடுத்தாய் (உயர்)

கல்வியுலகென்றும் உனைக்
கண்ணெனவே போற்றி நிற்கும்
துள்ளிவரு மாணவ வெள்ளம்
உமைச் சுமந்தகலம் வெல்லும் (உயர்)

பவளவிழாக் காணுகின்ற
பஞ்சலிங்கப் பெருந்தகையே
உலக ஊழிக்காலம் வரை
உலவும் உந்தன் புகழ் நிலையே (உயர்)

வாழ்க வாழ்க பஞ்சலிங்கம்
வசந்தம் மட்டும் வாசல்வர
வாழ்க வாழ்க பஞ்சலிங்கம்
வானம் வாழும் காலம் வரை! (உயர்)

ஆக்கம்
திருமதி.ஜெ.கந்தவேள்

# கொக்குவில் தந்த தவப்புதல்வன் திரு.அ.பஞ்சலிங்கம்



அறிவில் தெளிவு, அடக்கத்தில் நிறைவு, ஆற்றலில் அதிர்வு, அனுபவத்திலே முதிர்வு – இத்தனை தகைமைகளும் கொண்ட ஒருவராய் உயர்ந்து இன்று யாழ்ப்பாணம் மட்டு மன்று உலகமே உவந்தேற்கும் பண்பு கொண்டு விளங்குபவர் "பஞ்சலிங்கம்". இவர் கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் என்று எண்ணும் போது கல்லூரி எத்தனை பெருமை கொள் கின்றது. அவரின் பணிச்சிறப்பு கல்லூரி சமூகத்தையும் கல்லூரியையும் உயர்த்தியது உயர்த்துகிறது. இந்நிலை கண்டு ஊர் செழிக்கின்றது உலகம் வியக்கின்றது.

கொக்குவில் மண்ணின் மைந்தனாய் உலகு முன்வைத்து மகிழும் புத்திரனாய், கல்லூரி வளர்ச்சிக்குக் காரணமான நல்லதோர் நட்சத்திரமாய், நாடறிந்த புகழ் பூத்த அதிபராய், சிறந்த கல்வி நிர்வாகியாய், ஆழ்ந்த புலமை கொண்ட வராய், திடமான கொள்கை வகுப்பா ளராய் விளங்கும் பஞ்சலிங்கம் அவர்களால் கல்வியுலகம் பெருமை கொள்கின்றது.

கொக்குவில் இந்து அதிபர் வரலா ற்றில் திரு. அப்பாத்துரை பஞ்சலிங்கம் அவர்களின் வகிபாகம் மிகக்காத்திர மானது. கொக்குவில் இந்துவின் பெருமைக்குரிய மாணவனாக, மாணவர் மனங்கவர்ந்த நல்லாசிரியனாக, சக ஆசிரியர்களைப் பேணி மதித்த நண்பனாக, உபஅதிபராக, அதிபராக, இன்றளவும் கல்லூரி அன்னையின் வளர்ச்சியிலேயே தன் உயிர் மூச்சு எனச் செயற்படும் பழைய மாணவர் சங்கத் தலைவராக எனப் பல கோணங்களில் தன்னை அர்ப்பணித்த பேறு பெற்றவராக விளங்குகின்றார்.

இவர் ஆரம்ப, இடைநிலைக் கல்வியை கொக்குவில் இந்துக் கல்லூரி யிலும் பின் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் பெற்று இலங்கைப் பல்கலைக்கழகம் சென்றார். 1958 ஆம் ஆண்டு விஞ்ஞான பட்டதாரியாக வெளியேறினார். அதே ஆண்டு கொக்கு வில் இந்துக் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராக தன்னை இணைத்துக் கொண்டார். இவர் இரசாயனவியலில் ஆழ்ந்த அறிவும் அதை கற்பிக்கும் திறமையும் உடையவர். அவரிடம் இரசாயனம் கற்போர் மேலதிகப் படிப்பிற்காக வேறு ஆசிரியரை தேட வேண்டிய தேவை இருக்கவில்லை. ஒரு மாணவனின் எதிர்காலத்தை நிர்ண யிக்கும் உயர்தரப் பரீட்சையை அம் மாணவன் நம்பிக்கையுடனும், மன உறுதியுடனும் எதிர்கொள்வதற்கு

திரு.அ.பஞ்சலிங்கம் அவர்களின் வழிகாட்டல் உறுதுணையாயிருந்தது.

1972 ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறியை முடித்துக்கொண்டு 1973 ஆம் ஆண்டு கொக்குவில் இந்து அன்னையிடம் மீண்டும் வரும் போது கொக்குவில் இந்துவின் பழைய மாணவனும் கொக்குவிலைச் சேர்ந்த வருமான திரு.ஆ.மகாதேவன் அவர்கள் அதிபராக இருந்தார். திரு.அ. பஞ்சலிங்கம் அவர்கள் பிரதி அதிபராக பொறுப்பினை ஏற்றார். அதிபருக்கு வலது கரமாக இருந்து கல்லூரியின் தரத்தை பேணிப் பாதுகாத்து வந்தார்.

அதிபர் திரு.ஆ.மகாதேவனின் "செல்லப்பிள்ளையாக" வளர்க்கப் பட்டவர் திரு.பஞ்சலிங்கம் அவர்கள். இவருக்கு முழுச்செயற்பாட்டுச் சுதந்திரம் கொடுத்து ஊக்குவித்தவர் அதிபர் திரு.ஆ. மகாதேவன் அவர்களே. திரு.ச. ஹன்டிப் பேரின்பநாயகம், திரு.சி.கே. கந்தசுவாமி அதிபர்களும் பஞ்சலிங்கம் அவர்களின் திறமை கண்டு மதித்தவர்கள் வளர்த்த வர்கள் ஆவார்கள்.

ஆசிரியராக இருந்தபோது இவரிடம் காணப்பட்ட கற்பித்தற் திறமையும், உப அதிபராக இருந்தபோது காணப்பட்ட நிர்வாகத் திறமையும், கல்லூரிச் சமூகத்துடனான சிறந்த உறவும் 1980 ஆம் ஆண்டு கல்லூரியின் அதிபர் பொறுப்பை இவருக்கு பெற்றுக் கொடுத்தது. தனக்கு முன் கடமை புரிந்த கல்விமான்கள் திரு.ஹன்டிப் பேரின்பநாயகம், நிர்வாகத்திறமை மிக்க சி.கே.கந்தசுவாமி ஆகியோரின் வழிநடந்து கொக்குவில் இந்துக் கல்லூரியை உயர்நிலைக்கு கொண்டு வந்தார். முன்னாள் அதிபர்களையும், கல்லூரித் தாயையும் நன்றியுடன் நோக்கினார். அன்னையின் நிழலில் ஆறி கல்லூரியின் வளர்ச்சியை தன் கண்ணால் பார்த்து அவ்வளர்ச்சிக்கு மனப்பூர்வமான பங்களிப்பினைச் செலுத்திய வேளையில் அவரின் புகழ் எங்கும் பரவியது. 1982 ஆம் ஆண்டு இலங்கை கல்வி நிர்வாக சேவையில் தரம் III இல் உள்வாங்கப்பட்டார். 1985 ஆம் ஆண்டு சுவீடன் சர்வதேச உதவி நிதியம் அளித்த புலமைப்பரிசினையும் பெற்று புதுடில்லி சென்று "கல்வித் திட்டமிடலும் முகாமைத் துவமும்" தொடர்பான டிப்ளோமா பயிற்சியை பெற்றுக் கொண்டார். இப்பயிற்சி நெறிக்கு வடமாகாணத்திலிருந்து முதன் முதலாக அனுப்பப்பட்ட அதிபர் என்ற பெருமையும் அவரைச் சேர்ந்தது.

கல்லூரியை விட்டு விலகி வேறு பாடசாலைக்கு மாணவர் சிலர் செல்ல முற்பட்ட வேளையில் அதைத் தடுத்து நிறுத்தி இக்கல்லூரியின் தரத்தினை உயர்த்துவதற்கு க.பொ.த (சா/த) சித்தியடைந்தவுடன் உயர்தரக் கல்வியை பெற மாணவர்கள் வேறு கல்லூரிக்குச் செல்லும் மரபினில் மாற்றத்தை ஏற்படுத்தியவர் இவரே. மாணவர்கள் உயர்தரத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெறபல்வேறு நடவடிக்கைகளை

மேற்கொண்டார். தனது புதல்வனை இக் கல்லூரியிலே "உயர்தரம்" வரை கல்வி பெற வைத்து உயர்தரப் பரீட்சையில் கணிதப்பிரிவில் சிறந்த பெறுபேறை பெற்று பேராதனைப் பல்கலைக் கழகத்திற்கு பொறியியல் பீட மாண வனாக செல்வதற்கு வழிசெய்தார். இதனால் இக்கல்லூரி பெருமை அடைந்தது.

கல்லூரி அலுவலகத்திற்கு சில பெற்றோர் குற்றப்பத்திரிகை படித்துக் கொண்டு புயல் வேகத்தில் வரும் போது அதிபர் எவ்வித சலனமுமின்றி அவர்களை அமரச் செய்து அன்பாக கதைத்து உபசரித்து தேநீர் வழங்கி தனது வழமையான ஆறுதலான, ஆழமான விளக்கங்களைக் கூறி நிலைமையைப் புரியச் செய்வார். பெற்றோரும் அவரின் உரையாடற் பாங்கின் சிறப்பினால் வந்த விடயத்தை மறந்து செல்வர். இது திரு.அ.பஞ்சலிங்கம் அவரது பிரத்தியேக அணுகுமுறை ஆகும். அதிகம் பேசுவதில் அவருக்கு நம்பிக்கையில்லை. அவரின் வார்த்தைகளால் மாணவர்கள் நன்நெறி திரும்புவர்.

யாழ் நகரில் உள்ள பாடசாலை களுக்கும் இக்கல்லூரிக்கும் இருந்த வித்தியாசங்களை குறைத்து மாண வர்கள் பலர் இக்கல்லூரியில் விரும்பிச் சேர்வதற்கான மாற்றங்களை ஏற்படுத்தி னார். வகுப்பறைக் கல்விச் செயற்பாட்டில் மட்டுமன்றி வெளிப்புறச் செயற் பாடுகளிலும் மாணவர்களை ஈடுபடுத் தினார். ஆண், பெண் இருபாலருக்கும் சமவாய்ப்புக்களை உண்டாக்கினார். சமய அறிவை வளர்க்க ஓதுவார் ஒருவரை நியமித்து பண்ணிசை வகுப்புகளை நடாத்துவித்தார். மாண வர்களின் பழக்க வழக்கங்கள், உடைகள் என்பவற்றில் எல்லாம் மிக கண்டிப்பாக செயற்பட்டார். மாணவர்கள் ஆரோக் கியமான சூழலில் வளர வேண்டும் என்பதுடன் அவர்கள் வெளியேறும் போது முழுமையான நற்பிரஜை களாகவும் இருக்க வேண்டும் என எண்ணி சகல வாய்ப்புக்களையும் வழங்கினார். றோட்டறிக் கழகத்தின் இளைஞர் அமைப்பான "இன்றரக்" கழகத்தை கொக்குவில் இந்துக் கல்லூரியில் உருவாக்கி மாணவர்களின் ஆளுமை விருத்தியையும், தலைமைத் துவப் பண்பும் உயர்ச்சியடைய வழிச்மைத்தார்.

திரு.அ.பஞ்சலிங்கம் அவர்கள் கல்லூரிக்கு காலை 7.00 மணிக்கு வந்துவிடுவார். பின் மாலை 7.00 மணி வரை கல்லூரியில் இருந்து கடமை யாற்றி கல்லூரி வளர்ச்சிக்காக அரும் பாடுபட்டார். இக்கல்லூரியின் இடவசதியின் மையை தீர்ப்பதற்காக மாடிக் கட்டிடங்கள் சிலவற்றை உருவாக்கு வதற்கு பல முயற்சிகளை எடுத்தார். 1985 ஆம் ஆண்டு பிரார்த்தனை (தற்போது கேட்போர் கூடமாக மாற்றப்பட்டுள்ளது) மண்டபத்தையும் கல்லூரியின் தெற்குப் பக்கத்தில் எழுபத்தைந்தாவது ஆண்டு பூர்த்தி நினைவாக இரண்டு மாடிக் கட்டிடத்தையும் கட்டினார்.

இவரின் முயற்சியினால்தான் கல்லூரியில் முதன் முறையாக ஒரு மேற்கத்திய இசைக்குழு உருவாக்கப் பட்டது. இவ்விசைக்குழு இன்றும் சிறப்பாக இயங்கி வருகின்றது. இதற்கான கருவிகளை தனது சுய முயற்சியினால் பல நலன்விரும்பிகளின் ஊடாகப் பெற்றுக்கொடுத்தார். மாணவர்களின் குடும்பச் சூழலை நன்கறிந்து அவர்களின் தேவைகள், திறமைகள் என்பவற்றை இனங்கண்டு அவர்களை வழிநடத்தினார். பிரச்சினைகள் ஏற்படின் நிதானமாக விட்டுக்கொடுக்கும் மனப்பாங்குடன் அமைதியாக பண்பான வழிகளில் தீர்த்து வைப்பார்.

வறிய திறமையான மாணவர் களுக்கு புலமைப்பரிசில் நிதியம் ஒன்றை உருவாக்கினார். மேலும் இவருடைய காலந்தொடக்கம் கல்லூரியின் பரிசளிப்பு விழா ஒவ்வொரு வருடமும் தவறாது நடைபெறும் பாரம்பரியம் ஏற்படுத்தப் பட்டது. இதனால் மாணவர்கள் ஊக்கு விக்கப்பட்டார்கள். மேலும் இவர் அதிப ராக இருந்த காலங்களில் பல புலமை ப்பரிசில் நிதியங்களை உருவாக்கி கல்வியில் ஊக்கமும், பொருளாதார வசதிகளும் குறைந்த மாணவர்களுக்கு மாதாந்தம் உதவி வழங்கி ஊக்கப் படுத்தியது இவரது பெருந்தொண்டாகும். இவரது காலத்தில் மாணவர்களது எண்ணிக்கை 1897 ஆக உயர்ந்தது. கல்விப் பெறுபேறு உயர்வானதாக காணப்பட்டது. தேசிய மட்டத்தில் உயர்தரப் பெறுபேறுகளில் கொக்குவில் இந்துக் கல்லூரி 5ம் இடத்தைப் பெற்று சாதனை நிலைநாட்டியது. பல்கலைக் கழகம் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை பல மடங்காக அதிகரித்தது.

1987 ஆம் ஆண்டு இந்திய இராணு வத்தினரின் யுத்தத்தினால் கல்லூரி சேதம டைந்தது. பாடசாலையை புனரமைப் பதில் இந்தியப் படைத் தளபதிகளுடன் வாதாடி வெற்றி பெற்ற அதிபர் இவராவார். இந்தியப் படையினரின் ஆக்ரோசமான தாக்குதலில் இருந்து தப்பு வதற்காக அகதிகளாக வந்த ஏழாயிரத் துக்கும் அதிகமான அப்பாவித் தமிழ் மக்களுக்கு அடைக்கலம் கொடுத்து காப்பாற்றிய எமது கல்லூரியை துவம்சம் செய்த போதும், எறிகணைகளால் உயிரிழந்த அப்பாவிக் குடிமக்கள் 33 பேருக்கு கல்லூரி மைதானம் இடுகா டாகிய போதும், நெஞ்சம் தளராது ஓடி ஒளியாது பிரச்சினைகள் அத்தனைக்கும் முகம் கொடுத்து பாடசாலையை மீண்டும் இயக்கியதைக் கண்டு எல்லோரும் பாராட்டினார்கள். இந்தியப்படை அதி காரிகளை பல தடவைகள் கண்டு உருவழிந்து நின்ற பாடசாலைக் கட்டிடத்திற்கும், தொலைந்த உபகரணங் களுக்கும் மாற்றீடாக நிவாரணம் பெற்றுக்கொள்வதில் மிக உத்வேகத் துடன் முனைந்து வெற்றியும் பெற்றார். இது அதிபர் பஞ்சலிங்கத்தின் ஆளு மைக்கு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

இல்ல விளையாட்டுப் போட்டிகளை வருடந்தோறும் நடாத்தினார். மாண

வர்கள் விளையாட்டுத்துறையிலும் பல சாதனைகளை நிலைநாட்டினார்கள். கிரிக்கெற், உதைபந்தாட்டம் போன்ற வற்றிற்கு முக்கியத்துவம் அளித்து மாணவர்களை ஊக்கப் படுத்தினார்.

இவ்வாறு பல சேவைகளை ஆற்றி கல்லூரியின் பேரை புகழை உயர்த்திய திருவாளர் அ.பஞ்சலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு 1991 ஆம் ஆண்டு அதிபராக மாற்றலாகிச் சென்றார்.

2004 ஆம் ஆண்டு "கொக்குவில் இந்துக் கல்லூரியின் கதை" எனும் பெயரில் வெளியிடப்பட்ட மலரில் அதனை எழுதிய திருவாளர் S.இரத்தினப் பிரகாசம் அவர்கள் பஞ்சலிங்கத்தின் காலத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது திரு.பஞ்சலிங்கம் அவர்கள் பின் வருமாறு கூறியதாக மலரில் காட்டி யுள்ளார். "கொக்குவில் இந்துக் கல்லூ ரியை விட்டுச் செல்ல எனக்கு மனம் ஒருப்படவில்லை. அதேவேளையில் யாழ் இந்துவின் அழைப்பை நிராகரிப் பதும் இலகுவானதாக இருக்கவில்லை. முடிவெடுக்க முடியாமல் நான் சங்கடப் பட்டேன். பல்வேறு விடயங்களைப் பற்றியும் சிந்தித்தேன். இறுதியில் கொக்குவில் இந்துவின் வளர்ச்சிக்கு என்தோளோடு தோள் நின்று பாடுபட்ட ஆசிரிய நண்பர்களுக்கு என் நன்றிக் கடனைச் செலுத்தக்கூடிய நல்ல ஒரு சந்தர்ப்பத்தை நான் நழுவ விடக்கூடாது என்ற முடிவில் யாழ் இந்துக் கல்லூரிக்குச் செல்லத் தீர்மானித்தேன். இதனால் கொக்குவில் இந்துக் கல்லூரியின் உள்ளக நிர்வாகத்தில் என் நண்பர்கள் பலருக்கு பதவி உயர்வு கிடைப்பது சாத்தியமாயிற்று" என்று பதிலளித்தார். எத்தனை பேரால் இவ்வாறு சிந்தித்து செயலாற்ற முடியும் என்பது சிந்தனை க்குரியது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் திரு.அ.பஞ்சலிங்கத்தின் அதிபர் காலம் கல்விச் செயற்பாடுகளில் மட்டுமல்ல புறச் செயற்பாடுகளிலும் புகழ் பரப்பிய காலமாகும். எவ்வளவோ கஷ்டங்களின் மத்தியிலும் அக்காலத்தில் கல்லூரி ஈட்டிய சாதனைகள் பொன் எழுத்துக களினால் பொறிக்கப்பட வேண்டியவை. பரீட்சை பெறுபேறுகளின் முதன்மை நிலை, விளையாட்டுப் போட்டிகளில் சிறப்பிடம், மைதான விரிவாக்கத்தை முதன்முதலில் ஆரம்பித்து வைத்தமை, பெற்றோர் – மாணவர் – ஆசிரியர் கலந்துரையாடல்கள், பழைய மாணவர் சங்கங்களுடன் நெருங்கிய உறவு, நூற்றாண்டு மலர் வெளியீடு, பல்வேறு மாணவர் சங்கங்களின் தீவிர செயற்பாடுகள், சஞ்சிகை வெளியீடுகள், நூல்நிலைய விஸ்தரிப்பு முதலானவை சிறப்பிற்குரிய செயற்பாடுகளாகும். இடர்கள் சூழ்ந்த காலகட்டத்தில் மின்சாரம் இன்றி மாணவர்கள் கல்வி கற்க கடினமான சூழ்நிலையிலும் வால்ரியூப் கட்டையைக் கொண்டு ஜாம் போத்தலில் மண்ணெண்ணெய் விளக்கு தயாரித்து மாணவர்கள் கல்வி கற்ற நிலையில் உயர்தர மாணவர்களுக்கு

ஆசிரியர்கள், பழைய மாணவர்களி னூடாக பல மேலதிகமான வகுப்புக்களை நடாத்தி கல்லூரி வரலாற்றில் ஒரே தடவையில் தோற்றிய 200 மாணவர் களில் 128 மாணவர்கள் பல்கலைக் கழகம் செல்வதற்கு தகுதியுடைய வர்களாக்கிய பெருமையும் திருவாளர் அ.பஞ்சலிங்கத்திற்கே உண்டு. அக்காலம் "பஞ்சலிங்கம் சகாப்தம்" என்று கூறினால் கூட மிகையாகாது.

1992 ஆம் ஆண்டு கல்வி நிர்வாக சேவை தரம் II இற்கு பதவி உயர்த்தப்பட்டார். இலங்கையின் புகழ் பூத்த தேசியக் கல்லூரிகளுள் ஒன்றான யாழ் இந்துவின் அதிபர் பதவியைத் திறம்பட வகித்துப் புகழ்பூத்த அதிபர் வரிசையில் தன்னையும் இணைத்துக் கொண்டவர் திரு.அ.பஞ்சலிங்கம் அவர்கள்.

1995 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் யாழ்ப்பாண நகரில் யுத்தம் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாக தென்மராட்சியிலும், வடமராட்சியிலும் தஞ்சம் புகுந்த வேளையில் தமிழர்களின் சொத்து கல்வி என்ற நிலையில் மாணவர்கள் கல்வி கற்பதற்கு சாவகச் சேரி இந்துக் கல்லூரியில் சில பாடசாலை களுடன் சேர்ந்து கல்விச் செயற் பாடுகளை ஆரம்பித்தார். இடம் பெயர்ந்திருந்த போது 08.01.1996 அன்று தனது அதிபர் பதவியில் இருந்து ஓய்வுபெற்று தனது நண்பனாகிய கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபராக இருந்த திரு.இ.மகேந்திரன் அவர்களிடம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் பதவியை ஒப்ப டைத்தார்.

இவர் கொக்குவில் இந்துவை விட்டுப் போனாலும் கொக்குவில் இந்துவின் வளர்ச்சியில் என்றும் கரிசனையு டையவராகவே விளங்கினார். 1996 ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற பின் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக செயற்பட்டார். பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக இருந்த காலத்தில் 1999 ஆம் ஆண்டு கல்லூரியில் கணனி கூடம் ஒன்றை அமைத்து றோட்டரிக் கழகத்தின் உதவியுடன் திரு.கேதீஸ்வரன் மூலம் கொழும்பு, லண்டன், கனடா போன்ற நாடுகளில் பழைய மாணவர்களின் உதவியுடனும் கணனிகள் சிலவற்றையும் பெற்றுக்கொடுத்தார். இக்கல்லூரியில் கூடைப்பந்தாட்ட திடல் இல்லாத குறை யை நிவர்த்தி செய்வதற்கு அவரின் நண்பர் பொறியியலாளர் திரு.இ. நடராஜாவை அணுகி அவரைக்கொண்டு 1999 ஆம் ஆண்டு ஒரு கூடைப்பந் தாட்டத்திடலை அமைப்பித்தார்.

இவர் யாழ் றோட்டரிக் கழகத்திலும் தலைவராக இருந்து பல சமூகத் தொண்டுகள் ஆற்றியுள்ளார். இவர் றோட்டரிக் கழகத்தின் இளைஞர் கழகமாகிய இன்ரறக் கழகங்களை ஏனைய பாடசாலைகளில் நிறுவுவதற்கு அயராது உழைத்தார்.

திரு.அ.பஞ்சலிங்கம் அவர்களின் திறமை, நாணயம், நேர்மை ஆகிய வற்றைக் கருத்திற்கொண்டு அரசாங்கம் 2002 ஆம் ஆண்டு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் அங்கத்தவராக இணைத்துக்கொண்டது. இவ்வாறான பொறுப்பு வாய்ந்த பதவிக்கு தெரிவு செய்யப்பட்டமை எல்லோரையும் பெருமையடைய வைத்தது. பதவிகள் எல்லாம் அவரையே தேடி வந்தன. சில உயர் பதவிகளில் இருப்பவர்கள் பதவிகளால் பெருமையடைவது வழக்கம். ஆனால் பஞ்சலிங்கம் அவர்கள் பதவிகளில் இருந்ததனால் பதவிகளே பெருமை அடைந்த புதுமை இருந்தது.

1983இல் கொழும்பில் பாரிய அனர்த்தங்கள் நடந்தமையால் கொக்கு வில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளை சிலகாலம் இயங்காமல் இருந்தது. சோர் வுற்றிருந்த சங்கத்தவரை தட்டியெழுப்பி அவர்களுக்கு புத்துணர்வு கொடுத்து அவர்களுக்குள் அடங்கியிருந்த உணர்ச் சிகளை தூண்டிவிட்டவர். கொழும்புக் கிளைக்கு புத்துயிர் அளித்தவர் திரு.அ.பஞ்சலிங்கம் அவர்கள். மேலும் இவருடைய சேவைகளை பாராட்டி கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளை 30.06.2002 இல் ஒரு இராப்போசன விருந்துபசாரத்தை கொழும்பு ஹோட்டல் தாஜ் சமுத்திராவில் அளித்து கௌர வித்தது. 07.07.2002 இல் கொக்குவில் இந்துக் கல்லூரியின் லண்டன் பழைய மாணவர் சங்கத்தினால் லண்டனில் இவர் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

2002 ஆம் ஆண்டில் கல்லூரிக்கு நிதி சேர்ப்பதற்காக கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வேண்டுதலுக்கு அமைவாக ஐக்கிய இராச்சியம் சென்றபொழுது திரு.சி.கே. கந்தசுவாமி அவர்கள் "தம்பி உனக்குப் பழைய மாணவர்களின் நன்மதிப்பு உண்டு எனவே இச்சந்தர்ப்பத்தினை பயன்படுத்தும்" என்று திருவாளர் அ.பஞ்சலிங்கம் அவர்களை ஊக்கப்ப டுத்தினார்.திரு.சி.கே.கந்தசுவாமியின் பேச்சு பஞ்சலிங்கம் அவர்களது குறிக் கோளை அடைவதற்கு உற்சாகத்தை ஊட்டியது. நிதிசேகரிப்பிலும் வெற்றியும் கண்டார்.

கொக்குவில் இந்துக் கல்லூரிச் சமூகத்தினர் திருவாளர் அ.பஞ்சலிங் கத்தின் சேவைகளைக் கௌரவிக்கும் முகமாக "பஞ்சலிங்கம் கேட்போர்" கூடத்தை அமைத்துள்ளார்கள். இக்கேட் போர் கூடமானது கல்லூரியில் கலைக் கூடமாக ஒளிவீசிக் கொண்டிருக்கி ன்றது.

மேலும் கல்லூரிக்கு நூற்றாண்டு கட்டிடம் அமைக்க வேண்டிய தேவையை உணர்ந்து கொடை வள்ளலும் கொக்கு வில் இந்துவின் தவப்புதல்வனுமாகிய திருவாளர் மா.சுப்பிரமணியம் அவர்களை ஊக்குவித்து மூன்றுமாடிக் கட்டிடத்தை நூற்றாண்டு கட்டிடமாக அமைப்பித்தார்.

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் நம்பிக்கை நிதியத்தின் நிரந்தர உறுப்பினராக

இருந்து நிதியம் நல்ல முறையில் இயங்கு வதற்கு பணியாற்றி வருகின்றார். கல்லூரியில் பௌதீக வளங்களை அதிகரிப்பதற்கு வழிகாட்டியாக இருந்து செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார். இவரது அயராத முயற்சியினால்தான் கல்லூரிக்கு பல காணிகள் கொள்வனவு செய்யப்பட்டன. மைதான விரிவாக்கத் திற்கு இவரது முயற்சியும் காரணமாக அமைந்தது.

ஒரு ஸ்தாபனம் நூற்றாண்டு காலத்தினை பூர்த்தி செய்வதென்பது ஒரு சாதாரண விடயமல்ல. கொக்குவில் இந்துக் கல்லூரி தனது நூற்றாண்டை 2010 ஆம் ஆண்டு விமர்சையாக கொண்டாடியது. இவரது அயராத முயற்சியும் இவ்விழா சிறப்பாக அமை வதற்கு காரணமாக அமைந்தது. நூற்றாண்டு விழாச்சபையினர் இவரின் சேவையைப் பாராட்டி அதிஉயர் கௌரவ விருது வழங்கி கௌரவித்தார்கள். கொக்குவில் இந்துக் கல்லூரியின் வரலாற்றில் தனக்கென தனியிடம் பெற்றவர் இவர். "கொக்குவில் இந்து நமதே" என்ற குறிக்கோளுடன் தானும் இயங்கி பிறரையும் இயங்க வைக்கும் இவர் பணி வார்த்தைகளில் வசப்படா!.

இன்றும் தனது புகுந்த இடமான உரும்பிராயில் உள்ள ஞான வைரவர் கோயிலில் தர்மகர்த்தா சபை தலைவராக இருந்து ஆலய வளர்ச்சிக்கு அயராது உழைத்துக் கொண்டிருக்கின்றார். சிறார்களின் முன்பள்ளிக் கல்வி சிறந்த முறையில் அமைய வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயற்படுபவர் திரு.அ.பஞ்சலிங்கம் அவர்கள். உரும்பிராயில் ஞானவைரவர் சுவாமி கோயில் கல்வி அபிவிருத்தி நம்பிக்கை சபையின் தலைவராக இருந்து பின்தங்கிய கிராமங்களில் 16 முன்பள்ளிகளையும், உரும்பிராயிலும் திருநெல்வேலியிலும் 02 மாதிரி முன்பள்ளிகளையும் திறம்பட இயக்கிக் கொண்டிருக்கின்றார். கொக்குவில் வளர்மதி நிறைவாழ்வகத்தின் போஷகராகவும், கொக்குவில் மக்கள் நலன்புரி நம்பிக்கை நிதியத்தின் போஷகராகவும் செயற்படுகின்றார். தன்னை கல்விப் பணியோடு சமூகப் பணியிலும் இணைத்து மனப்பூர்வமான செயற்பாடுகளை ஆற்றிக் வருகின்றார்.

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும், கொக்குவில் கிராமம் மற்றும் உரும்பிரா ய் கிராமத்திற்கும் திரு.அ.பஞ்சலிங்கம் அவர்கள் வழங்கிவரும் உதவிகள் பெருமதிப்புக்குரியன.

அவரது பெயரையும் நற்பணி களையும் கொக்குவில் சமூகம் என்றும் நன்றியுடன் நினைவுகூரும் என்று வலுவாக நம்ப முடியும்.

**திரு.சி.செந்தில்குமரன்**
**முன்னாள் ஆசிரியர்**
**கொக்குவில் இந்துக் கல்லூரி.**

# கல்விச்சகத்குரு சகசோதி வாழ்க!

கல்விச்சகத்குரு இரதமேறி – கம்பீர உலாவர....
வளர்மதியால் வியந்து போற்றி – சாமரம் வீச....
ஞாயிறு மகிழ்ந்து – நிலாத்திரி தூவ....
ஞானக்கனலோன் துகின்முடி சூடும் திருநாள் – குரு
வம்சம் தலைசிறக்கும்! – இன்பப்பெருநாள் இது!

எளிமைத் தோற்றம் – தெளிந்த நடை,
பேச்சில் நிதானம் – முடிவில் துணிவு,
உடை தடவிய வெண்மை – கடமையில் இனிமை,
ஹாஸ்யத்தில் கண்களில் மிளிரும் சிரிப்பு,
இவைகள் உங்கள் இனிய அடையாளங்கள்!

அடக்கத்தின் துணைவன் – அல்ல
அதிகாரத்தின் எதிரி நீங்கள்!
நுண்ணறிவில் கனலோனாக நூலோரின் கனவானாக....
காந்த உள்ளொளி வீச கின்னரி புறஒளி சிந்தும்....
கலைஞானச் சிந்தனை உங்கள் – வேதம்!
கை வளர் ஒழுக்கம் உங்கள் – தவம்!
கால்வழி (வம்சம்) பெருந்தன்மை உங்கள் – நிஜம்!

அதிப(ர்) த்துவத்தில் சான்றோன் – நீங்கள்!
ஆசிரியர்க்கு நல்ல சஞ்சீவி – நீங்கள்!
மாணவர்க்கு நல்ல சகசோதி – நீங்கள்!
வாழ்வுக்கு நீங்கள் வகுத்த இலக்கணங்கள் – உற்றவர்
வாழ்வுக்கு மட்டும் – அல்ல
மாண்புக்கும் நல்ல நிகண்டுகள்!

கார்காலப் பெருமழையில் தாரகைகள் சிமிட்ட....
யாரிந்த தேவன் என விண்ணவர்கள் மெச்ச....
யாழ் – பெற்ற கோவே!
நின் வளம் வாழ்க! துணை வாழ்க!
பல்லாண்டு எம்முடன் வாழ்க!
வாழ்க வாழ்கவே!

கொக்குவில் வளர்மதி
முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலையமும்
செ.செல்வராசா (நாதன்),ஆ.சத்தியமூர்த்தி
செ.தணிகேஸ்வரன் (கண்ணன்)
ச.இராமநாதன் (JP)இ செ.ஸ்ரீநிவாஸன்.

# கொக்குவில் இந்துவின் வரலாறு விரிக்க வந்த செம்மல்



தொகைவிருத்தி சார்கல்விப் பெறுபேறு அவசியம்தான், ஆனால் இன்று தரவிருத்திக் கல்வியே எமக்கு அதிகம் வேண்டப்படுவது தரவிருத்தியானது கற்றல் கற்பித்தல் வினைத்திறனின் மூலமாகத்தான் கிடைக்ககூடியது அதுதான் உண்மையான பெறுபேறும் ஆகும்.

கட்டிடங்களை காசு இருந்தால் குறித்த நாளில் கட்டி முடித்துவிடலாம். கருத்தமையும் கல்வியை மாணவருக்கு உரிய முறையில் புகுத்தி அக்கல்வியால் அவர்களிடம் பெறவைக்கக்கூடிய நடத்தைமாற்றங்களை அவ்வப்போது நிதானமாக கவனிப்பதோடு ஆசிரியர்களின் வினைத்திறன் வீச்சினை அறிந்தும் மாணவரின் உடல், உள தகுதிப்பாடு அறிந்தும் பொருத்தமான வழிநடத்தல் என்ற பொறுப்பு பாடசாலை முதல்வரையே சார்ந்தது. அந்தவகையிலே இக்கூற்றினை நிரூபித்து முதல்தர முதல்நிலை முகாமையாளராக விளங்கியவர் உயர்திரு ஏ.பஞ்சலிங்கம் ஆவார். கொக்குவில் இந்துவின் விடிவெள்ளியாக ஆயிரத்து தொளாயிரத்தெண்பதுகளில் எமக்கு வாய்த்த பஞ்சலிங்கம் அதிபர் தன் விசேடவிதமான செயற்பாடுகளின் வெற்றியால் நம் கல்லூரியில் இருந்த மற்றைய முதல்வர்களை ஒருபடி விஞ்சியே விடுகின்றார் என்று சொல்ல ஆசைப்படுகின்றேன். கல்விக் கொள்கைகள், கோட்பாடுகள் விதிகள் நியமங்களுக்கு ஏற்ப தானும் நடந்ததோடு தான் முதல்வராய் கடமையாற்றும் பள்ளிக்கூடத்தின் வளர்ச்சி கருதி ஏனைய ஆசிரியர்களை அவ்வாறு நடக்க வைத்து மாணவர்களுடன் மாத்திரமல்ல பெற்றோர்கள் நலன்விரும்பிகள், பழைய மாணவர்களையும் எழுச்சி உணர்வுகளால் உற்சாகப்படுத்தி கொக்குவில் இந்துவின் வளர்ச்சியையே முழு மூச்சாக கொண்ட அதிபர் திரு. ஏ. பஞ்சலிங்கம், உண்மையில் ஓர் உயர்ந்த மனிதர்தான்.

ஒரு பாடசாலையின் முகாமையாளரின் முக்கிய பங்கு பணி எதுவென்பதைச் சிந்தித்து திட்டமிட்டுச் செயலாற்றும் திறன்மிக்க அதிபர் அவர்களின் தீர்க்கமான சிந்தனைகள் சாணனக்கியமான முடிவெடுப்புகள், ஆளுகை சிறப்புக்கள் செயலாற்றும் ஸ்டையில், தான் சார்ந்த பாடசாலையை முன்னணிக்குக் கொண்டுவரக்காணும் கனவுகள் என்பன பிரபல கல்லூரிகளை நடத்தும் மற்றவர்களுக்கும், வளரும் பாடசாலை முகாமையாளர்களுக்கும் நல்லுதாரணங்களாய் அமைய கூடியன.

தரவிருத்தி சார்ந்த கல்வி அபிவிருத்தியானது (Qualitative Educational Development) தொகை

விருத்திக் கல்வி வளர்ச்சியை (Quantitative Educational Development) காட்டிலும் அவசியமானது என்பதை நிறுவவேண்டிய சூழ்நிலையிலே நம் கல்லூரியானது பல முனைகளிலும் வீறுகொண்டு வளர வித்திட்ட பெருமை அவரையே சாரும். இன்றுவரை கொக்குவில் இந்துக் கல்லூரியானது கட்டிடங்களால் பரந்து நிமிர்ந்து விளங்கவும் பெயர்பெறவும் இவரைவிட வேறுயாரும் அவ்வளவு பெரிதாகச் சிந்தித்தாக பாடுபட்டதாக இன்று அறியப்படுவர் எவரும் இலர். தான் பணியாற்றத் தமக்கு முன்னிருந்த பிரபலமான அதிபர்கள், கன்டியர் சி.கேயர் போன்றவர்கள்தான் வழி காட்டியவர் எனக் கூறிக்கொள்ளும் அவரின் பணிவும் நேர்த்தியான பண்பும் மற்றவரை ஏத்தி போற்றும் குருபக்தியும் உண்மையில் எம்மால் நேசிக்கப் படகூடியன.

ஒரு பாடசாலையின் முதனிலை முகாமையாளன் (First lined manager) என்ற பதவியில் தன்னை ஈடுபடுத்திய நாள்களில் எம் அதிபர் பஞ்சலிங்கம் அவர்கள் தன் தனிப்பட்ட நடத்தை களையும் மாற்றிக்கொண்ட காலங்களை நான் ஒரு கணம் எண்ணிப்பார்க்கிறேன். தம் பள்ளிக்கூடம் அமைந்த கொக்குவிற் கிராமத்தின் மூலை முடுக்குகளெல்லாம் சென்று உறவுடன் ஊடாடி சமூக உணர்வு கொண்டு பழகிய முறைமை, குறிப்பாக மாணவரின் பெற்றோரின் குடும்ப நிகழ்வுகளான மங்கல, அமங்கல நிகழ்ச்சிகளில் பங்காளனாகக் கலந்து தாம் சார்ந்த கல்லூரியின் சமூகத்தின் அன்பையும் மதிப்பையும் வசூலித்துக் கொண்ட முறைமை மிகவும் சுவை யானது. இது பாடசாலை முதன்மை முகாமையாளராக நீடிக்க விரும்பும் ஒவ்வொருவருக்கும் நல்ல எடுத்து க்காட்டு ஆகும். இந்நடத்தைகள் யாவும் ஒரு பாடசாலை முதன்மை முகாமை யாளராகும் ஒவ்வொருவருக்கும் நல்ல எடுத்துக்காட்டாகும். ஒரு பள்ளிக்கூட முதல்வரின் இத்தகைய ஆளுமை விருத்திக்கு எவ்வளவு தாக்கம் ஏற் படுத்தக் கூடியன என்பதை பஞ்சலிங்கம் ஐயா அன்றே நன்கு அறிந்து வைத்தி ருந்தபடியால் தான் கொக்குவிலின் வெற்றிகரமான ஒரு நாயகராக, நல்ல தோர் பாடசாலை முகாமையாளராக, நிர்வாகியாகத் திகழவே முடிந்தது. இப்போக்கானது இவ்வதிபர் பேரின் கொக்குவில் மக்கள் வைத்த பேரன்பை நீடிக்கச் செய்ததோ என்னவோ திரு.பஞ்சலிங்கம் இளைப்பாறியும் பதினைந்தாண்டுகள் கடந்துவிட்ட போதி லும் அவர் கிராமத்தின் கொண்மணி மகுடமாகவே கருதப்பட்டு வருகிறார்.

அவர் இளைப்பாறுங் காலத்தில் வட பிரதேசத்தின் பெரிய தேசியப் பாடசாலை யான யாழ் இந்துக் கல்லூரி தேசியப் பாடசாலையில் அவர் ஐந்தாண்டுகள் வரை கடமையாற்றக் கிடைத்தபோதும், அதிபர் அங்கும் எதுவித வேறுபாடும் பாராது தன் கடமையை நிறைவேற்றிய போதும், அப்பாடசாலைச் சமூகம் இவ்வதிபருக்கு கொடுத்த, கொடுத்துவந்த

முதன்மை பற்றி நாம் நினைக்கவில்லை. தாம் பிறந்த கிராமம், தாம் கற்ற கல்லூரி, தாம் விஞ்ஞான ஆசிரியராய்க் களமிறங்கிய கேந்திரம், பின்னர் அதிபராக தலைமையேற்ற காலங்கள் என்பவற்றில் எல்லாம் அவருக்குத் தாங்களாகவே ஒரு தரக்கணிப்புச் செய்த கொக்குவிற் பாடசாலைச் சமூகம், அவர் தனிப்பட்ட வாழ்வுக்குக்கூட பாடசாலை சமூகம் அவருக்கு பலவகையிலும் உதவியிளித்தும் ஆதரவு கொடுத்து வந்தது யாவரும் அறிந்த உண்மை. பாடசாலையால் அவரும், அவரால் கொக்குவில் இந்துவும் அவ்வப்போது பல நன்மைகளைப் பெற முடிந்ததை அறிந் தோர் அறிவர்.

இன்று நூற்றண்டுவிழாக்காணும் எம் கொக்குவில் இந்து ஆரம்பிக்கப் பெற்ற ஆயிரத்துத் தொளாயிரத்து பத்திலே கொக்குவிலிற் பிறந்த என் தந்தையாகிய கல்விமான் தமிழ் அறிஞர் எம். எஸ். இன்றிருந்தால் அவருக்கும் வயது நூறு! பஞ்சலிங்கம் அவர்கள் என்தந்தையாரின் பிரியமான மாணவரில் ஒருவர்.

நான் கல்வித் திணைக்களத்தில் பணியாற்றும்போது ஒரு முறை "கல்வி நிர்வாக சேவையில் இருக்கும் நீங்கள் கல்விப் பணிப்பாளராய் இங்கு வந்தால் என்ன?" என்று கேட்டேன். அதற்கு அவர் சொன்ன பதில் என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. "எனக்கென்றால் கல்வித் திணைக்களத்து மேசைகளைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கோவைகள் புடை சூழ வெறுமனே இருப்பதில் விருப்பம் கிடையாது. அது எனது நோக்கமும் அல்ல. மாறாக நான் ஒரு சிறிய பாடசாலையில்தானும் தலைவராகவே இருக்கவே விரும்புகின்றேன் என்று சொன்னவர் "ஒரு கிராமத்தின் சிற்றுரு"(Miniature Society) என்று சொல்லக்கூடிய பள்ளியின் முதல்வர் ஒருவரே அந்த ஊரின் மன்னனாய் விளங்குபவர், அவரின் பொறுப்பும் மதிப்பும் வேறு. அப்பதவி மகத்தானது கல்வி அதிகாரியின் பணியோ இன்னொரு விதமானது என்று சொல்லிப் புன்னகை புரிந்ததை நினைத்துப்பார்க்க.

உண்மையிலே அதிபர் ஒரு நூதனமான மனிதர்தான். பஞ்சலிங்கம் அதிபருக்கு கொக்குவில் இந்துவின் அதிபர் பதவி வந்து பொருத்தமாகச் சேர்ந்துக் கொண்டது, அப்பொறுப்பு அவர்மேல் சுமத்தப்பட்டது என்பதுதான் உண்மை. some are thrust upon.... கொக்குவில் கிராமத்தின் முடிசூடா மன்னராக அன்றென்ன இன்றும் அவர் விளங்குதற்கு அவர்தம் உறுதியான போக்கும், ஆளுமையின் சிறப்பும் கல்வி சிந்தனையும்தான் காரணம் என்பதை அறிந்தோரே அறிவர்.

இன்னொன்று யதார்த்தமாக நிறை வேற்றிக்கொள்ள முடியாத விடயங்களை யெல்லாம் தம்தோளில் ஏற்றிக் கொண்டு முடிவில் தோல்வி காணும் பலர் ஊடாடும் இந்த உலகிலே தம்மால் திட்டமிடப்படும் விடயங்களிலெல்லாம் வெற்றியையே சாதிக்கும் அவரது போக்கு யாரைத்தான் அதிசயிக்க வைக்காது.

நான் பிறந்தது இரு லீப் வருடம். அன்று எனது ஐம்பதாவது வயது பிறந்தநாள். பொன்விழாவாக நான் புகுந்தவூர் ஊடுவையிலே பெரும் கொண்டாட்டம். அன்று காலையில் பத்திரிகையிலே பார்த்து என் வீடு நோக்கி வந்து என்னை இதமார வாழ்த்திய என் ஆசானை கல்வி வழிகாட்டிய மரியாதைக்குரிய அதிபர் பிரானை நினைத்து பெருமைப் பட்டேன். அதைக் கண்டு நினைந்து நெகிழ்கிறேன்.

ஆம்! கல்விமான் நம் அதிபர் ஏ.பீ அவர்களுக்கு எழுபத்தைந்தென்ன இன்னுமின்னும் எத்தனை பவள விழாக்களை எடுத்தால்தான் ஏது குறை. கொக்குவில் பதியே அதிபர் பிரானின் சேவைகளையும் அவர் தம் நல்ல எண்ணங்களையும் என்றும் வாழ்த்தியபடியே இருக்கும். பஞ்சலிங்கம் ஐயாவின் உடலும் உள்ளமும் மேலும் ஆரோக்கியம் பெற்று, புது எழில்கண்டு நீடூழி வாழ எனது இதமார்ந்த வாழ்த்துக்களைத் தருவதில் பெரிதும் மகிழ்கிறேன். இந்த அரிய வாய்ப்பினைத் தந்த பவளவிழாச் சபைக்கும் எனது நன்றி கலந்த பாராட்டுக்களையும் உரித்தாகி மகிழ்கிறேன்.

வாழ்க அதிபர் பஞ்சலிங்க பேராசான்! வளர்க நம் இந்துக் கல்லூரி! வாழ்க கொக்குவில்! என்று என் அப்பன் ஸ்ரீகிருபாகர முருகன் துணையையும் நாடி அமைகிறேன்.

**"நீயே வித்தையின் உறையுள்,**
**நினதே எங்களின் உயர்வு**
**நினதடியேத்துவோமே"**

"கலாபூஷணம்"

எம். எஸ். ஸ்ரீதயாளன் சின்னத்தம்பி (M.Phill. Dip.in. Edu. J.P)

உதவி பணிப்பாளர் கல்வி அமைச்சு இலங்கை – ஓய்வுநிலை

துணை பணிப்பாளர் இந்து காலாசர அமைச்சு – ஓய்வுநிலை

# பஞ்ச ஆயுதம்

புதுவுடை கோட்டு சூட்டுப்
புன்னகை தொலைத்த மூஞ்சை
குதிநடை கரத்திற் கம்பு
குறிசுடும் கண்கள் தானே
பொதுவுடை அதிபர்க் கென்ற
பொதுநடை மாற்றி வெள்ளைக்
கதரிலே வந்தார் காந்தி!
கலைப யில்க ழகத்திற்கு

கொஞ்சம் நாம்பிந்திப் போனால்
கொஸ்ரலால் எட்டிப் பார்த்து
இஞ்சேடா மச்சான் "சென்றி"
இருக்குதோ என்று கேட்டால்
"பஞ்சரோ"? சைக்கிள் என்று
"பஞ்சரே" கேட்பார் அன்பு
கொஞ்சிடும் விழியால் எங்கள்
குற்றங்கள் உணர வைப்பார்

கண்களில் குறும்பு : பேச்சோ
காவியக் கரும்பு : எந்தத்
தொண்டையும் விரும்பு என்று
தோளினைத் தட்டும் தெம்பு
அன்பவர் கம்பு, கொண்ட
ஆளுமை அவரின் அம்பு
சொன்னதைச் செய்யும் பண்பில்
சோராத இரும்பே! நம்பு

வேறு

இலங்கையினை ஆளுபவர் வந்தால் கூட
"இந்துவினை" ஆளுவது சுலபம் அல்ல
விலங்குகளே பூச்செண்டாய் மாறும் இங்கே

விரிகின்ற பூக்கள் சில விலங்கும் ஆகும்
கலங்குகிற கண்களுக்குள் பன்னீர் பொங்கும்!?
கனல்சொரியும் தீவிறகும் கண்ணீர் சிந்தும்
சிலந்திவலைக் குள்ளிருந்தும் "சைவம்"! உண்ட
சீரியரே உம்மனதை உடையே காட்டும்

புன்னகையாம் மகுடியினால் பாம்பை ஆட்டும்
புதுவித்தைக் காரரிவர் புறஞ் சொல்வோரின்
சின்னமனம் பிரித்தறியும் சித்தர், இந்துச்
சீமையிலே மணம் பரப்பும் அத்தர், இந்து
வண்ணமகள் தனைவளர்த்து வாலை ஆக்கி
வாழ வைத்துத் துறவுபெற்ற புத்தர்: சின்னக்
கண்ணசைவால் பிரளயங்கள் கலைக்கும் ஆற்றல்
கடவுளுக்கு மட்டுமல்ல இவர்க்கும் உண்டு

வேட்டொலியே மணியொலியாய் இருந்த காலம்
வெள்ளையுடை வீதிவரப் பயந்த நேரம்
நாட்டினிலே வேலி பயிர் மேயப் பார்க்க
நாக்கிழந்து கமக்காரர் நின்றார் ஓரம்
பேடேறிச்! சேவல்களை மிதித்த காலம்
பெயருக்கு அதிபரில்லை நாங்கள் என்று
சூடேறிப் பாய்ந்த புதுவீக்ஷ்மன் : என்றும்
"சுபநேரம்"! எங்களுக்குத் தந்த தெய்வம்

மெழுகுவர்த்தி என்றும்மைக் கூறிப் போற்ற
மெழுகல்ல உம்முறுதி இரும்பே ஆனால்
பழுதற்ற உம்முடையும் மனதும் பார்த்தால்
பால் நிறமே, பாலென்றால் பலநிமி க்ஷத்தில்
புழுநெளியும் பொருள், உம்மைப் புக்ஷ்பம் என்றால்
பூத்து சில நாட்கருகும் புகழா கொண்டீர்?
வழியறியேன் உமக்குவமை கூறி வாழ்த்த
வயதுமில்லை எந்தனுக்கு "தமிழே" வாழ்க!

ஆக்கம்
ச.முகுந்தன்

# அன்பின் ஆசிரியர் அவர்களே!

அறிவுக்கு ஆசிரியனாகி
ஆளுமையால் அதிபராகி பாடசாலைக்கு புகழேற்றி
இளமையிற் கல் சிலையில் எழுத்தெனவே
ஈடில்லா கல்வியறிவை எமக்களித்து
உண்மைதனை உணர்ந்து நாமும்
ஊர் மெச்ச வாழ்வதற்கு உறுதுணையாய்
என்றென்றும் மக்கள் வாழ்வு
ஏற்றமுடன் திகழ்வதற்கு
ஐயங்கள் போக்கி அறிவுப்பசி தீர்த்து
ஒளிவு மறைவின்றி ஒற்றுமையாய் நாம் எல்லாம்
ஓங்கு புகழோடு ஒப்பற்ற வாழ்வு வாழ
ஔடதமாய் அருமருந்தாய் வழிகாட்டியரே!

ஆசிரியப் பெருந்தகையே
அறிவுசால் பஞ்சலிங்க அதிபர் அவர்களே
கொக்குவில் மக்கள் நலன்புரி நிதியப் போசகரே
பவள விழாக்காணும் நீங்கள் இன்னும்
பல்லாண்டு பல்லாண்டு பார்போற்ற
வாழவேண்டும் என எல்லோருக்கும் பொதுவான
அந்த சக்தியை வேண்டுகின்றேன்

அன்புடன்
ராஜா மகேந்திரன்
கனடா.

# அன்பான அதிபர் பஞ்சலிங்கம் அவர்களே!

ஆசிரிய பணியினுக்கே அழகுசேர்த்தீர்
அன்பாலே எம்மை எல்லாம் கட்டிவைத்தீர்
அதிபராகி கல்லூரியின் தரமுயர தினமும்
அயராது பாடுபட்ட பஞ்சலிங்கப் பெருந்தகையே!

பல்லாண்டு பல்லாண்டு பணிகள் செய்தே
பள்ளியின் தரமுயரப் பாடுபட்டீர்
கல்லாது நின்றிட்ட எங்களுக்கும்
கல்விமேல் காதல்வரப் பாடுபட்டீர்!

பவளவிழாக் காணுகின்ற பண்புடைய
பஞ்சலிங்கப் பெருந்தகையே பல்லாண்டு
நீண்டு புகழோடு நீடுலகில் நீங்கள் வாழ
வேண்டுமென இறைவனிடம் வேண்டுகின்றேன்!

நல்லறிவை நாளும் நாமறியவைத்துக்
கல்வியறிவூட்டி கலங்கரை விளக்காய் நின்று
மற்றவரை வாழ வைக்க மகிழ்வுடனே உழைத்துவரும்
பஞ்சலிங்க ஐயாவே நீங்கள் பல்லாண்டு பல்லாண்டு
வாழவேண்டுமென வாழ்த்து!

யோ. தவலிங்கம்
யோகேஸ்
கனடா.

# யாழ். இந்துக் கல்லூரியின் ஒளிவிளக்கு

யாழ். இந்துக்கல்லூரியின் வரலாற்றிலே கல்லூரிக்குப் பெருமை சேர்த்துத்தந்தவர்களுள் ஒளிவிளக்காகத் திகழ்ந்தவர் திரு.அ.பஞ்சலிங்கம் கொக்குவில் இந்துக்கல்லூரியில் நான் அவரது மாணவனாக இருக்கும் வாய்ப்புக் கிட்டியது சாதாரண தரத்தில் பிரயோக கணிதம் கற்பித்தபொழுது கண்ணியத்துடன், கட்டுப்பாடாக மாணவர்களை வழிநடத்தி தனது கடமையினின்றும் வழுவாத அவர் செயற்பாடுகள் என்னை அடிபணிய வைத்தது.

அவர் யாழ். இந்துக் கல்லூரியின் அதிபராகக் கடமையேற்ற போது நான் அங்கு உபஅதிபராக மீண்டும் அவரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது மாணவனாக இருந்து அறிந்தவை விட எப அதிபராக இருந்தபோது அவரின் பல சிறந்த பண்புகளைக் காணக் கூடியதாக இருந்தது எளிமையான, பிறரைக் கவரக்கூடிய தோற்றம் கொண்ட அவர் தனத சொல்லிலும் செயலிலும் உறுதியாக நின்ற பண்பு போற்றுதற்குரிய

சகல அதிகாரங்களையும் தன்னுள்ளே அடக்கி வைத்திருக்கும் சர்வாதிகாரப் போக்கைத் தவிர்த்து உரியவர்களை இனம் கண்டு அதிகாரங்களை பகிர்ந்தளித்தமை கல்லூரியின் வளர்ச்சிக்கு அடிநாதமாக விளங்கியது. மேலும் கல்லூரிச் சமூகத்தினருடன் நல்லுறவைப் பேணி கல்லூரியின் வளர்ச்சிக்கு அவர்களின் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொண்டார். மாணவரோ, ஆசிரியரோ, பெற்றோரோ யாராக இருப்பினும் அவர்களது குறைகளை நன்கு செவி மடுத்து, தனத தராசில் அக்குறையை நிறுத்து, பரிகாரம் காணும் அவரது பண்பு வியக்கத்தக்கது. எத்தகைய பாரதூரமான பிரச்சனைகளானாலும் மிக நிதானமாகக் கையாளும் தன்மை அவருடன் கூடப்பிறந்ததாகும்.

நான் யாழ். இந்துக் கல்லூரியின் 25 வருட (1980 – 2005) க.பொ.த.(உ/த) பெறுபேற்றை ஆய்வு செய்து வெளியிட்ட போது இவரது காலத்தில் (1991 – 1995) சித்திவீதம் உயர்வாகவும் குறைவாகவும் இருந்ததையும் காணக்கூடியதாகவும் இருந்தது. இவரது அயராத முயற்சிக்குக் கெல்லாம் சிகரம் வைத்தாற்போன்று அவருடைய நிறைவு வருடமான 1995 இல் உயர்தரப் பெறுபேற்றில் ஒரு சாதனையையும் நிலைநாட்டினார். யாழ். இந்துக் கல்லூரியில் இருந்து 1995 இல் 40 மாணவர்கள் பொறியியல்துறைக்கும் 20 மாணவர்கள் மருத்துவத்துறைக்கும் தெரிவு செய்யப்பட்டமை கல்லூரியின் வரலாற்றில் இன்றுவரை முறியடிக்கப்படாத ஒரு சாதனையாக இருப்பது

குறிப்பிடத்தக்கது. மேலும் பரீட்சைத்திணைக்களம் வெளியிட்ட உயர்தரப்பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பான பாடசாலைச்சுட்டி (School Index) திட்டத்தில் கொழும்பு றோயல்கல்லூரிக்குச் சமமாக நின்று முதலிடத்தைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. எல்லாவற்றுக்கும் மேலாக இவர் ஒரு மனிதர் (அவன் தான் மனிதன் ) நல்ல உள்ளங்கள் நிச்சயம் வாழ்த்துப் படவேண்டும்

திரு.பொ.மகேஷ்வரன்
ஓய்வுநிலை பிரதி அபதிபர்,
யாழ். இந்துக்கல்லூரி, உபதலைவர்,
பழைய மாணவர் சங்கம், கொ.இ.க.
ஆசிரியர்
சென்ஜோன்ஸ் கல்லூரி.

# கல்வியின் கலங்கரை விளக்கம்

அ.பஞ்சலிங்கம் என்னும் போது பலருக்கு அவர் ஒரு சிறந்த அதிபர் என்றும் சிலருக்கு சிறந்த ஓர் இரசாயனவியல் ஆசான் என்றும் தெரிந்து இருக்கும் எப்படியும் அவர் மாணவனாக பாடசாலை ஒன்றில் கல்வி பயின்றுதான் வந்திருக்க வேண்டும் என்று தான் எல்லோரும் தெரிந்து இருக்கும் ஆனால் எனக்கு சிறு மாணவனாக, உயர்தர மாணவாக பல்கலைக்கழக மாணவனாக, ஆசிரியராக, அதிபராக ஒரு சிறந்த நிர்வாகியாக மேலும் கொக்குவில் இந்து கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் தலைவனாக நலன் விரும்பிகளின் ஒருவனாகவும் கொக்குவில் கிராமத்தின் நற்பிரஜையாகவும் சிறந்த நல்லொழுக்கமான, அடக்க மான சிறந்த மாணவனாக விளங்கினார். ஒரு தலைசிறந்த தனித்துவமான உயர்தர இரசாயன வியல் ஆசிரியராக பெயர் வைத்துக் கொண்டார். அவரிடம் இராசாயன வியல் கற்றமாணவர்கள் எல்லோரும் அவரது கற்பித்தல் திறமை தனித்துவம் ஆனது என்றும் சீரியமுறையில் விளங்க வைப்பார் என்றும் புகழ்ந்து கொள்வார்.

அதிபராக பணியாற்றிய போது ஆற்றலும் பண்பும் தனித்து வமானது அதிபர் என்ற அதிகாத் தோரணையே மிடுக்கே இல்லாதவர் அவரது தனிச்சிறப்பானது சிறந்த அதிபராக நிர்வாகியாகவும் இருந்த காலத்திலும் பணிவும் அமைதியும் தன்னடக்கமும் ஆகும். ஒரு பொழுதும் அவரிடம் கோபம், கடும்சொற் என்பது தென்படாது ஆசிரியர் கல்விசாரா ஊழியர்களுடன் இதமாகப் பேசி இன்முகம் காட்டி நன்றாக வேலை வாங்கிக் கொள்வார்.

மற்றவர் கோபத்தையும் வெறுப் பையும் தன் சாந்தத்தாலும் இன்முகத்துடன் கூடிய வார்த்தைகளாலும் தோர்கடிகப் பண்ணி விடுவார் இது அவருக்கே உரித்தான தனிப் பாணி இது ஒரு விசேட நிர்வாக திறமையாகும். இத் தனித்துவமான பண்பும் அவருக்கு கல்வித் திணைக் களத்திலும் கல்லூரி ஆசிரியர் மத்தியிலும் நன்மதிப்பையும் புகழையும் ஈட்டிக் கொடுத்த மற்றும் அல்லாமல் அன்றும் இன்றும் அவர் நண்பர்களினதும் பல தரப்பட்ட குழுமத்தியினர் மத்தியிலும் பிரகாசமாக விளங்கச் செய்கிறது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவன் என்பதோடு இரு கல்லூரிகளினதும் சிறந்த அதிபராகவும் பணியாற்றிய பெருமைக்குரியவர் ஆவார் இதுவும் அவருக்கே உரித்தான தனிச்சிறப்பு ஆகும்.

கொக்குவிலில் பிறந்து கொக்குவில் இந்துக் கல்லூரி வளர்ச்சியும், பெருமைக்கும் அயராது உழைத்த உத்தமர் ஆவார். கொக்குவிலின் மைந்தனாக கொக்குவில் இந்துக்கல்லூரி போசகராக அயராது சலியாது, உழைத்தவர் ஆவார்.

விவேகமான விளக்க உடையவர் அன்பானவர் அடக்க முடையவர் பண்பானவர் பழக இனியவர் பெருமை மிக்கவர் மாணவர் திறமை மிக்கவர் மாணவர் திறமை வளர்த்தவர் கல்லூரி அன்பர் கற்றோருக்கு அன்பர் கல்வியின் புலமையும் ஆசிரியப் பணியில் அற்பணிப்புடன் கூடிய விவேகமும் அதிபர் சேவையின் ஆளுமையும் திறமையும் கொக்குவில் கிராமத்திலும் ஏன் எமது சமூகத்திலும் ஒரு நற்பண்பாளராக நற்பிரஜைகாக சமூகத் தொண்டனாக வழிகாட்டியாக தலைசிறந்து விளங்கும். அவர் சேவை தொடர அவர் நீண்ட ஆயுளுடன் தன் குடும்பம் கல்லூரி சமூகம் உயர்வடையவும், பயன்பெறவும் அவருக்கு அருள்ஆட்சி புரிய வேண்டும் என கொக்குவில் கிருபாகர சுவாமிகளின் திருவடி பணிந்து வாழ்த்தி நிக்கின்றேன்.

**திருமதி.நித்தியலட்சுமி குணபாலசிங்கம்**
**J.H.C பழைய மாணவி**
**இளைப்பாறிய ஆசிரியை பேரவை**
**உறுப்பினர்.**

# உயர்திரு.அ.பஞ்சலிங்கம் அவர்கள் காலத்துக்குக் காலம் எழுதிய கட்டுரைகள்

1. பாடசாலை நிர்வாகத்தின் பணிவும் துணிவும்
2. தண்டனையும் பரிகாரமும்
3. ஆசிரியர்களின் தகைமையிலேயே முன்பள்ளிக் கல்வியின் வெற்றி தங்கியுள்ளது
4. ஒழுங்கற்ற அகச் சூழலே..
5. தனியார் கல்வி நிறுவனங்கள் சூழ்நிலைக்கேற்ப பாடசாலைகளுடன் இணைந்து செயற்படலாம்
6. முன்பள்ளிக் கல்வியின் அவசியம் பெற்றோரால் உணரப்பட வேண்டும்

# பாடசாலை நிர்வாகத்தின் பணிவும் துணிவும்

கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபராக 1980 ஆம் ஆண்டு தை மாதம் நான் கடமையேற்றேன். கடமை ஏற்று ஆறுமாதங்கள் கூட நிறைவு பெறாத நிலையில் நடந்த ஒரு நிகழ்வு இன்றும் எனது மனதில் ஆழப்பதிந்துள்ளது. எனக்குச் சரியான மனத்தெம்பு ஏற்படாதகாலம். மேலும் புதிய அரசாங்கம் பதவிக்கு வந்து முன்னைய அரசாங்க உத்தியோகத்தர்கள் புதிய அரசாங்கத்திற்கு விசுவாசமாக நடப்பார்களா என்ற சந்தேகக்கண்ணுடன் நோக்கிய காலம். இந்தப் பின்னணியில் நடந்த இந்த நிகழ்வு கொடுத்த அனுபவம் பிற அதிபர்களுக்கும் உதவியாக அமையும் என நம்புகின்றேன்.

1979 ஆம் ஆண்டில் பரியோவான் கல்லூரியில் நிரூபன் என்ற மாணவன் க.பொ.த (உ/த) வகுப்பில் வர்த்தகப் பிரிவு முதலாம் வருடத்தில் (ஆண்டு 12) கல்வி கற்றுக்கொண்டிருந்தான். பாடசாலையில் கற்றுக்கொண்டு இருக்கையில் மாணவர் தனிப்பட்ட பரீட்சார்த்தியாக க.பொ.த(சா/த) பரீட்சைக்குத் தோற்ற முடியாதென்பது பிரமாணம். இப்பிரமாணத்தைப் பரியோவான் கல்லூரி மிகக் கண்டிப்பாகச் செயற்படுத்தியது. அப்படியிருந்தும் இம்மாணவன் தனிப்பட்ட பரீட்சார்த்தியாக 1980 டிசெம்பரில் நடைபெற்ற க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றி க.பொ.த (உ/த) விஞ்ஞானப் பிரிவில் கற்பதற்கு வேண்டிய பெறுபேற்றினைப் பெற்றுள்ளான். 1980 ஆம் ஆண்டு மே மாதத்தில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவந்ததும் நிரூபன் என்ற இம்மாணவன் எனது கல்லூரியில் க.பொ.த உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவிற்கு அனுமதி வேண்டி எனது கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் ஒருவருடன் என்னிடம் வந்தான்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளாகத் தோற்றியோரை எனது கல்லூரியில் நாம் அனுமதிப்பதில்லை. அதன் பிரகாரம் நான் இடமில்லையென்று கூறியதும் வெளியே போக ஆயத்தப்படுத்தினார்கள். அப்பொழுது அந்த மாணவன் என்னிடம் வந்து, தான் எனது கல்லூரியில் அனுமதி கேட்டதையும் தனிப்பட்ட பரீட்சார்த்தியாகத் தோற்றிய விடயத்தையும் பரியோவான் கல்லூரிக்குத் தெரியப்படுத்த வேண்டாம் என்று ஓர் வேண்டுகோள் விடுத்தான். அப்படியே நானும் உறுதியளித்தேன். இத்துடன் இந்த விடயம் முற்றுப்புள்ளி பெற்றதாக நான் நினைத்தேன்.

ஆனால் 25.06.1980 திகதியிடப்பட்ட கடிதம் ஒன்று கல்விப்பணிப்பாளரிடமிருந்து எனக்குக் கிடைத்தது. அதில் குறிப்பிட்டிருந்தார். "உயர்கல்வி பிரதி அமைச்சர், நிரூபன் என்ற

மாணவனை உங்கள் கல்லூரியில் அனுமதிக்கும்படி என்னை வேண்டு கின்றார். எனவே இவரை க.பொ.த (உ/த) விஞ்ஞானப்பிரிவிற்கு தகுதி உடையவராயின் அனுமதித்து எனக்கு அறியத்தரவும்".

இப்படி ஒரு கடிதம் கிடைத்ததும் சிறிது கோபமடைந்தேன். இப்படி ஒரு மாணவன் தவறான வழியில் ஓர அதிபரை ஆட்டிப்படைக்க இடங் கொடுக்கக்கூடாது என என் மனம் கூறியது. மேலும் அம்மாணவன் கற்ற பாடசாலையிலே விஞ்ஞானப் பிரிவுக்கு அனுமதிக்கப்படாதபொழுது எனது பாடசாலையில் நிர்ப்பந்தத்தின் பொருட்டு அவனை அனுமதித்தால் எனது மாணவர்கள் என்னைப்பற்றி எவ்வாறு சிந்திப்பார்கள்? எனது பாடசாலை இரண்டாந்தரப் பாடசாலையாக கணிக் கப்பட்டு விடாதா? அந்நிலையில் அங்கு கற்கும் மாணவர்களுக்கு ஒரு தாழ்வு மனப்பான்மை ஏற்படாதா? இவ்வாறு எல்லாம் சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்து 30.06.1980 இல் கல்விப்பணிப் பாளருக்குப் பதில் எழுதினேன். "பின்வரும் விடயங்களை உங்களது கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு கின்றேன்."

1. விண்ணப்பதாரி தற்பொழுது பரியோவான் கல்லூரியில் தரம் 12 (ஆண்டு 13) இல் வர்த்தகப் பிரிவில் கல்வி கற்கின்றார். (இறுதிப்பரீட்சை ஆகஸ்ட் 1981).

2. விண்ணப்பதாரி பாடசாலையில் கற்கும்பொழுது தனிப்பட்ட பரீட்சார்த்தியாக க.பொ.த(சா/த) டிசம்பர் 1979 பரீட்சைக்குத் தோற்றி விஞ்ஞானப் பிரிவுக்குத் தகுதி பெறக்கூடிய பெறுபேறுகளைப் பெற்றுள்ளார். தனிப்பட்ட பரீட்சார்த் தியாகத் தோற்றியது அமைச்சின் பிரமாணங்களுக்கு முரணானதாகும்.

மேற்படி தகவல்களைப் பரிசீலித்து மேலும் நான் இவ்விண்ணப்பதாரியை அனுமதிப்பதா? என்பதை அறியத்தரவும். இவ்வாறு பதில் அனுப்பியிருந்தேன். நான் இறுதியாக "தகுதியின்மையால் அனுமதிக்க முடியாமைக்கு வருந்து கிறேன்" என எழுதியிருக்கலாம். ஆனால் என் அனுபவமின்மை காரணமாக அப்படி எழுதாமல் விட்டுவிட்டேன்.

சிலர் மேலிடத்தில் நல்ல பெயர் எடுப்பதற்காக கீழே உள்ளவர்களின் மனோநிலையை மதிப்பதில்லை. எனது பதிலைக் கண்டதும் கல்விப்பணிப்பாளர் தொலைபேசி மூலம் நெருக்கத் தொடங்கிவிட்டார். சில சந்தர்ப்பங்களில் அதிகூஷ்டமோ ஆண்டவனோ கை கொடுத்து உதவுவதுண்டு. அவ்வாறே இக்கல்விப் பணிப்பாளர் சடுதியாக யாழ்ப்பாணத்திலிருந்து மாற்றலாகிச் சென்றுவிட்டார்.

திரு.எஸ்.சிவநாதன் அவர்கள் கல்விப்பணிப்பாளராகப் பொறுப் பேற்றார். ஆனால் இப்புதிய பணிப்பாளர் எப்படிப்பட்டவர். எப்படிப்பட்ட பிரச்சினை யைக் கிளப்பப்போகிறார் என மனம்

பதைபதைத்தது. நான் சரியான நிலையில் நின்ற போதும் மனம் பக்குவப்படாமையினால் என்னால் இப்பிரச்சினையை எதிர்கொள்ளக் கஷ்டமாக இருந்தது. பொறுத்திருந்து பார்ப்போமென இருந்த வேளையில் பதிவுத்தபால் ஒன்று கடுகதியாக என்கைக்கு வந்தது. நெஞ்சு படபடத்தது.

உயர்கல்விப்பிரதி அமைச்சரினால் எனக்கு நேராக எழுதப்பட்ட கடிதம் தான் அது. அதில் பிரதி அமைச்சர் குறிப்பிட்டிருந்தார்.

"நிரூபன் என்ற மாணவனை உமது பாடசாலையில் சேர்ப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்கவும், எனது வேண்டுகோளின்படிதான் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் இம்மாணவனை உமது கல்லூரியில் அனுமதிக்கும்படி வேண்டியுள்ளார். மாணவனைச் சேர்த்துவிட்டு எனக்கு அறியத்தரவும்."

இக்கடிதம் கிடைத்ததும் நான் ஒருசில நிர்வாகிகளுடன் கலந்தாலோசித்தேன். அவர்கள் பணித்த வேண்டுகோளை நிறைவேற்றும்படி கூறினார்கள். ஒரு பாடசாலை அதிபர் கடமையாற்ற வேண்டிய சூழல் அவர்களுக்கு விளங்கவில்லை என நான் நினைத்துக் கொண்டேன். ஓர் அதிபர் சமூகத்தால் மதிக்கப்படக் கூடியவராக தன்னை வளர்த்துக்கொள்ள வேண்டும். சமூகத்தின் ஆதரவைப் பெறக்கூடியவராக இருத்தல் வேண்டும். சரியென்று பட்டதற்குச் சார்பாகக் குரல் கொடுக்க வேண்டும். இந்த மாணவனுக்கு யாரோ ஒருவர் மூலம் அரசாங்க அமைச்சர் ஒருவர் மீது செல்வாக்குப் பிரயோகிக்கக்கூடியதாக இருப்பதால் ஒரு பாடசாலையின் அதிபர் பணிந்து கொடுக்க வேண்டுமா? பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், சமூகம் என்ன நினைப்பர்? இத்தகைய சிந்தனையுடன் சில நாட்களைக் கழித்தேன் என்றாலும் மனம் அமைதியற்றிருந்தது.

புதிய கல்விப்பணிப்பாளரைச் சந்தித்து அவர் என்ன கூறுகின்றார் என அறிவோமெனச் சென்றேன். நடந்தவற்றை அவருக்கு விளக்கி நான் முந்திய கல்விப் பணிப்பாளருக்கு எழுதிய கடிதத்தின் பிரதியையும் அமைச்சரின் கடிதத்தையும் காட்டினேன். திரு.எஸ். சிவநாதன் அவர்கள் சிந்தித்து விட்டுக் கூறினார்... "அந்த மாணவனைச் சேர்க்க வேண்டாம்" எனக்கோ உள்ளம் குளிர்ந்தது. அதிபரின் நிலையை உணர்ந்த ஒரேயொரு கல்விப் பணிப்பாளர் அவர் என நினைத்துக் கொண்டேன். அந்த அளவில் அவர் நிற்கவில்லை. ஒரு கடிதமும் எனக்கு விலாசமிட்டுத்தந்தார். அதில் கூறியிருந்தார்.... "உங்கள் 30.06.1980 கடிதம் சம்பந்தமாக நிரூபன் தரம் 11 (ஆண்டு 12) இல் அனுமதிப்பதற்குத் தகுதியற்றவர் என அறியக்கூடியதாக உள்ளது. நீங்கள் தரம் 11 இல் வெற்றிடங்கள் இல்லை என்றும் கூறியுள்ளீர்கள். எனவே அவனை அனுமதிக்க வேண்டாம்".

இக்கடிதத்தை வாசித்ததும்

நன்றிப்பெருக்கால் என்னுள்ளம் கசிந்தது. வகுப்பில் வெற்றிடங்கள் இல்லை என்ற கூற்றினை நான் கூறாதபோதும் அக்கடிதத்தில் அவர் அதைச் சேர்த்தமை அவர் எவ்வளவு தூரம் ஓர் அதிபரை காப்பாற்ற முன்வந்துள்ளார் என்பதைத் துலாம்பரமாக்கியது. முன்னைய கல்விப் பணிப்பாளருக்கு எவ்வாறு பதில் எழுதியிருந்தேனோ அதேபோல் பிரதி அமைச்சருக்கும் எழுதும் படியும் அவர் ஆலோசனை கூறினார். மேலும் பதிலில் குறிப்பிட்ட விடயங்கள் சம்பந்தமான அமைச்சின் சுற்று நிருபங்களைத் தேடிப் பார்க்கும்படியும் கூறினார். நானும் கல்விப்பணிப்பாளருக்கு எழுதிய பதில் போலவே பிரதி அமைச்சருக்கும் 23.07.1980 இல் பதில் அனுப்பியிருந்தேன். ஆனால் மேலதிகமாக பின்வருவனவற்றைக் குறிப்பிட்டிருந்தேன்.

1. "கல்விப்பணிப்பாளர் 27.07.1980 திகதியிடப்பட்ட கடிதம் மூலம் இம்மாணவன் தரம் 11 இல் சேர்ப்பதற்கு தகுதி அற்றவன் எனக் கூறியுள்ளார்.
2. தரம் 11 (ஆண்டு 12) இல் வெற்றிடங்கள் இல்லை.

இத்துடன் பிரச்சினை முடிந்ததாக ஆறுதலடைந்தேன். ஆனால் 03.08.1980 இல் மீண்டும் ஒரு திகிலூட்டும் கடுகதிக் கடிதம் அதனை அப்படியே தருகின்றேன்.

அதிபர்,<br>**கொக்குவில் இந்துக் கல்லூரி,**<br>**கொக்குவில்.**

# பொ.நிரூபன் தரம் 11 அனுமதி

"நானும் உயர் கல்விப் பிரதி அமைச்சரும் மேற்கூறப்பட்ட மாண வனை உமது பாடசாலையில் அனுமதிக்கும்படி கேட்டிருந்தோம். இந்த மாணவன் தனிப்பட்ட பரீட்சார்த்தியாகத் தோற்றி க.பொ.த பரீட்சையில் சித்தியடைந்தான் என்பதை நாம் நன்றாக அறிவோம். அவருக்கு க.பொ.த (உ/த) வகுப்பில் சேர்வதற்குப் போதிய பாடங்களும் அதில் திறமைச் சித்திகளும், வயதும் உண்டு அவர் கொக்குவில் கிராமத்தையும் சேர்ந்தவர்.

இந்த மாணவனின் முன்னேற்றத் திற்குக் குறுக்கே நீர் எதற்காக நிற்கின்றீர் என்பதை என்னால் விளங்க முடிய வில்லை. நாம் இம்மாணவனுடைய பிரச்சினையை நன்றாக அலசிப் பார்த்துள்ளோம். உயர்கல்விப்பிரதி அமைச்சர் இம்மாணவனை அனு மதிக்கும் படி பணித்துள்ளார்.

இந்த விடயத்தில் நீர் பணிக்கப் பட்டபடி செயற்படாவிட்டால் நீர் எமது அரசாங்கத்தையும் கட்சியையும் இக் கட்டான நிலைக்கு உட்படுத்துவதாக கருதி, இவ்விடயத்தை மந்திரிசபையில் எடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை உண்டா க்குவீர். இம்மாணவனை அனுமதித்து, இது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுத்தீர் என்பதை உடன் அறியத் தரவும்". இவ்வாறு மீன்பிடித்துறைப் பிரதி அமைச்சரினால் எழுதப்பட்டிருந்தது.

இக்கடிதம் கிடைத்ததும் சில நாள்கள் மனம் ஒரு நிலையில் இல்லை. கொள் கையை விட்டுப் பணிந்து சென்றா லென்ன ஒரு கணம் எண்ணுவதுண்டு. மறுகணம் அது தவறு என நினைப்ப துண்டு. சில நண்பர்களுக்கு இப் பிரச்சினை தெரியும். ஏதாவது வழி கண்டு பிடிக்க முடியுமா என முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். என் உள்மனமோ எனது பாடசாலையின் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டுமெனக் கூறிக் கொண்டிருந்தது. இது எனது தனிப்பட்ட பிரச்சினையல்ல. அதிபரின் பிரச்சினை. இவ்வாறெல்லாம் சிந்தித்தபடியே கல்விப் பணிப்பாளரைச் சந்திக்கச் சென்றேன். அவர் மீன்பிடித்துறை பிரதி அமைச்சரின் கடிதத்தினைப் பார்த்தார். எவ்வித உணர்ச்சியுமின்றி முன்பு எழுதிய காரணங்களையே இக்கடிதத்திற்கும் பதிலாக எழுதும்படி ஆலோசனை கூறினார். அதுதான் சரியான நிலை ப்பாடென நானும் நினைத்தேன். அவர் அந்நேரத்தில் தனக்கு எதற்கு இப் பிரச்சினை என்று இருந்துவிடாமல் எனக்கு பக்கபலமாக இருந்ததை என்னால் என்றும் மறக்க முடியாது. பணிப்பாளரின் ஆலோசனைப்படி நான் எழுதினேன். ".இவ் விண்ணப்பதாரி

நிரூபன் தரம் 11 – விஞ்ஞானப்பிரிவில் அனுமதி பெறுவதற்குத் தகுதி இல்லாதவர் என்பதனை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகின்றேன். இக்கூற்றினை பிரதேசக்கல்விப் பணிப் பாளரும் உறுதிசெய்துள்ளார். அவரின் கூற்றினையும் மீறி நான் அனுமதி வழங்குவதில் உள்ள பிரச்சினைகளை நீங்கள் உணர்வீர்களென நம்பு கின்றேன்".

"குறிப்பிட்ட மாணவனின் வளர்ச்சிக்குக் குறுக்கே எவ்வகையிலும் நிற்கும் எண்ணம் எனக்கு இல்லை என்பதனையும் அறியத் தர விரும்பு கின்றேன். தகுதியில்லா ஒரு மாண வனுக்கு அனுமதி வழங்க முடியாமை யினை அரசாங்கத்திற்கு விசுவாசமற்ற செயலென நீங்கள் குறிப்பிட்டது மிகவும் வேதனையைத் தருகின்றது......"

இவ்வாறு நான் இக்கடிதத்தினை முடித்து அனுப்புவதற்கு ஆயத்தப்படுத்தி வைத்திருந்தவேளை எனது நண்பர் ஒருவர் ஒரு நற்செய்தியுடன் வந்தார். எனது நண்பர் தனது கடமை காரணமாக யாழ்ப்பாணத்திலுள்ள சிங்கள மகா வித்தியாலயத்திற்குச் சென்ற வேளை அங்கும் எனது பிரச்சினை போன்ற ஒன்று இடம் பெற்றதாகவும் அப்பொழுது அப்பாடசாலையின் அதிபர் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுதி அவருடைய பணிப்பைப் பெற்றுள்ளா ரென்றும் அதன் பிரதி ஒன்றினையும் என்னிடம் தந்தார். நான் தயாராக வைத்திருந்த பதில் கடிதத்துடன் இப்பிரதியினையும் இணைத்து பதில் கடிதத்தில் ஒரு பிற்குறிப்பும் எழுதியிருந்தேன்.

அந்தப் பிற்குறிப்பு. "எனது நிலைப்ப ாட்டிற்குச் சான்றாகப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் நாயகத்தினால் சிங்கள மகாவித்தியாலய அதிபருக்கு எழுதப் பட்ட கடிதத்தில் இருந்து உரிய பகுதியை இங்கு தருகின்றேன்."

".1979 இல் தரம் 11 இல் உள்ள மாணவர்களை 1980 இல் தரம் 11 இற்கு அனுமதிக்கக் கூடாது. 1979 இல் தரம் 11 இல் உள்ள மாணவர்கள் 1981 இல் தமது க.பொ.த (உ/த) பரீட்சைக்கு முதல் முறையாகத் தோற்ற வேண்டும். எனவே ஒருவர் ஒரு துறையிலிருந்து பிறிதொரு துறைக்கு ஒரு வருடம் முடிந்த பின் மாறமுடியாது".

இக்கடிதத்தின் பின் இப்பிரச்சினை முற்றுப் பெற்றது.

# தண்டனையும் பரிகாரமும்

"இதுகள் பிள்ளையளா? பெரிய பள்ளியென்ற பெயர் தான் ஒழுக்கம் கிடையாது ஆசிரியர் பழக்கியுள்ள பழக்க வழக்கம் இது தானா?" மேல்மாடியில் இளநிலைப் பொதுத்தேர்வை மேற் பார்வை செய்த வெளிப்பாடசாலை ஒன்றைச் சேர்ந்த ஆசிரியை பதற்றத் துடன் இவ்வாறு இரைந்தபடி மாடிப்படி வழியே கீழ்நோக்கி ஓட்டமும் நடை யுமாக வருகின்றார். அதேவேளை மேல்மாடியில் ஏதோ கூச்சலிடும் சத்தம் கேட்டு ஆசிரியர்கள் ரமணியும், பாலாவும் படி வழியே மேலே சென்று கொண்டிருந்தனர்.

இளநிலைத் தேர்வின் இறுதிப்பாடம் நடைபெற்று முடிவுற்ற வேளை கூச்சல் வந்த அறையில் 8E மாணவர்கள் இருந்தனர். ஆசிரியர்கள் மேலே வருவதைக் கண்டதும் அவர்கள் சிதறி ஓட முயன்றனர். ஓரிருவர் சுவரேறித் தப்பிவிட்டனர். முப்பது மாணவர்கள் வரையில் ஆசிரியரிடம் சிக்கினர். அவர்களை இவ்விரு ஆசிரியர்களும் விசாரித்த பொழுது கூச்சல் சம்பந்தமாக எதுவும் தெரியாதென்று கூறிவிட்டனர். ஒரு சில மாணவர்களுக்குத் தண்டனை கொடுத்த பொழுது தான் அவர்கள் நடந்தவற்றைக் கூறி அதில் ஈடு பட்டவர்களையும் அடையாளம் காட்டினர்.

மறுநாள் காலையில் ஆசிரியர் பாலா முதல் நாள் நடந்தவற்றை அதிபரிடம் எடுத்துக்கூறிச் சம்பந்தப்பட்ட மாண வர்களின் பெயர்ப்பட்டியலையும் கொடுத்தார். பரீட்சை மேற்பார்வை யாளராக வந்த ஆசிரியையின் காதில் விழக்கூடியதாக இவர்கள் தரக் குறைவான வார்த்தைகளைப் பிரயோ கித்துள்ளனர். மேலும் விடைத்தாள்கள் முற்றாகச் சேகரிக்கப்பட முன் மேசை மேல் ஏறிப்பாய்ந்து வெளியே ஓடி யுள்ளனர். அத்துடன் நிற்காது மேற் பார்வை ஆசிரியை ஏதோ சொல்ல முற்பட்ட பொழுது அனைவரும் கூச்ச லிட்டுள்ளனர்.

இந்நடத்தை மிகவும் தரக் குறை வானது இழிவானது கண்டிக்கப்பட வேண்டியது. பாடசாலையின் மதிப்பை யும் பாதிக்கக்கூடியது. எனவே இதனைப் பாரதூரமான ஒரு செயலாகக் கருதித் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஆசிரியர் பாலாவும், அதிபரும் தீர்மா னித்தனர். அன்று பாடசாலைக்கு 8நு வகுப்பு ஆசிரியர் வராமையினால் அவர் வந்ததும் தகுந்த நடவடிக்கை எடுப்பதாக அதிபர் பாலாவிடம் கூறினார்.

வகுப்பாசிரியர் சிவா மறுநாள் பாடசாலைக்கு வந்ததும் அதிபர் அவரை அழைத்து நடந்தவற்றைக் கூறி விசா ரிக்கும்படி வேண்டினார். அப்போது

வகுப்பு ஆசிரியர் ஒரு சில வாரங்களுக்கு முன் அவ்வகுப்பில் நடந்த ஒரு சம்பவத்தையும் அதிபருக்கு கூறி வைத்தார். மாணவனொருவன் வீட்டிலிருந்து பாடசாலைக்கு கொண்டு வந்த ரூபா 500 களவாடப்பட்டதென்றும், களவாடியவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் பொதுவாக இவ்வகுப்பு பிரச்சினைக்குரியதென்றும் கூறினார். அதேவேளை இம்மாணவர்களில் பெரும்பாலானோர் ஆண்டு 5 புலமைப்பரிசில் தேர்வில் சித்தி யடைந்தவர்கள் எனவும் திரு.சிவா அதிபருக்கு கூறினார்.

இப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுடன் மற்றும் மாணவர்களுடனும் உரையாடிய வகுப்பாசிரியர் பிரச்சினைக்குரிய பத்து மாணவர்களையும் இனங்கண்டு மேலும் அவர்களுள் மிகத் தீவிரமாகப் பங்கெடுத்த ஐந்து மாணவர்களையும் குறிப்பிட்டு ஒரு பட்டியலைத் தயாரித்து அதனை அதிபரிடம் எடுத்துச் சென்றார். அதிபரும் வகுப்பாசிரியருமாகச் சிந்தித்து இம்மாண வர்களின் பெற்றோரை அழைத்து உரையாடுவதாக முடிவெடுக்கப்பட்டது.

இப்பிரச்சினையில் மேற்கொண்டு நடந்தவற்றை வகுப்பாசிரியரே கூறுவதனைப் பார்ப்போம். "அதிபரின் ஆலோசனையுடன் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட மாணவர்களின் பெற்றோருக்கு நாள் குறிப்பிட்டு அதிபரைச் சந்திக்கும்படி கடிதங்களை அனுப்பினேன். பத்துப் பெற்றோரில் ஒருவர் தவிர மீதி ஒன்பது பேரும் வந்து சந்தித்தனர். வராத பெற்றோருக்கு இரண்டாவது தடவை பதிவுத் தபாலில் கடிதம் அனுப்பினேன். அதன் பின் சந்தித்தார். பெற்றோரைத் தனித்தனியாக அழைத்து அதிபர் முன்னிலையில் பிள்ளைகள் விட்ட தவறுகளை எடுத்து விளக்கமாகக் கூறினேன். அவர்கள் தமது பிள்ளைகள் செய்தது தவறு தான் என்பதனை ஒப்புக்கொண்டனர். அதேவேளை சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வியைப் பாதிக்காத வகையில் விரும்பிய தண்டனையை வழங்கும் படியும் கேட்டிருந்தனர். அதி பரும் நானுமாக ஆலோசித்து அவர்களை இரு வாரங்கள் பாடசாலையிலிருந்து இடைநிறுத்தி வைப்பதாகத் தீர்மானித்தோம்.

இச்சந்தர்ப்பத்திலே இப்பிரச்சினை சம்பந்தமாக அதிபரின் சிந்தனைகளையும் அவர் எடுத்த நடவடிக்கைகளையும் அவர் மூலம் கேட்பது பயனுள்ளதாக அமையுமாகையால் அதனையும் கேட்போம். "ஒரு பிரச்சினை எப்படியோ தோன்றி விட்டது. அனுபவமுள்ள ஆசிரியரினால் அதனைத் தவிர்த்திருக்க முடியும். மாணவர்களுக்கு சிறப்பாக ஊக்கம் கூடியவர்களுக்கும் போட்டிக்குப் பெரிதும் முகங்கொடுக்க வேண்டியவர்களுக்கும், பரீட்சைகள் பெரிய மன அழுத்தத்தினைக் கொடுக்கின்றன. இறுதிநாள் அவர்கள் அடக்கி வைத்த அத்தனை சக்திகளையும் வெளிக்கொணர்வதற்குச் சந்தர்ப்பம் பார்த்துக்கொண்டிருப்பார்கள். இறுதி

நாளன்று விடையெழுதி முடித்த பின்பும், தேர்வு முடியும் நேரம் ஆகவில்லை. மேலும் முக்கால் மணித்திலாயம் விடைத்தாள்களைக் கொடுப்பதற்குக் காத்திருக்க வேண்டுமானால் என்ன விதமான நடத்தையினை மாணவர்க ளிடமிருந்து எதிர்பார்க்க லாமென்பது அனுபவப்பட்ட ஆசிரியர்க ளுக்குத்தான் தெரியும். ("நான் ஆசிரியன் நீ மாணவன் நான் சொல்வதனை நீ கேட்டே தான் ஆகவேண்டும்." என்ற கோட்பாட்டினை எல்லா ஆசிரியர்களினாலும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சாதித்துவிட முடியாது. அதற்கும் சில கெட்டித்த னங்கள் தேவை)

"இப்போது மீளவும் இப்பிரச்சி னையைப் பார்ப்போம். அதனை அசட்டையாக விட முடியாது. அதன் விளைவாக இருவார இடைநிறுத்தம், அம்மாணவர்களின் மனநிலையில் மாற்றமொன்றினை ஏற்படுத்துமா எனச் சிந்தித்தேன். 8E மாணவர்கள் மூன்றாந்தவணை விடுமுறையின் பின் பாடசாலை ஆரம்பமாகியதும் 9E வகுப்பிற்குப் பிரவேசித்தனர். பாடசாலை ஆரம்பமாகிச் சில தினங்களின் பின் 9ந வகுப்பிற்குச் சென்ற நான் பல விடயங்களைப் பற்றி அவர்களுடன் உரையாடி எனக்கும் அவர்களுக்கு மிடையில் ஒரு கருத்துப் பரிமாற்றத்தை ஏற்படுத்திச் சரியான சந்தர்ப்பத்தில் மாணவர்கள் தங்களைத் தாங்களாகவே நிர்வகிக்கும் முறை பற்றி அவர்களைக் கேட்டேன். அப்படியானால் பல பிரச்சினைகளை தீர்ப்பதும் சுலபமெனக் கூறினேன். இப்படியான ஒரு செயல் முறை ஏற்படின் அவ்வகுப்பு மாணவர்கள் அனைவரும் கூடித்தாங்களாகவே சில சட்டதிட்டங்களை வகுக்க வேண்டு மெனவும் அவற்றை நடைமுறைப்படுத்த ஒரு குழு நியமிக்கப்பட வேண்டு மெனவும் கூறினேன். "நீங்களும் இப்படி யான ஒரு செயற்பாட்டினை விரும்பு கின்றீர்களா?" என அவர்களைக் கேட்டு சிந்தித்து மறுநாள் பதில் கூறும்படி வேண்டினேன்".

"மறுநாள் இரு மாணவர்கள் 9E வகுப்பில் இருந்து வந்து என்னைச் சந்தித்தனர். அவர்கள் தங்கள் வகுப்பினை நான் கூறிய ஆலோச னைப்படி கண்காணிப்புக்குழு அமைத்து நிர்வகிக்க விரும்புவதாகக் கூறினர். நான் 9E வகுப்பிற்குச் சென்று அவர்களுக்கு ஆலோசனையாகச் சில வழி காட்டல்களை முன்வைத்தேன். ஐந்துபேர் கொண்ட ஒரு கண்காணிப்புக் குழு வினைத் தெரிவு செய்யும் படியும் மாணவர்கள் ஆற்றும் குற்றச் செயல்கள் யாவையென இனங்காணும்படியும் அதற்கு அபராதம் விதிக்கலாமெனவும் கூறிவைத்தேன். மறுநாள் அவர்கள் தயாரித்த அறிக்கையினைப் பார்த்த பின் தான் 9E வகுப்பில் இருந்த பிரச்சினைகளை விளங்கக் கூடியதாக இருந்தது. இத்தனையும் ஆசிரியர்க ளுக்கு தெரியாதிருக்கின்றது". 9E மாணவர்களினால் தயாரிக்கப்பட்ட அறிக்கை திருத்தங்கள் எவையுமின்றி

அப்படியே கீழே தரப்படுகின்றது.

பின் வரும் ஒழுங்கீனங்களும் குற்றப்பணமும் குறிப்பிடப்பட்டுள்ளன.

1. கெட்ட வார்த்தை பேசுவதற்கு – 2 ரூபா
2. கெட்ட செயல்களில் ஈடுபடுதலுக்கு–5 ரூபா
3. ஆசிரியரை அவமதித்துப் பேசினால்– 3 ரூபா
4. மாணவர் முதல்வர் கட்டளைக்குக் கீழ்ப்படியாவிட்டால் – 2 ரூபா
5. வகுப்பின் அநாவசியக் குழப்பங்களுக்கு – 3 ரூபா
6. வகுப்பில் சண்டை பிடித்தலுக்கு – 5 ரூபா
7. தண்டப்பணம் ஒரு நாளுக்குப் பிந்தினால்– 50 சதம்

"இவற்றைக் கவனிப்பதற்குப் பின்வருவோர் நியமிக்கப்பட்டுள்ளனர்". (ஐந்து பெயர்கள் தரப்பட்டுள்ளன)

இவ்வறிக்கையினை அவதானிக்கும் பொழுது ஆசிரியர்களுக்கோ மாணவர்களுக்கோ தெரியாத பல பிரச்சினைகள் அவ்வகுப்பில் உள்ளன என்பது புலனாகின்றது. நியமிக்கப்பட்ட குழு மிகச் சிறப்பாகச் செயற்பட்டது. அதிபரின் வழிகாட்டலும் கிடைத்தது. சில சமயங்களில் சகமாணவர்களிடம் இருந்து தண்டப் பணம் விதிக்கும் பொழுது எதிர்ப்புக்கள் எழுந்தன. இருந்தபோதிலும் அனைவரும் குழுவின் தீர்மானத்திற்குப் பணிந்தனர். ஆரம்பத்தில் தண்டப்பணம் அதிகம் கிடைத்தது. படிப்படியாக இத்தொகை குறையத் தொடங்கியது. எனவே பிரச்சினை குறையத் தொடங்கி விட்டதென்பதே அர்த்தமாகின்றதல்லவா?

காலப்போக்கில் இவ்வகுப்பு மாணவர்களில் நல்ல பல மாற்றங்களை அவதானிக்கக் கூடியதாக இருந்தது – கற்றலில் நாட்டம், கீழ்ப்படிவு, ஒழுக்கம், பாடசாலைச் செயற்பாடுகளில் ஒத்தாசை போன்றவற்றைக் கூறலாம். சிறப்பாக அவர்கள் ஒரு பூந்தோட்டத்தையே பாதுகாப்பதையும் இங்கு எடுத்துக் கூறலாம்.

# ஆசிரியர்களின் தகைமையிலேயே முன்பள்ளிக் கல்வியின் வெற்றி தங்கியுள்ளது

எமது சமுதாயத்தில் முன்பள்ளிக் கல்வி பற்றிய விழிப்புணர்வு உருவாக் கியுள்ளமையைக் காணக்கூடியதாக இருக்கின்றது. உள்ளூரில் இடம் பெயர்ந்து வசிக்கும் நலன்புரி நிலையங்களில் கூட முன்பள்ளிகள் அமைக்கப்பட்டு பிள்ளைகள் அங்கு செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது. ஆனாலும் அரசாங்கப் பாடசாலை களுக்கிடையில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகளும் சமனற்ற நிலைகளும் முன்பள்ளி களுக்கிடை யிலும் காணக்கூடிய தாக அமைந் துள்ளன.

முன்பள்ளிகளுக்கு அரசாங்கத்தின் நிதி உதவி எந்தவகையிலும் கிடைப்ப தில்லை. இந்நிலையில் இப்பாடசா லைகள் முழுக்க முழுக்கப் பெற்றோரின் பங்களிப்பில் தான் இயங்கிவருகின்றன. பெற்றோரின் உதவி எந்தளவுக்கு உயர்வானதாகவுள்ளதோ அந்தளவிற்கு முன்பள்ளியின் தரமும் உயர்வாகக் காணப்படும்.

அரசசார்பற்ற நிறுவனங்களும் சிறிதளவு இப்பாடசாலைக்கு உதவுவ தனையும் இங்கு குறிப்பிட வேண்டும். முன்பள்ளி ஆசிரியர்களைப் பற்றி எழுதும் போது ஒரு விடயத்தை நாம் கருத்திற்கொள்ள வேண்டும். பாடசாலை ஆசிரியர்களைப் போல் தராதரத்தினை மட்டும் வைத்துக்கொண்டு ஒருவரை முன்பள்ளி ஆசிரியராகத் தெரிவுசெய்ய முடியாது. அவருக்குப் பல விசேட குணாதிசயங்கள் அமைதல் வேண்டும். இவற்றை முக்கியமாகப் பாலர் மீது ஒரு தாய்மை உணர்ச்சி இயற்கையாகவே இருத்தல் வேண்டும். அவ்வாறு இருந்தால் தான் ஆசிரியர்களுக்குச் சகிப்புத் தன்மையும் பாலர் மீது அன்பும் உருவாகும். முன்பள்ளிச் சூழலும், பாலர்களுக்கு உகந்ததாக அமையும். அவர்களும் தங்கள் நேரத்தை மகிழ்ச்சிகரமாகவும் பலனுள்ள வகை யிலும் பயன்படுத்தலாம்.

மேலும் முன்பள்ளி ஆசிரியர்கள் பாலர் உளவியல் சம்பந்தமாக அறிவினைப் பெற்றிருத்தல் அவசியம். பாலர் பாடசாலையில் உள்ள பிள்ளைகள் அவர்களின் ஆசிரியர்களின் பேச்சினை தேவவாக்காக் கொள் வார்கள். எனவே இவ்வாசிரி யர்கள் தங்கள் பேச்சிலும் நடத்தையிலும் மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும்.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 85 பதிவு செய்யப்பட்ட முன்பள்ளிகள் உள்ளன. அவற்றில் எழுந்தமானமாக 17 பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டு அவற்றிலுள்ள 41 ஆசிரியர்கள் ஓர் ஆய்வுக்குட்படுத்தப்பட்டனர். அவ்வாய் விலிருந்து எடுக்கப்பட்ட சில தகவ ல்களின் படி இரு ஆசிரியர்கள் மட்டும்

க.பொ.த (உ/த) இல் சித்திபெற்றுள்ளனர். மேலும் இரு ஆசிரியர்கள் மட்டுமே முன்பள்ளி கல்வி டிப்ளோமா பயிற்சியினை அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனங்களினூடாகப் பெற்றுள்ளனர். மீதி ஆசிரியர்கள் போதிய கல்வித் தகைமையோ அல்லது ஒழுங்கான பயிற்சியோ பெறாதவர்களாகக் காணப்படுகின்றனர். இருந்தபோதிலும் இவ்வாசிரியர்கள் பலரும் அனுபவம் மிக்க மூத்த ஆசிரியர்களின் கீழ் தங்கள் கற்பித்தலை ஆரம்பித்து அவர்களிடமிருந்து பெற்ற அனுபவம், ஆற்றல் ஆகியவற்றுடன் தங்கள் கடமையினை நிறைவேற்றுகின்றனர் என்றே கூறலாம். இவ்வாசிரியர்கள் ஆற்றும் சேவை மகத்தானது. உண்மையிலேயே சமுதாயத்திற்கு ஒரு சேவையாகத்தான் அவர்கள் செயற்படுகின்றனர். இந்நிலையில் இவ்வாசிரியர்களது வாண்மையை முறையான வழியில் விருத்தி செய்ய அவர்களிடமிருந்து பயனைப் பெற்றும் சமுதாயம் முன்வரவேண்டும்.

# ஒழுங்கற்ற அகச் சூழலிலே.....!

ஆசிரியர்களை அரவணைத்து நல்ல ஆலோசனைகளை வழங்கி அவர்களின் பணியைச் சரியான பாதையில் நெறிப்படுத்தும் ஆற்றல் அதிபரிடம் இருக்க வேண்டும். சொந்த கோபதாபங்களை பெரிதுபடுத்தாமல், மாணவர்களின் மேம்பாட்டிற்காகத் தம் ஒத்துழைப்பை முழுதாக வழங்கும் மனப்பாங்கு ஆசிரியர்களிடம் இருக்க வேண்டும். தை 95 விளக்கு இதழில் "சம்பவக் கற்கையின்" உயர் பயன் பற்றிய கட்டுரை பிரசுரமாகியிருந்தது. ஒருவருடைய வாழ்வில் இடம்பெற்ற சிக்கலான நிலைமையிலிருந்து நாம் பெற்றுக்கொள்ளும் அனுபவக்கல்வியே சம்பவக் கற்கை.

ஒரு பாடசாலையின் கவின்நிலை (Climate) என்பது அப்பாடசாலையின் ஆசிரியர்களுக்கிடையேயும், ஆசிரியர்களுக்கும் நிர்வாகத் திற்குமிடையேயும் நிலவுகின்ற தொடர்பு முறையின் தரத்தையும் நெருக்கத்தையும் சாரந்ததாகவே பெரும்பாலும் அமையும். பாடசாலையின் கூட்டுமுயற்சியும் ஏனைய ஆக்கச் செயற்பாடுகளும் முன்னெடுத்துச் செல்லப்படுவதோ அல்லது மனக்கசப்பிற்கும் பிரிவினைக்கும் வழிவகுக்கும் நிலைப்பாடு உருவாகுவதோ இத்தொடர்பு நிலையிலேயே தங்கியிருக்கின்றது. பூசல்கள் உருவாகும் போது அவை பெரும்பாலும் மாணவர்களையும் சென்றடைவது விரும்பத்தக்கதாக ஒரு நிலையாகும். ஆசிரியர்களின் மன உளைச்சல்கள் எவ்வாறு செயற்படுகின்றன என்பதைப் பாடசாலை ஒன்றில் நடைபெற்ற ஒழுக்காற்றுச் சபைக் கூட்ட நடவடிக்கைகள் நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

பிரபல கல்லூரி ஒன்றின் உயர்தர மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்ச்சியிலும் இராப்போசன விருந்திலும் கலந்துகொள்வதற்கு அக்கல்லூரியின் கணிதப்பிரிவு மாணவர்கள் இணங்கவில்லை. அதனால் எழுந்த நிலைமையை ஆராய்வதற்காக ஒருநாள் பாடசாலை முடிவடைந்தவுடன் ஒழுக்காற்றுச் சபைக் கூட்டம் நடைபெற்றது. கல்லூரி திரு.கந்தசாமி, பிரதி அதிபர் திரு. மணியம், பகுதித்தலைவரும் கணித ஆசிரியருமான திரு.செல்லத்துரை, இரசாயனவியல் ஆசிரியர் திரு.பரமேஸ்வரன், உடற்பயிற்சி ஆசிரியர் திரு.கணேசன், உயர்தர மாணவர் ஒன்றியப் பொறுப்பாளர் திரு.பாலா, உயிரியல் ஆசிரியர் திரு.நித்தியானந்தன் ஆகியோர் கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

திரு.கந்தசாமி (அதிபர்) : இன்னொரு கூட்டம் நடைபெறவுள்ளது. சச்சரவின்றிச் சுமூகமாக நிறைவுபெற வேண்டும். எப்பொழுது கூட்டம் முடிவு பெறும் என்று ஏங்கிக் கொண்டே இருக்க வேண்டி

யுள்ளது. அடுத்தவாரம் நடைபெறவுள்ள உயர்தர மாணவர் ஒன்றியத்தின் இராப்போசன விருந்தினை பகிஷ்க ரிக்கப் போவதாக கணிதப்பிரிவு மாணவர்கள் கூறியதாக அறிகின்றேன். மேற்கொண்டு எடுக்க வேண்டிய நட வடிக்கை பற்றி நாம் இங்கு ஆராய வேண்டி யுள்ளது. திரு.பாலா இந்த விடயம் சம்பந்தமாக முழுவிபரத்தையும் கூறுங்கள்.

திரு.பாலா பொறுப்பாசிரியர் : (இந்த வருடம் தான் என்னிடம் இப்பொறுப்புத் தரப்பட்டது. என்னை அவமானப்படுத்து வதற்காகச் செல்லத்துரை சந்தர்ப்பம் பார்த்துத் தீர்த்துக் கட்டிவிட்டான் போலிருக்கின்றது).

உயர்தர வகுப்பில் நெடுங்காலமாக கணித, உயிரியல் ஆசிரியர்கள், மாணவர்களுக்கிடையே சிற்சில போட்டி மனப்பாங்கும் பூசல்களும் நிலவி வந்துள்ளமையை நாம் அறிவோம். அதற்குச் சிலர் தூபம் போட்டு வந்துள் ளனர். மாணவர் தலைவர் தெரிவில் ஏற்பட்ட சில கசப்புணர்வுகள் தான் இன்றைய பகிஷ்கரிப்புக்குக் காரணம். இவற்றினைத் தீர்ப்பதற்கு உதவும் வண்ணம் சம்பந்தப்பட்ட வகுப்புகளின் வகுப்பு ஆசிரியர்களையும் பாட ஆசிரியர்களையும் வேண்டியிருந்தேன். ஆனால் எதுவும் சரிவரவில்லை.

திரு.கணேசன் – உடற்கல்வி ஆசிரியர் : (அதிபர் என்னை வைத்து காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை வேலை வாங்குபவர். நல்லாய்க் கொடுக்க வேண்டும்) நான் இப்பாடசாலையின் பழைய மாணவன். எனது மூதாதையர் இப்பாடசாலைக்கு காணி வழங்கியுள்ளனர். எந்த மாணவனுக்கும் தன்னிச்சையாகக் கட்டுப் பாடின்றி நடப்பதற்கு அனுமதிக்க முடியாது. விருந்தில் பங்குபற்றாத மாணவர்கள் பாடசாலையிலிருந்து நீக்கப்பட வேண்டும் அல்லது மற்ற மாண வர்களும் அவர்களைப் பின்பற்று வார்கள்.

திரு.கந்தசாமி அதிபர் : (இது என்ன தலையிடி) நாம் மற்றவர்களினுடைய கருத்துகளையும் கேட்போம். திரு.செல் லத்துரை உங்களுடைய கருத்தைக் கூறுங்கள்.

திரு.செல்லத்துரை (கணித ஆசிரி யர்) : (பாடசாலை விட்டால் வீடு செல்வ தில்லை – தங்களுடைய தலையிற்தான் பள்ளிக்கூடம் உண்டு என்ற நினைவு பாலாவுக்கும் பரமேஸ்வரனுக்கும். பின்நேரங்களில் அதிபருடன் நின்று எங்களுக்கெல்லாம் அள்ளி வைப் பார்கள். இருந்தாலும் பாலா என்னைச் சமாதானம் செய்து தரும்படி கேட்டு விட்டார். சரிவந்தால் எனக்குப் பெருமை தான். சரிவராவிட்டாலும் எனக்கு மகிழ்ச்சி தானே) திரு.பாலா என்னை வேண்டிக் கொண்டதற்கு இணங்க நான் கணித வகுப்பு மாணவர்களுடன் வற்புறுத்திக் கதைத்தேன். அவர்கள் இணங்கவில்லை. நாம் அவர்களை அவர்கள் பாட்டிற்கு விடுவது தான்

நல்லதென நினைக்கின்றேன். (பரமேஸ்வரன் காட்டிய கெட்டித்தனத்தை நான் முறியடித்தது ஒருவருக்கும் தெரியக் கூடாது)

திரு.பரமேஸ்வரன் (இரசாயனவியல் ஆசிரியர்) : இரு நாட்களுக்கு முன் நான் கணித மாணவர்களுடன் கதைத்தேன். அவர்கள் எனது வாதத்தை ஏற்றுக் கொண்டதாகத் தெரிந்தது. சாதகமான பதிலை எதிர்பார்த்திருந்தேன். ஆனால் கைகூடவில்லை. (செல்லத்துரை தன்னுடைய விளையாட்டு எனக்குத் தெரியாதென்று நினைக்கின்றார். அவர் வேண்டிச் சம்மதிக்காத மாணவர்கள் நான் கேட்டுச் சம்மதிப்பதை அவர் விரும்ப வில்லையாம்) இருந்தாலும் அவர்கள் மனதில் ஒரு மாற்றம் தெரிகின்றது. முதலில் விருந்தினை நடத்துபவர்கள் மீது கோபம் காட்டிக் குறையும் கூறியவர்கள் இப்பொழுது பங்குபற்றாமைக்கு வெவ்வேறு காரணங்கள் கூற முற்படுகின்றனர்.

திரு.கந்தசாமி (அதிபர்) : இங்கு சமூகமளித்த எல்லோரது அபிப்பிராயங்களையும் அறிய விரும்புகின்றேன். சேவை மூப்பும் அனுபவமுள்ள திரு. நித்தியானந்தனுடைய கருத்தையும் கேட்போம்.

திரு.நித்தியானந்தன் (உயிரியல் ஆசிரியர்) : அனுபவத்துக்கு மரியாதை கொடுக்கும் காலமல்ல இது. இளஞ்சந்ததியினர் தங்களுக்கு எல்லாமே தெரியுமென்று நினைக்கின்றனர். இது ஆரம்பத்திலேயே தீர்க்கப்பட்டிருக்க வேண்டிய பிரச்சினை. உயிரியல் மாணவர்கள் சரியாகத்தான் நடந்துள்ளனர். பொறுப்பாசிரியர் எம்முடன் ஆலோசித்திருந்தால் எல்லாம் நல்லபடி நடந்திருக்கும். (பாலாவுக்கு எல்லாம் தெரியுமென்ற கர்வம் இது நல்ல பாடம்) இப்பொழுது காலம் கடந்து விட்டது போல் தெரிகின்றது. கடுமையான நடவடிக்கை எடுத்தாற்தான் பின்னால் வருபவர்களும் இவ்வாறு இருக்க மாட்டார்கள். (இது பாலாவை மேலும் பிரச்சினைக்குள்ளே காலை வைக்கச் செய்யும்).

திரு.கந்தசாமி (அதிபர்) : பிரதி அதிபரின் கருத்துக்களையும் நாம் கேட்போம். திரு.மணியம் (பிரதி அதிபர்) : (இந்த மனுஷன் என்னையும் பிரச்சினைக்குள் மாட்டினால் இவர்களைக் கொண்டு பின்பு ஒரு வேலையும் செய்விக்க முடியாது. தனிய முறிய வேண்டி வரும்). இது ஒரு சிக்கலான பிரச்சினையாக உள்ளது. நன்றாக யோசித்துத்தான் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். நாம் மீண்டும் ஒரு முறை கூடித் தீர்மானம் எடுப்பது நல்லது போல் தெரிகின்றது.

திரு.கந்தசாமி (அதிபர்) : இப்பொழுது நாம் எல்லோருடைய அபிப்பிராயங்களையும் கேட்டாகி விட்டது. இக்கலந்துரையாடலிலிருந்து நாம் அறியக்கூடியது, கணித வகுப்பு மாணவர்கள் விருந்தில் பங்குபற்றும் சாத்தியமில்லை என்பது, அடுத்து இம்மாணவர்கள் மீது ஒழுங்கு

நடவடிக்கை எடுக்கும்படி சிலர் அபிப்பிராயம் கூறியுள்ளீர்கள். அதனைப் பற்றி பிரதி அதிபரின் ஆலோசனைப்படி பிறிதொருமுறை கூடித் தீர்மானிப்போம். (பெரிய சுமை இறங்கியது போல இருக்கின்றது).

இக்குழுக்கூட்டத்திலே ஆரோக்கியமான தொடர்பு முறைகளைக் காணமுடியவில்லை. கலந்துரையாடல் பயனுள்ளதாக அமையவில்லை. பிரச்சினையைச் சரியாகவும் திருப்தியாகவும் விளங்கவும் விளக்கவும் சரியான நெறிப்படுத்தலின் அடிப்படையில் உறுதியான ஒரு தீர்மானத்தை எடுக்கவும் இக்குழுவால் முடியவில்லை. காரணம் என்ன? பயன்தரு தலைமைத்துவத்தை வழங்கக்கூடிய ஆற்றலை அதிபர் வளர்த்துக் கொள்ளவில்லை. நன்மை தருகின்ற ஒரு பொது இலக்கை எட்டுவதற்கு அந்தரங்க சுத்தியுடனும் விட்டுக்கொடுப்புடனும் ஒத்துழைக்கும் குழுவாக இயங்குவதற்கு வேண்டிய பயிற்சியினை இவ்வாசிரியர்கள் பெற்றுக் கொள்ளவில்லை. தத்தமக்கிடையேயிருந்த பகைமை பூசல்களின் அடிப்படையிலேயே ஒவ்வொருவரும் தத்தம் கருத்துக்களை வெளியிட்டனர். விளைவு......? குழு தன் குறிக்கோளிலிருந்து தவறிவிட்டது.

# தனியார் கல்வி நிறுவனங்கள் சூழ்நிலைக்கேற்ப பாடசாலைகளுடன் இணைந்து செயற்படலாம்

இன்று அதிபர்களின் நிலை பரிதா பத்துக்குரியது. மாணவர்களின் கல்வியில் பாதிப்பு ஏற்படாத வகையில் பாடசாலையைச் செயற்படுத்துவதற்காக அதிபர்களில் பலர் எதிர்நீச்சல் போட வேண்டியுள்ளது. இந்நீச்சல் எவ்வளவு காலத்திற்குச் சாத்தியமாகும் என்பதே அடுத்த வினா. இங்கு நான் குறிப்பிடுவது ஆசிரியர் இன்றிக் காணப்படும் வகுப்பறைகள், அதனால் மாண வர்களுக்கு ஏற்படும் பாதிப்பு. இந்நிலை அதிபரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற் பட்டது. சாதாரணமாக ஆசிரியர் தமது சொந்த லீவினைப் பயன்படுத்துவதை நான் இங்கு குறிப்பிடவில்லை.

அரசாங்கப் பாடசாலைகள் வருடத்தில் 190 நாட்களுக்குக் குறையாமல் நடைபெறும். ஆனால் ஆசிரியர்கள் எடுக்கும் சொந்த லீவு வேறு வழியின்றி பாடசாலை நேரத்தில் நடத்தப்படும். இணைப்பாடச் செயற்பாடுகள் தவணைப் பரீட்சைகளும் விடைத்தாள் மதிப்பிடுதலும், சீரற்ற காலநிலை போன்றவற்றினால் 60 – 70 நாட்கள் வரை கற்பித்தல் நடந்து முடியாதுள்ளது.

எனவே ஏறத்தாழ 170 நாட்களில் கற்பித்து முடிக்க வேண்டிய பாட விதானத்தை 125 நாட்களில் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. இதனால் விரைவாகக் கற்பிக்க வேண்டியுள்ளது.

ஆசிரியர்கள் பாடசாலையில் சேவையாற்றும் அதே வேளையில் அவர்கள் தங்கள் தொழில்சார் வளர்ச்சியினையும் பெற அதிபர்கள் உதவ வேண்டும். இதற்கு எந்த அதிபரும் தடையாக இருக்கக் கூடாது. வெளி வாரிப்பட்டப் படிப்பு, வார இறுதி ஆசிரியப் பயிற்சி நெறிகள் போன்ற பல சந்தர்ப் பங்கள் ஆசிரியர்களின் தொழில்சார் விருத்திக்கு உண்டு. இதில் சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள் தங்கள் வேலை முடிந்தால் போதும் பாடசாலைகள் எக்கேடு கெட்டாலும் எமக்கென்ன என்ற நிலையில் செயற்படுகின்றன. பாடசாலை விடுமுறைகள் மொத்தமாக மூன்று மாதங்களுக்கு உண்டு. இந்த விடு முறைக்காலத்தில் பரீட்சைகளை நடாத்தலாம். அப்படி நடாத்துவார் களானால் சம்பந்தப்பட்ட ஆசிரியர் ஒரு மாதம் பாடசாலைக்கு வருகைதராது நிற்க வேண்டி ஏற்படாது.

மேலும் ஆசிரியர்கள் பாடசாலைக் கற்பித்தலில் இருந்து வேறு பதவிகளுக்கு விடுவிக்கப்பட்டுச் செல்லும் சந்தர்ப் பங்களும் பல. இவ்வாறாக விடுவிக்கப் பட்டுச் செல்லும் ஆசிரியரின் வெற்றிடம் பல மாதங்களாக நிரப்பப்படுவதில்லை. இக்காரணிகளால் 125 நாட்கள் கற்பித்தல் மேலும் சில பாடங்களுக்கு குறைகின்றது.

இழக்கும் நாட்களுக்குப் பதிலாக மேலதிக வகுப்புக்களை பாடசாலை நடைபெறாத நாட்களில் ஒழுங்கு செய்தால் அதற்கு மாணவர்கள் வரவு குறைவாக காணப்படுகின்றது. ஆசிரியர்களும் இவ்வகையான வகுப்புக்களை நடத்துவதில் ஆர்வம் காட்டுகின்றார்கள் இல்லை. போதிய வளம் உள்ள பாடசாலைகள் ஆளணிப் பற்றாக்குறையை ஓரளவு தீர்க்கக் கூடியனவாக உள்ளன. குறுகிய காலத் துக்குள் தங்கள் பணத்தில் ஆளணி யினரை அமர்த்தி நிலைமையை ஓரளவு சீராக்கலாம். நெடுநாட்களுக்கு இது சாத்தியமில்லை.

இந்தச்சூழலிலும் கூட மீதிறன் (அதிவேகம்) கூடிய மாணவர்கள் நல்ல பெறுபேறுகளைப் பெறத்தான் செய் வார்கள். அவர்களுக்கு கற்பித்தலில் மீள வலியுறுத்தல், பரிகாரக் கற்பித்தல் போன்றவை அவசியமில்லை. இருந்த போதிலும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தங்கள் உள ரீதியான தேவையினையும், போட்டியில் பிறரை முந்த வேண்டிய தேவை யினையும் பூர்த்தி செய்வதற்காக மேல திகமாகக் கற்க வேண்டிய தேவை உண்டு. இதற்காக அவர்கள் தனியார் கல்வி நிறுவனங்களை நாடிச் செல்ல வேண்டி ஏற்படுகின்றது. பெரும்பாலான மாண வர்கள் அதிவிவேகிகள் (மீதிறன் கூடிய வர்கள்) என்ற பிரிவில் அடங்க மாட்டார்கள். இவர்களுக்குப் பரிகாரக் கற்பித்தல், மீள வலியுறுத்தல் போன்ற கற்பித்தல் யுக்திகள் கையாளப்படல் வேண்டும். கற்பித்தல் நேரம் போதாமையினால் இந்த யுக்திகளை பாடசாலையில் முற்றுமுழுதாகக் கை யாள முடியாதுள்ளது. எனவே இம்மாண வர்கள் தங்கள் தேவையினைப் பூர்த்தி செய்யும் நோக்கிற்காக தனியார் கல்வி நிலையங்களை நாடுகின்றனர்.

தனியார் கல்வி நிறுவனங்களும் இப்பொழுது செயற்படும் முறையில் இம்மாணவர்களுக்கு அதிகபலன் அளிக்க முடியாது. பயனுள்ள வகையில் இவை இயங்க வேண்டுமானால் அவற்றிலும் பல மாற்றங்கள் உருவாக் கப்படல் அவசியம்.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களுடன் தனியார் கல்வி நிலை யங்களைப் பற்றி உரையாடும்போது ஜப்பானில் அவற்றின் நடைமுறை பற்றிக் கூறினார். அங்கே தனியார் கல்வி நிறுவனங்கள் பாடசாலைகளுடன் இணைந்து செயற்படுவதாகவும் அவை பாடசாலைகளின் குறைநிரப்பு நிறு வனங்களாக இயங்குவதாகவும் அவர் தெரிவித்தார். மேலும் பாடசாலை களுக்கும், தனியார் கல்வி நிறுவனங்க ளுக்கும் இடையே அங்கு நல்ல உறவு முறை இருந்து வருவதாகவும் குறிப் பிட்டார்.

இது ஒரு மிகச்சிறந்த முறை எனத் தென்படுகின்றது. இன்றைய சூழலில் எமக்கு நன்றாகப் பொருந்தக்கூடிய ஒரு முறை இதுவாகும். நாம் இதனைப் பரீட்சார்த்தமாகவேணும் செயற்படுத்திப்

பார்க்கலாம். இப்படியான ஒரு அமைப்பிலே மாணவர்கள் கற்கும் போது கூடிய பயனைப் பெறமுடியும். மாணவர்களில் ஒருசாரார் தனியார் கல்வி நிறுவனங்களுக்குப் போக வேண்டிய நிலை இருப்பின் அவர்கள் பூரண பயன்பெறுவதற்கு அவற்றை சீரமைப்பது அவசியம். தனியார் கல்வி நிலையங்கள் இயங்கும் தற்போதைய நிலையில் அவை அதிக பயனை அளிக்க முடியாது. எனவே முதற்படியாக பின்வரும் மாற்றங்களையாவது நடைமுறைப் படுத்தல் அவசியமாகின்றது.

- பாடசாலை ஆசிரியர்கள் தமது வகுப்பில் கற்கும் மாணவர்களை தனியார் கல்வி நிலைய வகுப்பில் அனுமதியாதிருத்தல். ஆசிரியர் தனது வகுப்பில் பூரண கவனம் எடுத்திருந்தால் – தனது பொறுப்பில் உள்ள மாணவர்கள் பால் தனது கடமையினைச் சரிவரச் செய்திருந்தால் – மாணவன் வேறு ஸ்தாபனங்களுக்கு கற்கச் சென்றிருக்கத் தேவையில்லை. எனவே தமது வகுப்பு மாணவனை தமது தனியார் கல்வி நிலைய வகுப்பில் அனுமதித்தால் அது ஆசிரியரின் தகாத தன்மையினைக் காட்டுகின்றது.
- வகுப்பில் மாணவர் தொகையினைக் குறைத்தல். 30 பேருக்கு மேற்படாத வகுப்புகளே சிறந்தவை. ஆசிரியர் மாணவர்களுக்கிடையேயான தொடர்பு, நல்ல உறவு முதலியவை கற்றலுக்கு தேவை என்பதனை எந்த நல்லாசிரியரும் அறிவர்.
- தகுதிவாய்ந்த ஆசிரியரை மட்டும் கற்பித்தலுக்கு அமர்த்தல்.
- பாடசாலைச் செயற்பாடுகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் மாறாகச் செயற்படாதிருத்தல். உதாரணமாக பாடசாலைகளில் நாம் செயல் முறைக் கற்பித்தலை வலியுறுத்தது கின்றோம். ஆனால் தனியார் கல்வி நிலையங்களில் ஆசிரியர்கள் செய்முறை அவசியமில்லை என்ற நிலைப்பாட்டினை எடுத்துரைக்கின்றனர்.
- பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களின் தனியார் கல்வி நிலையக் கற்பித்தல் நேரத்தைக் கட்டுப்படுத்தல், ஓய்வின்றி தனியார் கல்வி நிறுவனங்களில் கற்பிக்கும் பாடசாலை ஆசிரியர்கள் பாடசாலை நாட்களில் லீவு எடுக்கி ன்றனர். பாடசாலை வகுப்பிலும் சிலர் ஓய்வு எடுக்கி ன்றனர்.
- தனியார் கல்வி நிறுவனங்களை பாடசாலைகளுடன் இணைத்து அவற்றின் குறைநிரப்பு நிறுவனங்களாக அவற்றைச் செயற்படுத்தல். எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு மாணவனுக்கு மேலதிகக் கற்பித்தல் தேவைப்படும் போது தனிப்பட்ட முறையில் ஓர் ஆசிரியரிடம் கற்பிப்பதே சிறந்தது. இது சாத்தியப்படாத வேளையில் ஒருசில மாணவர்கள் ஒன்று சேர்ந்தால் ஓர் ஆசிரியரிடம் கற்கலாம்.

# முன்பள்ளிக் கல்வியின் அவசியம் பெற்றோரால் உணரப்பட வேண்டும்

முன்பள்ளியில் தயார்ப்படுத்தப் படாத பிள்ளைகள் பாடசாலையில் சிறப் பான கல்வி பெற முடியாத துர்ப்பாக்கிய நிலையில் காணப்படுகின்றனர். எனவே கல்வி வலயங்களிலும் முன்பள்ளிக்கென தனியான உதவிக்கல்விப் பணிப்பாளர் நியமிக்கப்பட்டு இம்முன்பள்ளிகள் மெரு கூட்டப்படுகின்றன. எனவே பெற்றோர் கள் தமது பிள்ளைகள் எதிர்காலத்தில் சிறந்த சமூகச் சிற்பிகளாக உருவாக பூரண ஒத்துழைப்பைக் கல்விச் சமூகத்திற்கு வழங்க வேண்டும். இது ஒரு பத்திரிகைச் செய்தி. இச்செய்தி முன்பள்ளிகளின் முக்கியத்துவத்தைக் கோடிட்டு காட்டுகின்றது.

ஒரு மனிதனின் பிறப்பிலிருந்து இறப்பு வரையான உடல், உள வளர்ச்சிப் பாதையில் முன்பள்ளிப் பருவம் மிகவும் முக்கியமான காலகட்டமாகும். மேலும் வீட்டுச் சூழலில் வளர்ந்த பிள்ளை முதல் முறையாக வீட்டை விட்டு வெளியேறி முன்பள்ளிக்குச் செல்கின்றது. எனவே முன்பள்ளி ஆசிரியர் பிள்ளையின் தாயின் அந்தஸ்தில் இருக்க வேண்டும். தாயின் நடிபங்கை ஏற்கும் முன்பள்ளி ஆசிரியர் அதற்கான பக்குவம் அடைந்தவராக இருத்தல் அவசியம். எனவே ஒரு முன்பள்ளி ஆசிரியரின் முக்கியத்துவம் பாடசாலை ஆசிரிய ரிலும் பார்க்க பன்மடங்கு கூடிய தாகும். முன்பள்ளி ஆசிரியர் கல்விசார் அறிவிலும் பயிற்சியிலும் முன்னிலை வகித்தல் அவசியமாகும்.

தமிழர் புனர்வாழ்வுக்கழக வெளியீடான "முன்பள்ளிகள் சமூக முன்னேற்றத்திற்கான நுழைவாயில்" எனும் கையேட்டின் தகவல்படி வடகீழ் மாகாணத்தில் 2004 ஆம் ஆண்டில் 2721 முன்பள்ளிகளில் 4507 ஆசிரியர்கள் 73,354 பாலகர்களுக்குக் கல்வி யூட்டியுள்ளனர். அதேவேளை யாழ் மாவட்டத்தில் முன்பள்ளிகளின் எண் ணிக்கை 621, ஆசிரியர் தொகை 1010, மாணவர் தொகை 15,346 எனவும் தரப்பட்டுள்ளது. மேலும் இக்கைநூலில் முன்பள்ளிகள் சம்பந்தமான முக்கிய தேவைகள் பலவும் எடுத்து கூறப்பட்டு ள்ளன. அவற்றில் சிலவற்றை மட்டும் இங்கு குறிப்பிடுகின்றேன். முன்பள்ளி ஆசிரியர் வேதனம், முன்பள்ளிகளில் விளையாட்டு முற்றம் அமைத்தல், ஆசிரியர் வாண்மை விருத்திப் பயிற்சி வழங்கல், பெற்றோர்களுக்கு வீட்டை அடிப்படையாகக் கொண்ட ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பயிற்சி வழங்கல், முன்பள்ளிகளில் கிணறு, மலசலகூடம் அமைத்தல் என்பனவாகும். இத்தேவைகளைப் பார்க்கும் பொழுது பெரும்பாலான முன்பள்ளிகள் பின் தங்கிய கிராமங்களில் காணப் படுவது புலனாகின்றது.

இக்கிராமங்களில் காணப்படும் சனசமூக நிலையம், கிராம முன்னேற்றச் சங்கம் போன்றவற்றின் ஆதரவில் அவற்றின் மண்டபத்தில் க.பொ.த (சா.த) பரீட்சையில் கூட சித்தியடையாத பெண் பிள்ளைகளை ஆசிரியர்களாகக் கொண்டு அக்கிராமப் பிள்ளைகளின் முன்பள்ளி அமையும். பெற்றோர் மாதாமாதம் ஆசிரியரின் தொண்டுக்காக சிறுதொகைப் பணம் செலுத்த வேண்டுமென அறிவுறுத்தப்படுவர். ஆனால் பெற்றார்களுக்கு முன்பள்ளிச் சிறார்களின் கல்வியின் முக்கியத்துவம் தெரிவதில்லை. எனவே கிரமமாகப் பணம் செலுத்த மாட்டார்கள். ஆசிரியருக்கு மாதம் ரூபா 500 தேறுவதே கஷ்டம்.

இக்கட்டுரையாளருக்குப் பின்தங்கிய நிலையிலுள்ள பத்துப் பதினைந்து முன்பள்ளிகளுடன் கடந்த நாலைந்து வருடங்களாக இருக்கும் நெருங்கிய தொடர்பினால் அவை பற்றிய பட்டறிவும் உண்டு. பிள்ளைகளிடம் ஆசிரியருக்குரிய கொடுப்பனவை வற்புறுத்திக் கேட்டால் பெற்றோர் பிள்ளையை முன்பள்ளிக்கு அனுப்ப மாட்டார்கள். பிற்பாடு ஆசிரியர் வீடு தேடிச்சென்று பிள்ளையை அழைத்து வரவேண்டி வரும். ஆசிரியர் வலியுறுத்தி பெற்றோரிடம் மாதச் சம்பளம் கேட்ட ஒரு சந்தர்ப்பத்தில் முழுப்பிள்ளைகளையுமே பள்ளிக்கு அனுப்பாது பெற்றோர் மறித்து விட்டனர். இறுதியில் அப்பாடசாலை பிள்ளைகள் இல்லாமையினால் மூடப்பட்டது. எனவே கல்வியின் முக்கியத்துவத்தை அறியாத பெற்றோரிடமிருந்து ஆசிரியர் சம்பளத்திற்குக் கிரமமாகப் பணம் வசூலிப்பது கல்லில் நாருரிப்பது போல் தான் இருக்கும்.

இது ஒருபுறமிருக்க பள்ளிக்குப் பிள்ளைகளின் வரவும் ஒழுங்காக இருப்பதில்லை. அத்துடன் முன்பள்ளிச் சூழலும் வசதிகளும் கற்றல் கற்பித்தலுக்கு ஏதுவாக அமைவதில்லை ஆசிரியர்களைப் பொறுத்தவரை அவர்களின் அடிப்படைக்கல்வித்தகைமை போதியதாக இல்லை. அதனால் பலரும் அவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சியினை, அறிவுறுத்தல்களை கிரகித்துக் கொள்ளக்கூடிய ஆற்றல் அற்றவர்களாகக் காணப்படுகின்றனர்.

மொத்தத்தில் பல முன்பள்ளிகளின் ஒவ்வாத சூழலும், பௌதீக வளக்குறைவும், வசதிகளின்மையும் மற்றும் ஆசிரியர்களின் வேதனக்குறைவும் அவர்களின் அடிப்படைக் கல்விக்குப் போதாமையும் அவர்களை விரக்தி நிலைக்கு இட்டுச்செல்கின்றது. போதாக் குறைக்கு பெற்றோர்களின் அக்கறையின்மையும் ஆசிரியர்களின் விரக்தியை மேலும் கூட்டுகின்றது. இக்குறைகள் நிவர்த்தி செய்யப் பட்டாலே முன்பள்ளி ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடனும், ஈடுபாட்டுடனும் வேலை செய்வார்கள். இப்போதைக்கு ஆசிரியர்களிடமிருந்து பயனைப் பெறவேண்டுமாயின் அவர்கள் அண்மிய மேற்பார்வைக்குள்ளாக்கப்பட்டு வழிகாட்டப்படல் வேண்டும்.

# உயர்திரு. அ. பஞ்சலிங்கம் அவர்களின் வளர்ச்சியும் வாழ்வும்

| | | |
|---|---|---|
| பெயர் | : | அப்பாத்துரை பஞ்சலிங்கம் |
| பெற்றோர் தந்தையார் | : | சதாசிவம் அப்பாத்துரை |
| தாயார் | : | அப்பாத்துரை இரத்தினம்மா |
| பிறந்த திகதி | : | 08.01.1936 |
| பிறப்பிடம் | : | கொக்குவில் |
| வதிவிடம் | : | கோப்பாய் வீதி, உரும்பிராய், இலங்கை |
| மனைவி | : | திருமதி. பரமேஸ்வரி பஞ்சலிங்கம் (B.Sc, ஓய்வுபெற்ற ஆசிரியை) |
| பிள்ளைகள் | : | திரு. அ. நிரஞ்சன் (பொறியியலாளர், கனடா)<br>திருமதி. நிருபா அருந்தவம் (B.Sc, Dip.in.Edu, ஆசிரியை, கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரி) |
| கல்வி | : | ஆரம்பக்கல்வி : யா/கொக்குவில் இந்துக் கல்லூரி<br>இடைநிலைக்கல்வி : யா/கொக்குவில் இந்துக் கல்லூரி<br>க.பொ.த உயர்தரக்கல்வி : யா / யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி. |
| பட்டப்படிப்பு | : | விஞ்ஞான பட்டதாரி, இலங்கை பல்கலைக்கழகம், பேராதனை - 1958. |
| தொழிற்தகைமை | : | 1992: இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் II<br>1985: கல்வித்திட்டமிடல் மற்றும் நிர்வாக சர்வதேச டிப்ளோமா<br>திட்டமிடல் மற்றும் நிர்வாகத்துறைக்கான தேசிய நிறுவகம் - புதுடில்லி<br>1982: இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III<br>1972: பட்டப்பின் கல்வி டிப்ளோமா, பேராதனைப் பல்கலைக்கழகம் |
| தொழில்வாழ்வு | : | 2005 : முகாமையாளர், NIIT, யாழ்ப்பாணக் கிளை<br>2004: வருகை விரிவுரையாளர்,<br>உயர் தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம். (1996 இலிருந்து)<br>2000 : வருகை போதனாசிரியர், ஆங்கிலமொழிக் கற்பித்தல் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (1996 இலிருந்து)<br>2000 : வருகை விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் கல்லூரி (இன்றுவரை) |

1996: அதிபர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி. (1991 இலிருந்து)

1991: அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி. (1980 இலிருந்து)

1990: பாடசாலை முகாமைத்துவ ஆலோசகர். (1985 இலிருந்து)

1972 : விசேட பதவிநிலை ஆசிரியர்.

1958 : விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர்

கல்வித்துறைக்கான சேவை 2002 : தலைவர், யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்

1991 – 1997 : அங்கத்தவர், விஞ்ஞானபீட கௌரவ உறுப்பினர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

அறிவுப் பரவலாக்க சேவை : கல்வி பற்றிய பத்திரிகை எழுத்தாளர், யாழ் தினக்குரல் நாளிதழ். ஏராளமான கல்வியின் சமகாலப் பிரச்சினைகள் பற்றிய கட்டுரைகள்,

சஞ்சிகைகளிலும், பருவ இதழ்களிலும் எழுதியமை.

சமுதாய சேவை : 2009 : தலைவர், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், யாழ்ப்பாண மாவட்டம்.

2010 : தலைவர், கொக்குவில் இந்துக் கல்லூரி, பழைய மாணவர்சங்கம் (முன்பு 2007/2008, 1996/1997)

2008 : உறுப்பினர், இலங்கை யுத்த நிறுத்த கண் காணப்புச்சபை (2002 இலிருந்து)

2007: தலைவர்,உரும்பிராய் ஞானவைரவர் கோவில் கல்வி நம்பிக்கை நிதியம் பின்தங்கிய 17 முன்பள்ளிகளின் மேம்பாட்டுக்காக மாணவர்களுக்கு சீருடையும், ஆசிரி யர்க்கு சம்பளமும், கற்பித்தல் துணைச்சாதனங்களும் வழங்கி வருதல்)

2005 : தலைவர், யாழ்ப்பாண றோட்டரிக் கழகம் (1998 / 1999)

2000 : தலைவர்,உரும்பிராய் ஞானவைரவர் கோவில் பரிபாலனசபை (இன்று வரை)

2000 : போசுஷகர், வளர்மதி நிறைவாழ்வகம். (இன்று வரை)

1998: உபதலைவர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

1995: தலைவர், வடமாகாண அதிபர் சங்கம். (1993 இலிருந்து)

1995: தலைவர்,யாழ்ப்பாணப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் (1994 இலிருந்து)

1980:தலைவர், யாழ்ப்பாண பாடசாலைகளின் விளையாட்டுச் சங்கம்

# பவளவிழாச் சபையின் நிறைவுரையாக..



ஓய்வு நிலை அதிபர் உயர்திரு.அ.பஞ்சலிங்கம் அவர்களுக்கு கொக்குவில் பவளவிழாச் சபை அமைத்தபோது அதிபரின் பெருமைகளை எழுத்து வடிவிடில் முன்வைக்க பஞ்சகலசம் என்ற மலர் ஒன்று வெளியிடவேண்டும் என்ற மலர் ஒன்று வெளியிடவேண்டும் என்ற விருப்பம் எமக்குத் தோன்றியது இவளவு அழகாகவும் நேர்த்தியாகவும், மலர்வெளிவர எமக்குத் துணைசெய்தவர்களுக்கு நான் நன்றிகூறாமல் இருக்கமுடியாது.

இம்மலர் சிறப்புறுவதற்கு ஆசிச்செய்திகளையும், வாழ்த்துரைகளையும், கட்டுரைகளையும், கவிதைகளையும் வழங்கி பவளவிழா நாயகரின் சமய, சமூக கல்விப்பணிகளும், அவர்அவர் மனிதத்துவமும் பூரணமாக எல்லோர் மனதிலும் நிலைபெற உதவியோருக்கு நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளோம்.

இம்மலரில் ஆசிச்செய்திகள், வாழ்த்துச்செய்திகள் மட்டுமன்றி விழா நாயகனால் எழுதப்பட்ட கட்டுரைகளும் இடம்பெறவேண்டும் என பவளவிழாச் சபை விரும்பியமையினால் அக்கட்டுரைகளை இனைத்துக்கொள்ள விழா நாயகனுக்கு நன்றி கூறகடமைப்பட்டுள்ளோம்.

இம்மலரை அழகுற உருவாக்கவேண்டும் என்ற பெருவிருப்பை நிறைவேற்றித் தந்த அன்ரா டிஜிற்றல் பிறிண்ட் நிறுவனத்தாருக்கு எமது நன்றிகள் உரித்தாகட்டும். இம் மலரை மிகசிறப்பாக வடிவமைத்து எமது கையில் ஒப்படைத்த இதழ்ஆசிரியர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோன்.

இ.செல்வராசா
இதழ்ஆசிரியர் பவளவிழாச் சபை

# பவளவிழா அழைப்பிதழ்

**இடம்**

பஞ்சலிங்கம் கேட்போர் கூடம்
கொக்குவில் இந்துக் கல்லூரி

**காலம்**

08.01.2011 சனிக்கிழமை
பிற்பகல் 03.00 மணி

**தலைவர்**

பேராசிரியர் க.தேவராஜா
தலைவர், பவளவிழாக்குழு (பீடாதிபதி முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம், யாழ்.பல்கலைக்கழகம்)

அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

விழாக்குழுவினர்.

அதிபர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
திருமதி. செ.சகாதேவன்
அதிபர், கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
திரு.பொ.கமலநாதன்
முன்னாள் அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி
வைத்திய கலாநிதி ப.நந்தகுமார்
யாழ். போதனா வைத்தியசாலை

**இசையமுதம்**

"நாதஸ்வரச்சக்கரவர்த்தி என்.கே பத்மநாதனின் புதல்வி"
திருமதி.கனகாம்பரி சிவநேஸ்வரநாதன்
ஆசிரியை, யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி.

**'பஞ்சகலசம்' நூல் வெளியீடு**

வெளியிடுபவர்: பேராசிரியர் மா.சின்னத்தம்பி
தலைவர், சட்டத்துறை யாழ்.பல்கலைக்கழகம்.

**விழா நாயகன் கௌரவிப்பு**
**ஏற்புரை**
**கலை நிகழ்ச்சி - வாத்தியப் பிருந்தா**
**நன்றியுரை**
**இராப்போசன விருந்து**

# நிகழ்ச்சி நிரல்

**விழா நாயகனை ஊர்வலமாக அழைத்துவரல்**

**மங்கள விளக்கேற்றல்**

**தேவாரம்**

**மங்கள இசை**

'நாதஸ்வர இசையருவி கலாபூஷணம்'

V.K.பஞ்சமூர்த்தி K.P. குமரன்

'சங்கீத சக்கரவர்த்தி, நாதஸ்வர இசை ஞானி'

P.S. பாலமுருகன்

"கானகலா வித்வமணி" ஈ.குகன் (தவில்)

**வரவேற்பு நடனம்**

கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவிகள்

**வரவேற்புரை**

திரு.அ.அகிலதாஸ் அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி

**ஆசியுரைகள்**

ஸ்ரீலஸ்ரீ.சோமசுந்தர பரமாச்சரிய சுவாமிகள்

நல்லை ஆதினம்

சிவஸ்ரீ.சிவதாசக் குருக்கள்

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய தேவஸ்தானம்

**வாழ்த்துரைகள்**

திரு.இ.இளங்கோவன் செயலாளர்,

கல்வி பண்பாட்டு,விளையாட்டுத்துறை

அமைச்சு, வடமாகாணம்.

திரு.ப.விக்னேஸ்வரன்

மாகாணக கல்விப் பணிப்பாளர்,

திருமதி. அ.வேதநாயகம்

வலயக் கல்விப்பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

றோட்டேறியன். ஈ.சரவணபவன்

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்



## ஓய்வு நிலை அதிபர் உயர்திரு.அ.பஞ்சலிங்கம் அவர்களின் பவள விழாச்சபை செற்குழு உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| **தலைவர்** | : | பேராசிரியர் .க.தேவராஜா (பீடாதிபதி, முகாமைத்துவ கற்கைகள், வணிகபீடம், யாழ்.பல்கலைக்கழகம்) |
| **செயலாளர்** | : | திரு.லயன்.இ.செல்வநாதன் (சமாதான நீதிவான்) |
| **பொருளார்** | : | திரு.இ.பிருதிவிராஜ் (இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்) |
| **உறுப்பினர்கள்** | : | திரு.அ.அகிலதாஸ் (அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி) |
| | | திரு.இ.சிறிக்காந்தன் (உரிமையாளர், காவேரி மருந்தகம் கொக்குவில்) |
| | | திரு.செ.சண்முகசுந்தரம் (சமாதான நீதிவான்) |
| | | திரு.ஞானதிருக்கேதீஸ்வரன் (ஆசிரியர், யாழ். மத்திய கல்லூரி) |
| | | திரு.சி.செந்தில்குமரன் (ஆசிரியர் யா/ வேலனை சரஸ்வதி வித்தியாலயம்) |










ANDRA PRINTERS K.K.S Road, Kondavil.
T.P: 021 222 8929